914

914

ஸம்புடம் 11
ஸஞ்சிகை 6

ஸ்ரீ:

நந்தன ௵
ஆனி ௴

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्यतूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0-4-0

JUNE 1952
VOL 11 NO 6

199534

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ... 123
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

2. சென்றுகாண்டற்கரியகோயில் ... 125
[ஸ்ரீ. உப. பாதூர் தூப்புல் ராமபத்ராசார்ய ஸ்வாமி, வ்யாகரண சிரோமணி, வேதாந்த வித்வான், ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.]

3. நிபுணசிந்தனம் ... 130
[ஸ்ரீ. உப. வித்வான் ரா. பத்மநாபாசார்ய ஸ்வாமி, வேதாந்த சிரோமணி, தெற்கு தெரு.]

4. ப்ரபத்தியின் பெருமை ... 134
[ஸ்ரீ. உப. வித்வான் அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீஅஹோபில மடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

5. செய்திகள் ... 138

6. நம்முடைய ஸமூஹவாழ்க்கையின் நிலைமை ... 142
[ஸ்ரீ. உப. C. R. க்ருஷ்ணமாசார்யார் கடலூர்.]

7. சாஸ்த்ராநுபந்தம்
(9) ஸமீக்ஷாதோஷசிகித்ஸா
(10) ப்ரகீர்ணகம்
(11) நஞ்ஜீயரும் ஸ்ரீஸூக்தபாஷ்யமும்

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 } நந்தன ௵ ஆனி ௴ { ஸஞ்சிகை 6

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇

𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।

𑌶𑍍𑌰𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌵𑌸𑍁𑌧𑌾𑌤𑌾𑌰𑌕𑌂 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।

𑌶𑍍𑌰𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸுவம் விதகூடீவஷவீம்— இப்படியா, அப்படியா என்று முன்கூறியபடி தர்க்கிக்கும்படி, நவஸோரொஹதி—எழும்பமாட்டாதோ, (அப்படிச் செய்யும் எல்லா நினைப்புகளையும் ஓய்ந்து ஒடுங்கச்செய்யும்), ஸொஹம் ஸூஸெ யொஷய:—அத்தனை மஹிமையுடைய ப்ரபோதோதயனெனும் பாத்ரம் நான். (நான்தான் இந்த நாடகத்திற்கு உத்தேச்யமான முக்ய பலம்) இதையெல்லாம் ஸ்வாமி இங்கே திருவுள்ளத்தில் கொண்டு, நம் ஸித்தாந்தத்திற்கு அநுகுணமாகவும், ச்ருதிகளுக்கும் அநுகுணமாகவும் இங்கே 'ஸங்கல்பன்' என்னும் ஸூர்யனுடைய ப்ரபாவத்தை வர்ணிக்கிறார்-அங்கு போலிங்கும் நாடகபாத்ரமே தன் ப்ரபாவத்தை வர்ணிக்கிறார். யஸ்நிவிஸ்மயநீயஸூரநி - ஆச்சர்யத்திற்கு காஷ்டையான எவர்(எந்தஸங்கல்பர்). 'யஸ்நி ஸுஹ்ருதிதெ' என்று சந்த்ரோதயத்தில் போலவே இங்கும். 'கிம்கிம்' என்று அங்கு அத்புதம் வர்ணிக்கப்பட்டது. இங்கே தெளிவாக விஸ்மயகாஷ்டையென்று கூறப்படுகிறது. அங்கே இப்படியா? அப்படியா? என்று விகல்பித்துக் கேள்விகளுக்கு ஒன்றுமேயில்லையென ஆச்சர்யரஸவர்ணநம். ஈஷாகூ-ஈஷத்தேனும், உந்நிதெ-திறந்துவெளிப்படுகையில், (பகவானுடைய திருக்கண்களின் கடாக்ஷமே இந்த ஸங்கல்பம் என்றும் ஸூசகம்) 'ஸுஹ்ருதிதெ' என்று அங்குள்ளதின்ஸ்தானத்தில் உந்நிதெ-(திறக்கப்படுகையில்) என்று இங்குள்ளது. முன்பு அவ்யக்தமாயிருந்து மூடியிருந்ததுபோலிருந்த ஆசை உத்புத்தமாகித்திறக்கப்படுகையில். 'ஸுஹ்ருதிதெ' என்பது தானுகஉதிப்பதைச்சொல்லலாம். இங்கே பகவானுடையவருளால் தொடங்கப்படுவதைக் காட்டுகிறது. நெகயா விஸ்ருஷ்தி-பலப்ரகாரங்களாக ஸித்திக்கின்றன. (அங்குபோல ஓடிப்போனதெப்படியென்று பேசும் பல விகல்பப்ரகாரங்களல்ல.) அங்கே ஓடிப்போன ப்ரஸ்தாவம். இங்கே ஸித்திக்கும் ப்ரஸ்தாவம். ஸுஸ் ஸிதாஸிதஸ் ஜமத:—இந்த ஜகத் பொய்யல்லவென்கிறோம். இது ஸதஸத நிர்வசநீயமல்ல. ஆனால் இதை நல்லதென்று நாங்கள் சொல்லமாட்டோம். இது 'ஸிதாஸிதம்' என்போம். 'ஸதஸத்' என்பதற்குப் பதிலாய் 'ஸிதாஸிதம்'. ஸ்வாமியான பகவானுக்குச் சேஷமென்று தெளிந்தால் அநுகூலமே-ஸிதமே இல்லையேல் ப்ரதிகூலம்—அஸிதம். ப்ரஹ்மாத்மகமான ப்ரபஞ்சம் ஸ்பாவத்தில் ஆநந்தத்தன்மையுடையதே. நம்முடைய வினைகளால் துக்கமாகவும் அல்பஸுகமாயும் தோன்றுவது. நம்முடைய கர்மத்தால் இவ்வளவு அஸிதம்போல விபரீதமாக அநுபவிக்கப்படுகிறது. இப்படி ஸிதாஸிதம் என்பது எங்களுக்கு இஷ்டமே. இப்படி ஸ்பாவவிபரீத அந்யதாநுபவம் கர்மவினையால் விளைவதே. ஸமஹாவவமஹாஷய:—உலகத்திற்கு ஸ்வர்க்காதி ஸுகங்களும், சாச்வத மோக்ஷாநந்தமும் ஸித்திப்பது ஸங்கல்பத்தால்தான். ஈச்வர ஸங்கல்போதயத்தால்தான். (எவர் உதிப்பதால் எல்லா ப்ரயோஜநங்களும் உலகத்திற்கு ஸித்திக்கின்றனவோ அந்த) ஸெளஸ: ஸொஹம் ஸஜஸ்ஸ ஸூயெஷாஷய:—உலகத்தையாளுமீச்வரனுடைய ஸங்கல்பமென்னும் ஸூர்யோதயமாகிய நான்—அப்படிக்கொத்த அவ்வளவு மஹிமையையுடைய நான். அவ்வளவு மஹிமையும் என்னுடையதல்ல. ஈச்வரனுடையது. ஸெளஸ:—என் மஹிமை ஈசனுடையது. 'நான்' 'ஸுஹம்' என்று பேசும் நீர் யார்? நானும்:ஸுஹம்' என்பதும் ஸெளஸ:—ஈசனுடையவனே நானென்பது தனித்துளனல்லேன். 'அவனுடையவன்' என்றும் அப்ருதக்ஸித்திஸம்பந்தத்தால்தான் நானுளனென்று ஒருவாறு பேசலாம். ஸங்கல்பத்தின் உதயத்தை ஸூர்யோதயமென்கிறீரே அது எப்படிப் பொருந்தும்? ஸம்ஸாரராத்ரி

இருட்டை ஒழித்து அநாதிகாலமாய்த் தூங்கும் ஜீவனை எழுப்புவது இந்த ஸங்கல்பஸூர்யோதயம். 'அநாதிமாயயா ஸுப்த: யதா ஜீவ: ப்ரபுத்யதே' இந்தச்ருதியை, அடுத்தாப்போல்மேலே-'அஜமநித்ரம் அஸ்வப்நம்' என்கிற ச்லோகத்தில் விஸ்தரிக்கப்போகிறார். இந்த ஜீவனுடைய தூக்கம் அநாதி. இவனுக்கு அஜ்ஞாநமாகக் கழிந்த அநாதிகாலம் இவனுக்கு ஒரே தூக்கஅவஸ்தைதான். முழுவதும் நித்ரை செய்யும் ஸுஷுப்திதான். இவன் ஜாக்ரத்தசையும் அஜ்ஞாநநித்ரைதான். 'யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே:' என்று பகவான் இரண்டாமத்யாயத்தின் முடிவில் பாடினார். 'த்ரய: ஆவஸதா: த்ரய: ஸ்வப்நா:' என்ற ஐதரேய ச்ருதிக்கு 'மூன்று அவஸ்தைகளும் ஸ்வப்நமே. ஜாக்ரத்தில் (விழிப்பில்) காண்பதும் பொய். (ஸ்வப்நம்போல்) ஸ்வப்நத்தில் காண்பவை பொய். தூக்கத்தில் காண்பதொன்றுமில்லாவிடினும் தூங்குவதும் பொய். அது ஓர் ஸ்வப்நம் போலவே பொய் என்று அத்வைதப்பொருள். மூன்றும் அஜ்ஞாநநித்ரையே என்பது உண்மை. ஸ்வப்ந: என்பதற்கு 'தூக்கம்' 'ஸ்வப்நம் காண்கை' என்ற இரண்டுப்பொருள்களுமுண்டு. 'யுக்தஸ்வப்நாவபோதஸ்ய' என்ற கீதையில் ஸ்வப்நம் என்பதற்கு தூக்கம் என்று பொருள். அவாஸராந்த்யஸமயோத்யமாயா மஹாயாமிநீ ஸத்தாசேஷஸுஷுப்திபோதநபடு:-'வாஸரம்' என்பது பகல். பகலின் அத்யயத்தில் (முடிவில்) வருவது ஸாதாரணமான நமக்குத் தெரிந்தராத்ரி. இந்த மாயா எனும் அஜ்ஞாநராத்ரி பகல்முடிவில் வரும் ராத்ரி அல்ல. பகலிலேயும் இந்த அஜ்ஞாநராத்ரி உளது. ஸம்ஸாரமுள்ளவளவில் மூன்று அவஸ்தைகளும் இந்த ராத்ரியே. ஸம்ஸாரமுழுவதும் அநாதிகாலமாய் உண்மை ஜ்ஞாநமற்ற தூக்கமே. அது மஹாராத்ரி, காளராத்ரி. 'மாயா மஹாயாமிநீ—இது தொடக்கமற்ற மிக மிகப்பெரியராத்ரி. ஓயாத ராத்ரி. இதுவரையிலும் விடிவேயில்லாத ராத்ரி. அநாதிமாயயா ஸுப்த:-அநாதிமாயையால் தூங்கும் ராத்ரி.

இந்த தூக்கத்திலிருந்து குழந்தைகளை எழுப்புவது கோதைத்தாய் திருப்பாவை. க்ருஷ்ணனை யோகநித்ரையிலிருந்து எழுப்பிக் குழந்தைகளைக்கடாக்ஷிக்கச்செய்வது. 'நிவ்ருத்தாணவாய ஜ்ஞாநாநந்தமயாத்மநே' ஸுகமயன், ஜ்ஞாநமயன், மலமற்றவன் இப்படி இருப்பதே இவன் ஸ்வரூபம். 'ஸத்' 'சித்' 'ஆநந்தம்' என்பதில் 'ஸத்' என்பது ஒன்று தானிவனுக்கு இத்தூக்கத்திலிருப்பது. ப்ரளயகாலத்தில் அசிதவிசிஷ்டனாய், கேவலம் ஸந்மாத்ரனாய் இருப்பதுபோல, இந்த அநாதி மாயாநித்ரையிலிருப்பது. ப்ரளயநித்ரையுமிதன்நடுவில் நித்ரை. ஸத்தாசேஷஸுஷுப்தி—ஜ்ஞாநமும் ஆநந்தமும் மழுங்கி ஸத்தை மட்டும் மிகுந்திருக்கும் தூக்கம். மாயைத் தூக்கம். ப்ரஹ்மசேஷனாய் மோக்ஷத்தில் நிர்வாணமயனாயும் ஜ்ஞாநமயனாயுமிருக்கவேண்டியதற்கு நேர்விரோதம். போதநபடு:—அநாதித் தூக்கத்திலிருந்து எழுப்பி மோக்ஷப்பகலைத்தருவதில் ஸாமர்த்யமுடைய, ஸங்கல்பஸூர்யோதயன். ஈசனுடைய ஜ்ஞாநஒளியான நான். முதலங்கத்தில் முதல் ச்லோகத்திலேயே இரண்டாமடியில் 'யத்ஜ்ஞஸ்ய ஸங்கல்பஸூர்யோதய:' என்று குறிக்கப்பட்டது. இங்கே முடிவில் இந்த ஸூர்யோதயத்தின் ஸித்தியை அப்பாத்ரமேவந்து, ஈசனுடைய ஸங்கல்பஸூர்யோதயர், என்று காட்சியாகக் குறிக்கப்படுகிறது. இவருடையநிர்வஹணம்இந்நாடககார்யம்.

'பரவித்யை' என்னும் பரபக்திதேவியால் ஸந்தோஷப்படுத்தப்பட்ட ஸகலகுணஸார்வபௌமியான தயாதேவி பாரிதோஷிகம் (வெகுமதி) கொடுக்கவேணுமென்று அவளினால் நான் கட்டளையிடப்பட்டிருக்கிறேன். என்னவென்றால், என்னையே அபேக்ஷித்திருந்து என் பலத்தினாலே மஹாமோஹனை ஜயித்து விவேகால் அபிவ்ருத்திபெற்று ஸமாதி ஸித்திக்கப்பெற்ற புருஷன் (ஜீவன்) உன்னால்தான் விடுவிக்கப்படவேணும். 'அஹம் த்வா மோக்ஷயிஷ்யாமி' என்ற ஸங்கல்பமல்லாமல் வேறு ஸம்ஸாரவிடுதலைக்கு மார்க்கமில்லை. 'மா சுச:' என்று அவன் அபயப்ரதாநமில்லாமல் சோகதரணமார்க்கமில்லை. 'தப:ப்ரபாவாத் தேவப்ரஸாதாச்ச' என்று ச்வேதாச்வதரமுடிவில்

(தொடரும்)

ஸ்ரீ:

சென்றுகாண்டற்கரியகோயில்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

அந்தக் குஹையில் ஸ்ரீ அஹோபிலமடம் 6-வது பட்டம் ஷஷ்ட பராங்குசயதீந்த்ரமஹாதேசிகன் ப்ரவேசித்துவிட்டாராம். இந்த குஹைக்கும் பவநாசிநிக்கும் பூமிக்கடியில் சுரங்கவழியிருக்கிறது. வடகிழக்கிலுள்ள ஸந்நிதியில் ஆழ்வார் பாஷ்யகாரர் தேசிகன் ஸ்ரீ ஆதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன் முதலியவர்கள் எழுந்தருளியுள்ளனர். தெற்கே ப்ராகாரம் மலைமேலே உள்ளது. இங்கு மடப்பள்ளியும் அந்நசத்ரங்களும் ஸேவார்த்திகள் தங்குமிடங்களும் வஸந்தோத்ஸவமண்டபமுமுள்ளன. கிழக்குகோபுரவாயில் தாண்டியதும் பவநாசிநி படிப்படியாக ஓடிவருகிறது. வடக்கு மதிளையொட்டியே பவநாசிநி ப்ரவஹிக்கிறது. இதன்கரையில் ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன் காலக்ஷேபமண்டபம் இருக்கிறது. இது மிகப்பெரியமண்டபம். இரண்டு பத்தியாக 124 தூண்களால் கட்டப்பட்டிருக்கிறது. நீண்டு மிகவிசாலமாகவும் அதிரமணீயமாகவும் ஏகாந்தமாகவும் இம்மண்டபம் அமைந்துள்ளது.

பவநாசிநீ

அசலச்சாயாமேரு என்ற பர்வதத்தின் மத்தியில் ஸ்ரீ ஜ்வாலாந்ருஸிம்ஹன் ஹிரண்யஸம்ஹாரார்த்தமாயும், ப்ரஹ்லாதஸம்ரக்ஷணார்த்தமாகவும் ஹிரண்யகசிபுவின் க்ருஹ ஸ்தம்பத்தில் தோன்றினார். ஜ்வாலையுடன் கூடிய உக்ரமான அவருக்கு சாந்தி உண்டாகி உலகை ரக்ஷிப்பதற்காக தேவகணங்கள் மூன்றுலோகங்களிலும் ப்ரவஹிக்கும் கங்கையை அழைத்து வந்து திருமஞ்ஜநம் பண்ணிவைத்தனர். அத்தீர்த்தம் வெகு பயங்கரமாய் மேற்குநோக்கிப் பெருகுகிறது. இதன் பெருமை—'ஸர்வதீர்த்தங்களுக்குள் பவநாசிநீ மிகவும்உத்தமமானது. ஒருவன் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்திற்குப் போய், பவநாசிநியையும் ஸேவித்துவிட்டால் கோடிஜந்மங்களில்பண்ணிய பாபங்களெல்லாம் விலகி பரிசுத்தனாகிறானென்பதில் ஸந்தேஹமே கிடையாது. ஸம்ஸாரதுக்கத்தைப்போக்கி ஜநங்கள் செய்துவரும் பாபங்களை தனது தர்சந ஸ்நாநமாத்ரத்தால் நாசம்செய்து பரிசுத்தமாக்குவதால் 'பவநாசிநீ' என்று பெயர் வந்தது' என்று புராணத்தில் சொல்லப்படுகிறது. அநேகமஹரிஷிகள் இந்த பவநாசிநியில் ஸ்நாநம் செய்து இதன்கரையில் தபஸ்செய்து ஸித்தியடைந்துள்ளதாயும் இதன்பெருமையுள்ளது.

'𑌨 𑌨𑌾𑌰𑌸𑌿𑌂𑌹𑌾𑌦𑌧𑌿𑌕𑌸𑍍𑌤𑍁 𑌦𑍈𑌵𑌤𑌃 𑌨
𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌭𑌵𑌨𑌾𑌶𑌿𑌨𑍀𑌸𑌮𑌮𑍍। 𑌨 𑌶𑍈𑌲-
𑌰𑌾𑌜𑍋 𑌗𑌰𑍁𑌡𑌾𑌚𑌲𑌾𑌦𑌧𑌿𑌕𑍋 𑌨 𑌸𑌜𑍍𑌜𑌨
𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌸𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌯𑍋𑌗𑍀॥'

[ஸ்ரீந்ருஸிம்ஹனைக் காட்டிலும் உயர்ந்த தேவன் உலகில் கிடையவே கிடையாது. பவநாசிநியைக் காட்டிலும் உயர்ந்த புண்யதீர்த்தம் இல்லவே இல்லை. கருடாசலமென்கிற இந்தப்பர்வதத்தைக்காட்டிலும் ச்ரேஷ்டமான பர்வதமே கிடையாது. ப்ரஹ்லாதனைக் காட்டிலும் உயர்ந்த யோகியும் இல்லை] என்று இதன் பெருமை சொல்லப்படுகிறது.

7. க்ரோடந்ருஸிம்ஹன்

இது மேல்அஹோபிலத்திலிருந்து 3பர்லாங்கு தூரத்தில் பவநாசிநியின் கரையிலுள்ளது. மலையில் நடைபாதையாகச் செல்லவேண்டும். மலைமேல் ஒரு மண்டபமுள்ளது. இதன் உள்குஹையில்வராஹரூபியான பகவான் பிராட்டியை இடுப்பில்வைத்துக்கொண்டுலாலனம்செய்யும்ஸேவை அத்யாச்சர்யமானது. பக்கலில் லக்ஷ்மீந்ருஸிம்ஹனும் எழுந்தருளியிருக்கிறார். எதிரில் 'வராஹகுண்ட'மென்று ஓர் புண்யதீர்த்தமிருக்கிறது. இங்கு எக்காலமும் வற்றாமல் ஊற்று ப்ரவஹிக்கிறது. இங்கிருந்து கொஞ்சதூரம் சென்றதும் பவநாசிநியில் ஜலம் தெரிவதில்லை. மறைந்து பிறகு தோன்றுகிறது. இந்தப் பெருமானைப்பற்றி புராணத்தில்—'அநாதியாகிய பகவான் வேதாசலத்தின் பின்புறத்திலிருந்துகொண்டு, வராஹரூபத்தையடைந்து பத்நியாகிய பூமிப்பிராட்டியைத் தாங்கிக்

கொண்டு எழுந்தருளியிருக்கிறார். மதுஸூதனனுகிய பகவான் வராஹரூபியாக இருக்கிறார். க்ஷேத்ரங்களுக்கெல்லாம் உத்தமோத்தமமான இந்த க்ஷேத்ரம் 'வராஹக்ஷேத்ர'மெனப்படும், என்று சொல்லியிருக்கிறது.

8. மாலோலன்

இவர் க்ரோடந்ருஸிம்ஹன்ஸந்நிதியிலிருந்து 1மைல் தூரத்தில் மலைமேல் எழுந்தருளியிருக்கிறார். மற்ற ஸந்நிதிகளைவிட இந்த ஸந்நிதி கொஞ்சம் பெரியது. இங்கு ஸந்நிதி அமைந்திருக்கும் ஸந்நிவேசம் விலக்ஷணமானது. அர்த்தமண்டபமணிமண்டபங்களும், முன்னே மண்டபமும், த்வாரபாலகர்களும், கர்பக்ருஹமும் விமாநமும், கருடஸ்தம்பமும் முக்யமானவைகள். பகவான் பிராட்டி இருவரும் பரஸ்பரம் தங்களையும், பக்தர்களையும் தங்களுடைய திருக்கண்களால்நோக்குவது விசேஷம். ப்ரதக்ஷிணம் செய்ய இடமுள்ளது. இதற்கு 'லக்ஷ்மீ க்ஷேத்ரம்' என்று பெயர். இங்கு 'கநகா' என்று ஓர் நதி ப்ரவஹிக்கிறது. இங்கே பகவான் மஹாலக்ஷ்மிக்கு ப்ராதாந்யத்தை ஏற்படுத்தியதாகவும் அதுமுதல் இதற்கு லக்ஷ்மீஸ்தாநமென்றும் பெயர் உண்டானதாகச் சொல்வார்கள். ஈசான்யமூலையில் ஓர் குளம் உள்ளது. இதற்கு 'மார்கொண்டலக்ஷ்மி கோனேரி' என்று பெயர் சொல்கிறார்கள். இங்கு த்வாரபாலகர்கள் வெகு கம்பீரமான ஆக்ருதியுள்ளவர்களாக விளங்குகிறார்கள். செஞ்சுலக்ஷ்மியுடன் வில்லும் கையுமாக ந்ருஸிம்ஹன் ஸேவைஸாதிக்கிறார். கலியனும் எழுந்தருளியிருக்கிறார். இங்கு பக்கத்திலுள்ளவிடத்தில் பிராட்டியும் பெருமாளும் புஷ்பம் கொய்துகொண்டும் க்ரீடைகள் செய்துகொண்டும் இருந்ததாகக்கூறப்படும் நந்தவநமிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தவிடத்தைப்பற்றிய புராணவரலாறு—'ஸ்ரீ ந்ருஸிம்ஹரூபியாகிய பகவான் லக்ஷ்மியுடன் நித்யவாஸம்செய்யும் லக்ஷ்மீக்ஷேத்ரத்தில், எந்த மனுஷ்யர்கள் இம்மையில் ஸம்பத்தையாவது ஸ்வர்க்கத்தையாவது விரும்பி லக்ஷ்மியினிடத்தில் பக்தியுள்ளவர்களாய் அஷ்டாக்ஷரத்துடன் கூடிய ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய மந்த்ரத்தை ஹோமம்செய்து, அதின் மிகுதியான அந்நத்தை புஜித்துக்கொண்டு ஆறுமாஸகாலம் ஜபிக்கிறார்களோ, அவர்கள் ஏராளமான ஸம்பத்தையும் அல்லது விரும்பினதையும் அடைகிறார்கள்' என்றிருக்கிறது.

இந்த மூர்த்தியின் உத்ஸவர்தான் ஸ்ரீமதாதிவண்ஸடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கு ஸ்வப்நம்ஸாதித்து தானே அவருக்கு ஆராத்யகராக ஆகி 'க்ராமங்கள்தோறும் சென்று என்னை ஆராதித்து உலகம் உஜ்ஜீவிக்கும்படி செய்யும்' என்று நியமித்த எம்பெருமான். நம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் நித்யாராதநம் கண்டருளி நம்மை உஜ்ஜீவிக்கும்படி செய்பவர். நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரார்த்தமாக அஹோபிலம் எழுந்தருளியபோது இங்கு மூலஸ்தாநத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி விசேஷாராதநம் கண்டருளப்பண்ணியாயிற்று. இதற்குமுன் நாற்பதாவது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரும் இதேமாதிரி ஆராதித்தாயிற்று.

ப்ரஹ்லாதப்படி (ப்ரஹ்லாதகுண்டா)

மாலோலன் ஸந்நிதியிலிருந்து வடமேற்கே மூன்றுபர்லாங்குதூரம் மலைமேல் செல்லவேண்டும். உக்ரஸ்தம்பத்தின் கீழே இந்தவிடமுள்ளது. இங்கு ப்ரஹ்லாதந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார். ஒரு குகைக்குள் ப்ரஹ்லாதன் குருகுலவாஸம் செய்கிறார். இங்கு உயரத்திலிருந்து ஜலம் அருவியாகக் கொட்டிக்கொண்டிருக்கிறது. செங்குத்தான மலைமேலே அமைந்திருக்கிறது. இங்கு முன்புள்ள சிலாஸாஸநம் இன்னதென்று கண்டுபிடிக்கமுடியவில்லை.

9. ஜ்வாலாந்ருஸிம்ஹன்

இவர் க்ரோடந்ருஸிம்ஹன்ஸந்நிதியிலிருந்து வடகிழக்கே மூன்றுமைல்தூரத்தில் எழுந்தருளியிருக்கிறார். மலைமேல் செல்லவேண்டும். இங்கு அஷ்டபுஜங்களுடன் ஹிரண்யஸம்ஹாரம் செய்யும் கோலத்திலிருக்கிறார். லக்ஷ்மியும் ப்ரஹ்லாதனும் பக்கலிலிருக்கின்றனர். இங்குள்ள தீர்த்தமானது சிவந்துள்ளது. ஹிரண்யவதாநந்தரம் பகவான் கையலம்பியதால் இத்தீர்த்தம் சிவந்ததாகக்கூறப்படுகிறது. இங்குதான் பவநாசிநியின் உத்பத்தி. இங்கிருந்து கொஞ்சதூரம் ப்ரவஹித்தும், பிறகு மறைந்தும் வராஹகுண்டத்தருகே தோன்றியும் பிறகு மறைந்தும் அஹோபிலந்ருஸிம்ஹன் ஸந்நிதியருகே ப்ரவஹித்தும் அங்கிருந்து

பைரவகுண்டம்வரை சென்று அதில்சேர்ந்து பிறகு மறைகிறது. புராணத்தில் இப்பெருமாளைப்பற்றி-ஜ்வாலாக்ஷேத்ரம் என்னும் முக்திக்ஷேத்ரம் பிசாசு முதலிய கெடுதல்களைப்போக்கத்தக்கது. அங்கே கடினமான வ்ரதத்தோடுகூடிய அநேகரிஷிகள் ஸாவதானர்களாய் வஸித்துவருகிறார்கள். இங்கு கோடி ஸூர்யப்ரகாசமுள்ளவராயும். வஜ்ராயுதம் போலிருப்பவராயும், தம்கண்களால் நெருப்பைக் கக்குகிறவராயும், ப்ரகாசமுள்ள ஸடைகளையுடையவராயும், கூர்மையான நகங்களால் சத்ருக்களை நாசம் செய்பவராயும், பிளக்கப்பட்ட ஹிரண்யனுடைய தேஹத்தையுடையவராயுமுள்ள ஸ்ரீந்ருஸிம்ஹனைப் பஜிக்கிறோம்' என்றுள்ளது.

10. பாவந ந்ருஸிம்ஹன்

இவர் மேல் அஹோபிலம் ஸந்நிதியிலிருந்து நாலரைமைல் தெற்கிலிருக்கிறார். இங்குச் செல்வது கொஞ்சம் ச்ரமம். மிகவும் செங்குத்தாக ஒருமைல்தூரம் ஏறவேண்டும். பின்பு கரடுமுரடான ப்ரதேசத்தில் இரண்டுமைல் செல்லவேண்டும். பிறகு மரங்களடர்ந்த ஜந ஸஞ்சாரமற்ற காடுகளின் வழியாகப் போகவேண்டும். இங்கு லக்ஷ்மியுடன் ஸ்ரீந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார். உத்ஸவர் அஹோபிலந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் எழுந்தருளியுள்ளார். வேணுகோபாலன், வரதன், நவநீதக்ருஷ்ணமூர்த்திகளும் உள்ளனர். எதிரில் தனியாக ருத்ரனுக்குக் கோவிலிருக்கிறது. இங்கு அதிகமாக சதுர்த்தர்களால்ப்ரார்த்தனை செலுத்தப்படுகிறது. இதன் பக்கலில் ஓர் நதி ஓடுகிறது. இங்கு த்வஜஸ்தம்பமும் இருக்கிறது. இதனால் முன்பு இங்கு ப்ரஹ்மோத்ஸவமும் நடந்திருக்குமென்று தோன்றுகிறது. இந்த ந்ருஸிம்ஹன் ஆச்ரிதர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பவர். இந்த ந்ருஸிம்ஹனின் வைபவம்—'கருடாசலத்திற்குத் தெற்கில் 'பாவநம்' என்ற தீர்த்தமிருக்கிறது. அங்கு பகவானாகிய விஷ்ணு ந்ருஸிம்ஹரூபத்தைத் தரித்துக் கொண்டு ஸேவைஸாதிக்கிறார். அந்த பகவான் தன்னை அடைந்த ஜந்துக்களுக்கெல்லாம் வேண்டியதைக் கொடுத்துக் காப்பாற்றுகிறார்' என்று புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. இங்கும் துஷ்டம்ருகங்களின் ஸஞ்சாரம் அதிகமாக இருக்குமென்று சொல்லப்படுகிறது.

உக்ரஸ்தம்பம்

இது மேல் அஹோபிலத்திலிருந்து 4 மைல் கிழக்கே மலைமேலே செல்லவேண்டும். செங்குத்தாகச்செல்லவேண்டும். போவது ச்ரமமாகவுள்ளது. நிழல்கூடக் கிடையாது. ஜலமுமில்லை. ஓர் பெரிய மலையுச்சியில் பாறையில் இரும்பாலான ஸ்தம்பமுள்ளது. இங்கிருந்து கீழே பார்க்க பயமாயிருக்கிறது. மலை இரண்டாகப் பிளந்திருக்கிறது. ஹிரண்யனுடைய ஸ்தம்பம் என்றும் இதை இரண்டாகப்பிளந்து கொண்டு பெருமாள் ஆவிர்ப்பவித்தார் என்றும் கூறுவர்கள். இதை ப்ரதக்ஷிணம் செய்கிறார்கள். வேறு பெருமாள் முதலிய விசேஷமில்லை. சிறுகுழந்தைமுதல் கிழவர்வரை வந்து ப்ரதக்ஷிணம் செய்துபோகின்றனர்.

ப்ரஹ்மோத்ஸவம்

இதுவரை க்ஷேத்ரத்தினமைப்பு, மஹிமை இவைகளைப்பற்றிச் சொல்லப்பட்டது. இனி இங்கு நடக்கும் ப்ரஹ்மோத்ஸவம்பற்றி விஜ்ஞாபிக்கிறேன்—

இங்கு ப்ரதிவருஷமும் மாசிமாதம் சுக்ல பஞ்சமியில் ப்ரஹ்மோத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிறது. மேல் அஹோபிலத்திலும் கீழ் அஹோபிலத்திலும் தனித்தனியாக நடைபெறுகிறது. இரண்டுவேளைகளிலும் உத்ஸவம் உண்டு. இரவில் வாஹநங்களில் உத்ஸவம் நடைபெறுகிறது. இந்த உத்ஸவத்திற்கு சுற்றுப்புறமுள்ள ஜில்லாக்களிலிருந்து லக்ஷக்கணக்கான யாத்ரீகர்கள் கால்நடையாகவும், வண்டிகளுடனும், பஸ்மூலமாயும் வந்து ப்ரார்த்தனை செலுத்துகின்றனர். பாஞ்சராத்ராகமப்படி திருவாராதனங்களும் உத்ஸவாதிகளும் நடைபெறுகின்றன. உத்ஸவகாலத்தில் காட்டுக்குமத்தியில் இந்த க்ஷேத்ரம் பெரிய நகரம்போல் விளங்குகிறது. ஸகலவிதமான கடைகளும், பொருட்காட்சிகளும், கேளிக்கைகளும் இங்கு கொண்டுவரப்படுகின்றன. ஒரு நாளைக்கு 5, 6 பஸ்கள் விடப்படுகின்றன. ஸர்வவிதமான ஸர்க்கார் உத்யோகஸ்தர்களும் தங்களுடைய இலாகாவுடன் ஜனங்களுக்கு ஸௌகர்யம் செய்துவருகின்றனர். கல்யாணோத்ஸவமும் கருடோத்ஸவமும் முக்யமான உத்ஸவங்கள்.

கல்யாணமண்டபத்தில் மிகவும் ஸம்ப்ரமத்துடன் திருக்கல்யாணோத்ஸவம்நடைபெறுகிறது. இன்றும் கருடோத்ஸவத்தன்றும் விசேஷக் கூட்டம். இங்கு கருடோத்ஸவம் ஆன மறு நிமிஷமே வந்திருந்தவர்கள் அனேவரும் கடைகளுள்பட அனைத்தையும் எடுத்துச் சென்றுவிடுகின்றனர். மறுபடியும் பழையகாடும் திருக்கோயிலும் பெருமாளும் முன்போன்று விளங்குகின்றனர். மேல் அஹோபிலத்தில் உதஸவம் முடிந்த பிறகு மூன்றுதினங்கள் ப்ரஹ்மா எழுந்தருளி ஆராதிப்பதாக ஐதிஹ்யம். இந்த மூன்றுதினங்களும் மலைக்கு ஒருவரும் செல்வதில்லை. ஆராதித்ததற்கு அடையாளங்களிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

இங்கு அநேக பக்தர்கள் வந்து ந்ருஸிம்ஹனை ஸேவித்தும் அர்ச்சனை செய்தும் தங்களுடைய காணிக்கைகளைச் செலுத்தியும் க்ருதார்த்தராகிறார்கள். ஸர்வகாலமும் பஜனைகளும் ஹரிநாமஸங்கீர்த்தநங்களும் செய்யப்படுகின்றன. இங்கு யாத்ரீகர்கள் மலையில் செல்லுமிடங்களெல்லாம், 'லக்ஷ்மீந்ருஸிம்ஹா!' 'அஹோபிலேச்வரா!' என்றும் 'பாவந ந்ருஸிம்ஹா!' என்றும் நாமஸங்கீர்த்தநம் செய்து செல்லும் காட்சி உருக்கமானது. உக்ரஸ்தம்பம், பாவநன் ஸந்நிதி முதலிய இடங்களுக்கு சிறுகுழந்தைகள் முதல் வயோதிகர்வரை கஷ்டங்களைக்கூடப் பாராமல் செல்லுவது பக்தியின் மேலீட்டால்தான் என்று சொல்லவேண்டும். இங்கு பாடப்பெறும் க்ராம்யமான பாடல்முதல் உயர்ந்த பாட்டுக்களுள்பட எல்லாம் பக்திமார்க்கத்தின் சிகரங்களாக விளங்குகின்றன. செஞ்சுக்கள் எனப்படும் மலைஜாதியினர் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கும் செஞ்சுலக்ஷ்மிக்கும் நடந்த கல்யாணம்பற்றி விசேஷமாகப் பாடுகின்றனர். இப்பாட்டுக்கள் ஹரிகதைகள் போன்ற ரீதியில் பாடப்படுகின்றன. இச்செஞ்சுக்கள் ஆணும்பெண்ணுமாய் ஜோடி ஜோடியாய் பறை முதலிய வாத்யங்களுடன் இசைத்துப் பாடுகின்றனர். அநேக யாத்ரீகர்கள் பனியையும் கடும்வெய்யிலையும்கூட லக்ஷ்யம் செய்யாமல் கேட்டு மகிழ்கின்றனர். அவர்கள் கூறும் கதாஸந்தர்ப்பமாவது—'அஹோபிலத்தில் பகவான் ந்ருஸிம்ஹனாக அவதரித்த போது மஹாலக்ஷ்மியும் இங்குள்ள ஓர் செஞ்சுவிற்கு (வேடஜாதியைச்சேர்ந்தவனுக்கு) பெண்ணாக வளர்ந்துவந்தாள். இப்படி வளர்ந்துவரும் நாளில் ஒருநாள் ஸ்ரீந்ருஸிம்ஹன் காட்டில் அவளிருக்கும் வீட்டிற்குச்சென்று தன்னைக்கலியாணம் பண்ணிக்கொள்ளும்படி கேட்கிறார். அப்போது அப்பெண் 'நான் வேடஜாதியைச் சேர்ந்தவள்; உமக்கும் எனக்கும் நடையுடை பழக்கவழக்கங்கள் ஒத்துவராது. ஆகையால் மணக்கமுடியாது' என்கிறாள். இதுபற்றி பலத்த விவாதம் நடைபெறுகிறது. பிறகு 'உம்மைக் கலியாணம் செய்துகொண்டால் என்னைப்போல் வேட்டையாடவேண்டும். மாமஸம் சாப்பிடவேண்டும்' என்று இம்மாதிரி சில நிர்ப்பந்தங்களைச் சொல்லுகிறாள். பகவானும் ஸம்மதித்து ஓர்வில்லையெடுத்து மான்ஒன்றை அடித்துக்காட்டி அந்தமானையே பச்வம்செய்து செஞ்சுவுடன் புஜிக்கிறார். பிறகு செஞ்சுலக்ஷ்மியை அவளுடைய தகப்பனர் முதலியவர்கள் பெருமாளுக்குக் கலியாணம் செய்து வைக்கின்றனர். இக்கல்யாணம் மிக விசேஷமாக நடைபெறுகிறது. தேவதைகளெல்லோரும் வந்திருந்து புஷ்பவர்ஷம் வர்ஷிக்கின்றனர். பிறகு அங்கு தம்முடைய ஸ்வரூபத்தைச் செஞ்சு முதலியவர்களுக்குக் காட்டி தான் லக்ஷ்மீந்ருஸிம்ஹன் என்பதைப் பெருமாள் தெரிவிக்கிறார்'-என்பதாக உள்ளது.

இந்த செஞ்சுலக்ஷ்மியும் பெருமாளும் வேடரூபத்துடனும் வில்தாங்கி நிற்பதும், பெருமாள் கொஞ்சிவிளையாடுவதுமாக சித்திரங்களுள்ளன. இந்தக்கதையின் விபரம் 'வாஸந்திகாபரிணய'மென்கிற நாடகத்தில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கிறது.

தாஸர்கள் எனப்படும் மலைஜாதியினர் தீப்பந்தங்களைக்கட்டி அதைப் பகவந்நாமஸங்கீர்த்தநம் செய்துகொண்டே சுழற்றியும் உடம்பில் அடித்துக்கொண்டும் விளையாடுகிறார்கள். இதனால் இவர்களுக்கு உடம்பில் ஒருவித கஷ்டமுமில்லை. தீயினால் புண்களுமேற்படுவதில்லை. இவர்கள் உலர்ந்த விறகுகளைக் கட்டாக அடுக்கி அதில் நெருப்பைவைத்து நன்றாகப்பற்றி ஜ்வாலையுடன் எரியும்போது சிறு பாலர்கள் தலையிலேவைத்து மேளங்களுடன் பகவந்நாமஸங்கீர்த்தநத்துடனும் ஆடிவருகின்றார்கள்.

இதற்கு 'அக்கி ஸேவை' (அக்கி-நெருப்பு) என்று பெயர். இதனால் அவர்களுக்கு உபத்ரவமேற்படுவதில்லை. சிலர் நெருப்பை மடியில் கட்டிக்கொண்டும் விளையாடுகின்றனர். இவைகளெல்லாம் ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடத்தில் பக்திமேலீட்டால் இவர்களுக்கு ச்ரமத்தை உண்டாக்குவதில்லை. இவர்களுக்குள்ள ந்ருஸிம்ஹ பக்தி அபாரமானது.

உத்ஸவகாலங்களில் நான்கு வருணத்தவர்களுக்கும் அந்தந்த வகுப்பைச்சேர்ந்தவர்களால் அந்நசத்திரங்களும் தண்ணீர்ப்பந்தல்களும் நடத்தப்படுகின்றன. வெகுதூரத்திலிருந்து வண்டிகளில் ஜலத்தைக்கொண்டுவந்து தொட்டிகளில் நிரப்பி எல்லோருக்கும் ஜலம் கொடுக்கப்படுகிறது. அந்நசத்ரங்களில் பங்க்தியாக உட்காரவைத்து சாப்பாடு போடப்படுகிறது. ஏழைப்பிச்சைக்காரர்களிருக்குமிடம் தேடிச் சென்று அவர்களுக்குச் சாதமும் தண்ணீரும் கொடுக்கப்படுகிறது. சிலர் பக்ஷணங்கள் பொறிகடலை முதலியவைகளும் பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்துவருகிறார்கள். ஏழைகளிடமும், ஸாதுக்களிடமும் நன்மதிப்பும், கௌரவபுத்தியும் காட்டப்படுகிறது. மலைமேலும் அந்நசத்ரங்கள்மூலமாய் ஏழைகளுக்கு ஆஹாரங்கள் அளிக்கப்படுகின்றன.

இந்த உத்ஸவகாலத்தில் மிகப்பெரியதான வ்ருஷபங்களைக்கொண்டுவந்து பெரியகற்பாறையில் சங்கிலி போட்டுக்கட்டி இழுக்கச்செய்கிறார்கள். இதற்காகப் போட்டி நடைபெறுகிறது. பெரிய கலெக்டர் முதலான அதிகாரிகள் தலைமைதாங்கி வெற்றிபெற்ற மாடுகளுக்கு மெடல்களும் பரிசுகளும் வழங்குகின்றனர். இப்படியாக நடக்கும் இந்த உத்ஸவகாலங்களில் சென்று ஸ்ரீ ந்ருஸிம்ஹனை ஸேவிக்கவேண்டியது அவசியம். ஸேவிக்காதவர்கள் பாக்யமில்லாதவர்களே என்று சொல்லவேண்டும்.

முன்காலங்களிலிருந்ததாகச் சொல்லப்படுவதற்கும் இப்போது ஏற்பட்டுள்ள ஸௌகர்யங்களுக்கும்மிகவித்யாஸமுண்டு. அக்காலத்தில் அஹோபிலஜ்வரம் என்று ப்ரஸித்தமான மலேரியா ஜ்வரம் வந்துவிடுமாம். இப்போது அந்த உபத்ரவமே கிடையாது. நித்யவாஸம் கூட செய்யலாம் என்று தோன்றுகிறது. பஸ் முதலிய ப்ரயாண வஸதிகள் முன்பு குறைவு. இப்போது கோயிலுக்கு நேராக பஸ் செல்லுகிறது. மலைக்கும் ரோடு வஸதி இருக்கிறது. மலைகளிலிருக்கும் ஜலத்தாலும் தோஷங்களில்லாதபடி நல்ல ஜலவஸதிகளுமுள்ளன. ஆகையால் அவச்யம் சென்று காண்பதற்குத் தகுந்த இந்த க்ஷேத்ரத்தை ஒவ்வொருவரும் ஸேவிக்க வேண்டியது அவச்யம். இங்கு தனிப்பட்ட மனுஷ்யர்கள்கூட நடந்து செல்லமுடியாத இடங்களுக்குப் பெரியதூண்களைக்கொண்டு போய் அங்கு மண்டபாதிகளைக் கட்டியிருப்பதைப் பார்த்தால் அக்காலத்தவர்களின் பக்தியை என்னென்று சொல்வது! இங்கு சட்டப்பட்டிருக்கும் ஒரு கல்கூட இந்த மலையிலிருந்து எடுத்துக் கட்டப்பட்டதல்ல. ஒவ்வொரு சிறிய மண்டபத்தையும் ஜீர்ணோத்தாரணம் செய்வதாயிருந்தால்கூட ஆயிரக்கணக்கில் செலவு ஆகும். எவ்வளவு சொன்னாலுங்கூட நேரில்சென்றுபார்த்தால்தான் இந்த ஆச்சர்யம் விளங்கும்.

நம் ஸ்ரீ அழகியசிங்கர்கள் இவ்வருஷம் நடந்த ப்ரஹ்மோத்ஸவத்திற்கு அர்ச்சகபரிசாரகர்களையும், வேண்டிய கைங்கர்யபரர்களையும்வேதபாராயணாத்யாபகஸ்வாமிகளையும் திருவள்ளூரிலிருந்து அனுப்பிவைத்து இந்த உத்ஸவத்தை நன்கு நடத்திவைத்தனர். விசேஷ ததீயாராதனமும் பத்து தினங்களிலும் நடந்தேறியது. ஸ்ரீப்ரஹ்லாதவரதன்- வேணுகோபாலன், பரமபதநாதன், நாச்சியார் திருக்கோலங்களில் மிகவும் அத்புதமாக ஸேவை ஸாதித்தார். அடியேன் எவ்வளவு ப்ரயத்நப்பட்டாலும் சென்று ஸேவிக்கமுடியாத இந்த க்ஷேத்ரத்தெம்பெருமான்களுடைய ஸேவையானது பரமக்ருபையுடன்கூடிய ஸ்ரீ அழகியசிங்கர்களுடைய அநுக்ரஹத்தால் கிடைத்தது பற்றி அடியேனடைந்த ஸந்தோஷமளவிறந்தது. அனைவரும் சென்று சிங்கவேள்குன்றத்தானை ஸேவித்து இன்புறவேண்டுமென்று எண்ணியே அடியேன் சக்திக்கநுகுணமாக விஜ்ஞாபித்திருக்கிறேன்.

ஓங்குமலை வாழ்க! அஹோபிலம்தான்வாழ்க!!

ஸ்ரீ:

நிபுண சிந்தனம்

இவ்வுலகில் ஒருவனுக்குத் தான் இப்போது இருந்துவரும் ஸம்ஸாரபந்தநிலைமையில் வெறுப்பும், தான் அடையவேண்டிய மோக்ஷநிலைமையில் விருப்பும் உண்டாகி அவன் முமுக்ஷுவாகவேண்டுமானல் இந்நிலைமையில் உள்ள தீமைகளும் அந்நிலைமையில் உள்ள நன்மைகளும் அவனுடைய அறிவுக்கு வரவேண்டும். இதற்காகவே ப்ரஹ்மஸூத்ரகாரரான வ்யாஸபகவான் 3-வது அத்யாயத்தில் மோக்ஷார்த்தமான வித்யைகளை விசாரிக்கும் முன்பு முதலில் வைராக்யபாதத்தில் ஸம்ஸாரி ஜீவன்களுடைய அல்லல்களையும் உபயலிங்கபாதத்தில் முமுக்ஷுப்ராப்யனை ஸ்ரிய:பதியினுடைய அரும்பெரும் குணங்களையும் விசாரித்து விளக்கியுள்ளார். இந்நிலைமையிலுள்ள தீமைகளை நாம் அறிவதற்கு ‘பாம்போடொரு கூறையிலே பயின்ருப்போல்’ என்பது முதலான மங்கைமன்னன் பாடல்களும் ‘பொல்லாவாக்கையின் புணர்வினை அறுக்கல் அறு’ என்பது முதலான நம்மாழ்வார் பாசுரங்களும் உறுதுணையாய் நிற்கின்றன. மோக்ஷநிலைமையில் உள்ள நன்மைகளை ‘நலமந்தமில்லதோர் நாடு’ என்றும் ‘அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை’ என்னும் திருவாய்மொழிப் பாசுரங்கள் தெளிவிக்கின்றன.

தெருளார் மறைமுடித்தேசிகனும் இவ்வுண்மைகளை-‘ந வஸதௌ ஸௌக்யே நரகக்ருஹவாஸாதிகம் வபுஶ்ச பஹுயாதநம் நிவர்ணயிதுமீஶதே தாஞ்ஜலய: । த்ரிவிஷ்டபஸ்தவம் ததா ததவதஸ்ய தேஹிவ்யத: கிம் து ந பயாவஸரம் பவதி ரங்கதுர்யபதே ॥’ என்கிற அபீதிஸ்தவ ஸ்ரீஸூக்தியில் உபதேசித்துள்ளார். அதன் கருத்துக்களைக் கொஞ்சம் கண்டுகளிப்போம்.

எண்ணிறந்த துன்பந்தரும் நிரயமாகையால் யாவராலும் ஆக்ஷேபிக்கமுடியாதபடி துன்பங்கள் நிறைந்த நரகவாஸநிலைமை தொடங்கி, மேன்மேலும் நிரூபித்துப்பார்த்து அறிந்துகொள்ளத்தகுந்த பயம் நிறைந்த நிலைமைகள் இந்த ஸ்ரீஸூக்தியில், வரிசையாகக் கூறப்படுகின்றன. அதாவது-நவஸதௌ ஸௌக்யே நரகக்ருஹவாஸாதிகம்-ஜீவனுக்கு நரகவாஸம் கர்பவாஸம் முதலான நிலைமைகள் வாயினல் அநுவதிப்பதற்குக்கூட முடியாததான கஷ்டங்களுடன் கூடியவை. எனெனில்-ஜீவனுக்கு இந்த ஸம்ஸாரத்தில் அநாதிகாலமாகச் சேர்ந்திருக்கும் கர்மவிசேஷத்தால் நரகாநுபவமும் நேரக்கூடும். அவ்விதம் நரகவாஸம் நேர்ந்தால் அதில் இவன் செய்த பாபத்திற்குச் சிக்ஷையாகத் தீவ்ரமான கஷ்டங்களை அநுபவிப்பதற்காகவே இவனுக்கு உடல் கொடுக்கப்பட்டிருப்பதாலும், யமபடர்களால் பொறுக்கமுடியாத ஹிம்ஸைகள் செய்யப்பட்டு வாட்டப்படுவதாலும் எப்போதும் தீராத்துயரமாகவேயிருக்கும். ஆகையால் நரகவாஸநிலைமை அநுவதிப்பதற்குக்கூட பயங்கரமானது. இதன் பயங்கரநிலைமையை ‘சூதினைப் பெருக்கிக் களவினைத்துணிந்து சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவாதிரிந்த தொண்டனேன் நமன்தமர் செய்யும் வேதனைக்கொடுங்கி நடுங்கினேன்’ (திருமொழி 1–6–3) என்றும் ‘வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து’ (திருமொழி 1–6–4) என்னும் பெரியதிருமொழிப் பாசுரங்களில் நன்குகாணலாம். விஷ்ணுபுராணம் 2-வது அம்சம் 6-வது அத்யாயத்திலும் பொய்ஸாக்ஷி சொன்னவனும் ந்யாயவிரோதமாகத் தீர்ப்புச் செய்தவனும் ‘ருரு’ என்னும் மான்களால் முட்டவிடப்பட்டுக் கிழிக்கப்படுகிறுன் என்ருரம்பித்துப் பலவிதமான பாபங்களுக்குப் பலவிதமான நரகவாஸகஷ்டங்களைக்கூறிவிட்டு எல்லா நரகத்திலிருப்பவர்களும் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு தேவலோகத்தில் ஸுகாநுபவம் செய்யும் தேவர்களைப்பார்த்து ‘ஐயோ! இவர்கள் மட்டும் நல்ல ஸுகத்தில் இருக்கிருர்களே நாம் மட்டும் இப்படித் துயரக்கடலில் கிடக்கிருேமே’ என்பதாக ஆதங்கமும் பட்டுக்கொண்டு தபிக்கிருர்கள் என்றம். தேவர்கள் தலைகீழாகத்தொங்கும் இந்த நரசவாஸிகளைப்

பார்த்துத் தங்களுக்கும் ஸ்வர்க்கவாஸகாலம் முடிந்ததும் ஒருக்கால் கர்மவிசேஷத்தால் இவ்விதம் நரகவாஸம் நேர்ந்தால் என்செய்வோம் என்பதாக பயந்துகொண்டு தாங்கள் தத்காலத்தில் அநுபவிக்கும் ஸ்வர்க்க ஸுகத்திலும் இன்பம் காணுமல் இருக்கிருர்கள் என்றும், 'ஸுயஸ்ஶிரொஹிஷுஜ்யஷு ஙெநாரகெஷுவிஷெவதாஃ। ஷெவாஸ்யொஃவாஸ்ஷுயாநு ஸுயஃ வஶூந்தி நாரகாநு ॥' (34-வது ச்லோகம்) என்ருரம்பித்துக் கூறப்பட்டிருப்பதைப் பார்த்தால் தேவர்களே பார்த்து நடுங்கும்படியானகஷ்டம் நரகவாஸத்தில் இருப்பதாகத் தெரியவரும்.

[வி-பு-6-வது அம்சம் 5-வது அத்யாயத்திலும் நரகவாஸிகளுடைய கஷ்டம் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறதுமல்லாமல் கர்பவ்ாஸக்லேசமும் பிறப்பு, பிணி, மூப்புக்களில் ஜீவனுக்கு ஏற்படும் க்லேசங்களும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

இவ்விதம் நரகவாஸத்தால் அதற்குரிய தீவினை தீர்ந்ததும் பாக்கியுள்ள கர்மபலத்தால் ஏதாவதொரு ஜாதியில் பிறப்பதற்காக அந்த ஜாதிஸ்த்ரீயினுடைய கர்பத்தை அடைகிருன். அப்போது கர்பாசயத்தில் அடைபட்டுக் கைகால்களை நீட்டிமுடக்சமுடியாமலும் தாயானவள் அதிகமான உரப்பு, உப்பு, கைப்பு, ரஸமுள்ள பண்டங்களைப் புஜித்துவிட்டால் அதனுல் அவள் கர்ப்பத்தில் இருக்கும் இவனும் பரமவேதனையை அடைந்தும் ஜன்மாந்தரங்களில் தன்னுடைமையாய் நினைத்திருந்தவைகளை இழந்துவிட்டதை நினைத்து வருந்துபவனையும், மலஜலமத்யத்தில் கிடப்பவனையும், ஸூதிகாவாயுவினுல் கர்பாசயத்திலிருந்து பூமியில் தள்ளப்பட்டு மூர்ச்சிதனையும் பிறகு வெளிக்காற்றினுடைய ஸ்பர்சத்தால் ஜன்மாந்தர ஜ்ஞாபகங்கள் மறைந்து அப்போது ஜநித்த ஜாதிக்கனுகுணமான அறிவையும் செயலையும் பெறுகிருன். ஆகையால் கர்பவாஸத்திலும், ஜநநகாலத்திலும் ஜீவனுக்கு ஏற்படும் அல்லல்களும் அநுவதிக்கவும் பயங்கரமானவையே.

பிணியிலும் மூப்பிலும் ஏற்படும் துன்பம் யாவரும் அநுபவத்தில் கண்ட உண்மையாகலால் ஸூசிபதத்தாலே சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டது.

நரகவாஸத்தில் யமபடர்களால் வாட்டப்படுவதுபோல் கர்பவாஸத்தில் அத்துணைக் கொடுந்துன்பம் இல்லையாதலால் துன்பம் அளிப்பதில் இவ்விரண்டிற்குள் நரகமானது ச்ரேஷ்டம் என்பதைக் காட்டுவதற்காக 'ஸூஹ்யஹிதம் வ' என்கிற இலக்கணத்தின்படி நரகபதத்தை முதலில் வைத்து 'நரகஶஹ்வாஸாதிஷு' என்பதாக அருளிச்செய்திருப்பது நோக்கத்தக்கது

இவ்விதம் நரககர்பவாஸாதி நிலைமைகள் பயாஸ்பதமாக இருந்தாலும் யௌவநநிலைமையில் தேஹத்தில் நிறைந்த ரத்த ஓட்டமும் நல்ல வலிமையும், பளபளப்பும் உண்டாகி ஆண்பெண் மிதுனங்களின் கலவியால் இன்பமும் ஏற்படுவதால் யௌவநநிலைமை பயாஸ்பதமாகத் தோன்றவில்லையே என்னில்—அந்நிலைமையில் உள்ள பயங்கரநிலைமை நரகவாஸாதிகளைப்போல் ஸ்தூல த்ருஷ்டிக்குத் தோன்ருதபோதிலும் நன்ருக நிரூபித்துப் பார்த்தால் தோன்றும் என்பதாக 'வஸூஷு வஹயாதகம் நிவஸணவிஷநெ தாஸ்ஷம்' என்பதால் அருளிச்செய்யப்படுகிறது. வஸுஃ என்கிற பதமானது 'ஷுவஸ் ஸீஜஸஞ்ஜநெ' என்கிற யாதுவில் 'ஷுஷிவஸ வவி...' (உணாதிஸூத்ரம் 274) என்கிற இலக்கணத்தால் வஸுஃ என்கிற உருவத்தை அடைந்திருக்கிறது. அதனுல் கர்பத்தை உண்டுபண்ணும் பருவத்தில் உள்ள யுவாவின் தேஹத்தையும் கர்பத்தை தரிக்கும் யுவதியின் தேஹத்தையும் வஸுஃ என்கிற பதம் குறிக்கிறது. நிறைந்த ரக்தமாம்ஸாதிதாதுக்களை உடையது என்கிற பொருள்கொண்ட 'வஹயாதகஷு' என்கிற அடைமொழியும் யௌவநதேஹத்திற்கே பொருத்தமுள்ளதாகையால் அதுவும் வஸுஃ என்கிற பதத்துக்கு மேற்கூறியபடி யௌவநதேஹம் என்கிற அர்த்தத்தை வலியுறுத்துகிறது. ஆகவே யௌவந நிலைமையில் உள்ள ஸ்த்ரீ புமான்களுடைய தேஹமும் நன்ருக ஆலோசிக்குமளவில் பயாஸ்பதமே என்பதாக 'வஸூஷு வஹயாதகம் நிவஸணவிஷநெ தாஸ்ஷம்

ஶமே' என்கிற ஸ்ரீஸூக்திக்குப் பொருள் ஏற்படுகிறது.

இங்கே நிபுணசிந்தனமாவது—யௌவந தேஹத்திலும் சிலருக்கு ரக்தமாம்ஸாதிதாதுக்கள் அளவுக்கு மீறி ஏறியும், இறங்கியும் வ்யாதிகள் வந்து வருத்துவதையும், ராவண கீசகாதிகள் ரக்தப்பெருக்கினால் அடங்காத திமிர் அடைந்து ஸீதை த்ரௌபதி முதலியவர்களை விரும்பிப் படுநாசமடைந்த வரலாறுகளையும், பல தாரங்களை மணந்துகொண்ட ஒருவனை அவர்கள் ஒவ்வொருவரும் தந்தமக்கு வேண்டிய ஆடை ஆபரணங்கள் முதலியவைகளைத் தேடித்தரும்படி வாட்டிவதைப்பது போல் தேஹத்திலுள்ள பத்து இந்த்ரியங்களும் தந்தம் விஷயங்களில் தேஹத்தில் உள்ள ஆத்மாவை இழுத்து வருத்துகின்றன என்பதாக ஸ்ரீமத்பாகவதத்தில் 'ஜிஹ்வைகதோऽச்யுத விகர்ஷதி மாऽவித்ருப்தா ஶிஶ்நோऽந்யதஸ்த்வகுதரம் ஶ்ரவணம் குதஶ்சித் । க்ராணோऽந்யதஶ்சபலத்ருக் க்வ ச கர்மஶக்திர் பஹ்வ்ய: ஸபத்ந்ய இவ கேஹபதிம் லுநந்தி ॥'(7-வது ஸ்கந்தம் 9-வது அத்யாயம் 40 ச்லோகம்) என்று ப்ரஹ்லாதர் ஸ்ரீ ந்ருஸிம்ஹனிடம் விஜ்ஞாபித்து இருப்பதையும் 'உண்ணிலாவிய' என்கிற திருவாய்மொழியிலும் 'புண்ணை மறைய வரிந்தென்னைப் போரவைத்தாய் புறமே' (திருவாய்மொழி 5-1-5) 'தூராக் குழி தூர்த்து எனைநாளகன்றிருப்பன்' (திருவாய்மொழி 5-8-6) என்பது முதலான பல பாசுரங்களிலும் நம்மாழ்வார் அருளிச்செய்திருப்பதையும் நன்றாக ஆலோசித்து அறிதல், நிபுணசிந்தனமாகும். (கண், காது, முதலான புலன்களுக்கு ஆஹாரங்களான காட்சிகளையும் இன்னிசை முதலியவைகளையும் போதுமென்ற அளவுக்கு விருந்திட்டாலும் அவ்விந்த்ரியங்கள் திரும்பத்திரும்ப அவைகளையே வேண்டுவனவாக இருப்பதால் இந்த்ரியங்கள் தூராக்குழி எனப்பட்டது என்பது குறிப்பு.)

யௌவநநிலைமையதான தேஹத்தில் உள்ள பயாஸ்பதத்தன்மை காமாந்தர்களாய் இந்த்ரியத்தை அடக்குந்திறமையற்ற அநிபுணர்களின் எண்ணத்தில் தோன்றாதே தவிர இந்த்ரியத்தை அடக்கும் திறமைவாய்ந்த நிபுணர்களுடைய எண்ணத்தில் உள்ளபடியே பயாஸ்பதமாகத் தோன்றும் என்று 'நிவ்ருத்திஜ நமே' என்பதற்கு மற்றொரு விதமாகவும் பொருள் கூறலாம். இவ்வர்த்தத்துக்கு உதாஹரணமாக விஷ்ணுபுராணம் 4-வது அம்சம் 5-வது அத்யாயத்தில் கூறிய நிமிமஹாராஜரின் சரிதத்தை இங்கே படிப்போம்.

இக்ஷ்வாகு மஹாராஜரின் பிள்ளையான நிமி என்பவர் 1,000-வருஷம் அநுஷ்டித்துப் பூர்த்தியடையவேண்டிய ஓர் யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார். அந்த யாகத்துக்கு ரித்விக்காக இருந்து நடத்திவைக்கும்படி வஸிஷ்டரை வேண்டினார்; அதற்கு வஸிஷ்டர் 'நான் இந்த்ரனால் செய்யப்படுவதும் 500 வருஷத்தில் முடிவடையக்கூடியதுமான யாகத்துக்கு ரித்விக்காக வருவதாக இந்த்ரனிடம் முன்னமேயேஒப்புக்கொண்டுவிட்டேன். அந்த 500 வருஷத்துக்குப் பிறகு நீர் யாகம் ஆரம்பிக்கலாம். அப்போது நான் வந்து நடத்திவைக்கிறேன்' என்பதாகக் கூறினார். அதற்கு நிமியானவர் தன் ஸம்மதத்தையோ அஸம்மதத்தையோ ஒன்றையும் தெரிவிக்கவில்லை. வஸிஷ்டரும் தாம் கூறியதை ராஜா ஒப்புக்கொண்டுவிட்டார் என்பதாக நினைத்துக்கொண்டு இந்த்ரலோகம் சென்று இந்த்ரனுக்கு யாகத்தை நடத்திவைத்தார். இங்கு நிமி மஹாராஜரும் கௌதமரை ரித்விக்காக வைத்துக்கொண்டு யாகத்தை நடத்திக்கொண்டிருந்தார். வஸிஷ்டர் இந்த்ரனுடைய யாகத்தைப் பூர்த்திசெய்துவைத்துவிட்டு 500 வருஷங் கழித்து நிமி மஹாராஜரிடம் வந்தார். அப்பொழுது நிமிமஹாராஜர் தூங்கிக்கொண்டிருந்தார். கௌதமரைக்கொண்டு யாகம் நடத்தப்பட்டுவருவதை வஸிஷ்டர் அறிந்து, தம்மை எதிர்பார்க்காமல் யாகத்தை நடத்தியதற்காக நிமிமஹாராஜரின்மேல் கோபங்கொண்டு அம்மஹாராஜருக்கு தேஹம் இல்லாமல் போக வேண்டும் என்று ஶபித்துவிட்டார். ராஜா தூங்கி எழுந்ததும் வஸிஷ்டரின் ஶாபத்தை அறிந்து தாம் தூங்கும்போது தம்மை விசாரியாமலே தமக்கு ஶாபதண்டனை விதித்த

தற்காக வஸிஷ்டருக்கும் தேஹம் அழிந்துவிட வேண்டும் என்பதாக பதில்ஸாபம் கொடுத்து விட்டு உயிர் நீத்தார். வஸிஷ்டரும் தேஹத்தையிழந்து, மித்ராவருணர்கள் என்கிற தேவர்கள் ஊர்வசியைப் பார்த்து மோஹித்தஸமயத்தில் அவர்களிடமிருந்து மறுபடியும் தேஹத்தை அடைந்தார். யாகமத்தியில் மரணவிபத்தை அடைந்த நிமிமஹாராஜரின் தேஹத்தை ரித்விக்குக்கள் தைலம்தடவி துர்கந்தாதிகள் ஏற்படாமல் யாகபூர்த்திக்குரிய 500 வருஷகாலமும் பாதுகாத்து யாகத்தைப் பூர்த்திசெய்தார்கள். யாகபூர்த்தியின்போது தேவர்கள் ஹவிர்பாகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக யாகசாலைக்கு வந்தனர். அவர்களை ரித்விக்குக்கள் நிமிமஹாராஜருக்கு வரம் கொடுக்கும்படி வேண்டினர். உடனே தேவர்கள் நிமியின் தேஹத்துக்கு உயிர் உண்டாக்கி நிமிமஹாராஜரைப் பார்த்து 'உமக்கு என்ன வரம் வேண்டும்' என்று வினவினர். அதற்கு நிமியானவர் 'ஆத்மாவுக்கு தேஹத்துள் ப்ரவேசம் ஏற்பட்டால் அதில்நின்றும் பிரியும்போது ஆத்மாவுக்குச் சொல்லொணாத்துயரம் ஏற்படுகிறது. ஆகையால் எனக்கு இனி தேஹத்துள் ப்ரவேசம் வேண்டாம். எல்லாருடைய கண்களிலும் இமைகொட்டுதல் என்னும் ரூபமாகத் என்னை இருக்கும்படி செய்ய வேணும்' என்றார். தேவர்களும் அவ்விதமே வரம் அளித்தனர். அதில் இருந்துதான் யாவருக்கும் கண்கொட்டுதல் என்பது இருந்து வருகிறது. நிமிமஹாராஜர் இளரொளியிளமை கெடுவதன் முன்னம் யௌவநநிலைமையிலேயே யாகதீக்ஷை செய்துகொண்டு இவ்விதம் தேஹத்தையிழக்கும்படி நேர்ந்துவிட்டதால் அவருக்குப் பிள்ளை இல்லை. அதனால் தேசத்துக்கு அராஜகம் ஏற்படாதிருப்பதற்காக அம்மஹாராஜரின் தேஹத்தை ரித்விக்குக்கள் அரணிக்கட்டையில் வைத்துக்கடைந்தனர். அதனால் அவர் தேஹத்திலிருந்து ஒரு குழந்தை உண்டாயிற்று. அக்குழந்தை இவ்விதம் புதுமையாய் உண்டாக்கப்பட்டபடியால் ஜநகர் என்றும், தேஹத்தை விரும்பாத விதேஹருக்குப் பிறந்தமையால் வைதேஹர் என்றும், கடைந்து எடுக்கப்பட்டமையால் மிதிஎன்றும் பெயர்பெற்றது-என்பதாக நிமிமஹாராஜரின் சரித்ரம் விஷ்ணுபுராணத்தில் இருக்கிறது. இவ்விதம் ப்ரஜோத்பாதநத்துக்குத் தகுதிவாய்ந்த யௌவநதேஹமும் (வபுஸ்ஸும்) இந்த்ரியத்தை அடக்கும் திறமையும் வாய்ந்த நிபுணரான நிமிமஹாராஜரின் எண்ணத்தில்பயாஸ்பதமாகத்தோன்றினதையே ஸ்வாமி திருவுள்ளம்பற்றி 'வபுஷு வஹுயாதநாஸும் நிவஸணவிஹீநே தாவத்யஸ்மி' என்று அருளிச்செய்ததாகக் கூறுவதும் சாலப்பொருந்தும்.

இவ்விதம் இவ்வுலக இயற்கை பயங்கரமாயினும் ஸ்வர்காதி மேலுலகங்களில் கிழத்தனமே இல்லாமல் எப்போதும் யுவர்களாகவே இருந்துகொண்டு அப்ஸரஸ்ஸுக்களுடன் ஸுகிக்கலாமாகையால் அங்கு இவ்விதம்பயாஸ்பதநிலைமை உண்டோவென்னில்—அதுவும் பயாஸ்பதமே என்பதாக 'த்ரிவிஷ்டபம் தயா தவ வஷஸ்ய ஷீவ்யத:' என்பதால் அருளிச்செய்யப்படுகிறது. ஸ்வர்காதிலோகங்களில் இவ்வுலகத்தைக்காட்டிலும் சிறிதளவு இன்பப்பெருக்குண்டேயாகிலும், அநந்தகருடாதி நித்யஸூரிகளுடன் ஸ்ரீயப்பதியால் நித்யவாஸம்செய்யப்பட்டு எப்போதும் ஜ்யோதிர்மயமாய் விளங்காநிற்கும் ஸ்ரீவைகுண்டம் என்னும் மோக்ஷபதத்தோடு ஸ்வர்காதிகளை ஒப்பிட்டுப் பார்க்குமளவில் ஸ்வர்காதிகள் நரகத்துக்கு இணையாகவே பயாஸ்பதமாயிருக்கும். எவ்விதமென்னில்—ஸ்வர்காதி லோகங்களிலும் காமக்ரோதாதிமூலமாக அஸுரர்களின் தொல்லை அடிக்கடி உண்டாகையால் பயத்துக்குக்குறைவில்லை. மோக்ஷபதமோ அஸுரர்களின் மனத்துக்கும் எட்டாதது. ஸ்வர்காதிலோகங்களில் அவரவர்கள் செய்த புண்யகர்மாவின் நிறைவுக்கும் குறைவுக்கும் தகுந்தபடி ஸுகபோகத்திற்குரிய கருவிகளிலும், ஸுகபோகத்திலும் நிறைவும் குறைவும் உண்டு. அதனால் நிறைந்த ஸுகத்தோடிருப்பவர்களைப்பார்த்து மற்றவர்கள் ஏங்குவதும் வருந்துவதும் இயற்கை. மோக்ஷத்தில் நித்யமுக்தர்களுக்கு ஸுகாநுபவத்தில் பேதமில்லை. ஸ்வர்காதி லோகங்களில் அவரவர்களின் புண்யகர்மாநுகுணமாக அவரவர்களுக்கு அங்கிருக்கும் காலமானது வரை

யறுக்கப்பட்டிருப்பதால் அங்கிருக்கும் காலத்தின் முடிவு நாளுக்குநாள் நெருங்குவதை எண்ணி அவரவர்களுக்கு எப்பொதும் தீராத மனக்கவலையும் உண்டு. மோக்ஷத்தில் இருப்பதற்கு இவ்விதம் முடிவுகாலம் கிடையாதாகையால் கவலையில்லை. ஸ்வர்காதிகளில் மஹேந்த்ரனுல் கொண்டாடத்தகுந்த அப்ஸரஸ்ஸுக்களுடைய தேஹமும் ரக்தமாம்ஸாதி தாதுக்களின் பிண்டமேயாகையால் பகுத்தறிவோர்க்கு அது வெறுக்கத்தக்கதேயாகும். மோக்ஷத்தில் உள்ள தேஹமானது ஜ்ஞாநாநந்தமயமான அப்ராக்ருதரூபமாகையால் ஆநந்தமயமானது. ஸ்வாத்மமாத்ராநுபவம் என்கிற கைவல்யஸுகமும் அழிவுறும் தன்மையதேயாகையால் பயாஸ்பதமானதே. ஆகவே, இவ்வுண்மைகளை ‘த்ரிவிஷ்டபாதிவம் தயா தவ பதஸ்ய ஜீவ்யதீ:’ என்கிற ஸ்ரீஸூக்தியானது விளக்குகிறது.

இவ்விதம் ‘இன்பந்தரு பெருவீடு’ என்னும் மோக்ஷத்தைத் தவிர மற்ற பதவிகள் யாவும் பயாஸ்பதமாகவே இருப்பதால் இப்பதவிகள் ஒன்றையும் பயமில்லாதது என்று கூறவியலாது என்று ஸ்ரீரங்கநாதன் திருவோலக்கத்தில் ‘கிமத்ர ந பயாஸ்பதம் பவதி ரங்கபர்யங்க்ய பதே’ என்கிற ஸ்ரீஸூக்தியால் ஸ்வாமி தேசிகன் விஜ்ஞாபித்தருளினர். இவ்விதம் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்திகளில் ‘நிவாண விநதநு’ என்கிற ஒரு பதத்தை நாம் நிபுணமாகச் சிந்தித்துப்பார்த்தோமேயானல் இன்னும் அனேக அர்த்தங்களும் கருத்துக்களும் வெளிப்படும். ஸ்வாமியின் திருவாக்கிலிருந்து வெளிவந்த ஒவ்வொருபதத்திலும் நிபுணமாகச் சிந்தித்து அறியத்தகுந்த அனேகம் உயர்ந்த கருத்துக்கள் நிரம்பியிருக்கும். ‘ஊஹ்யம் விவித்ஸுபிரத்ர பாவாஸ்ஸந்தி பதே பதே’ என்பதாக அப்பய்யதீக்ஷிதர் கூறினதில் மிகையொன்றுமில்லை.

ஸ்ரீ:

ப்ரபத்தியின் பெருமை

தர்மார்த்தகாமமோக்ஷங்கள் என்று நான்கு விதமாகப் பிரிக்கப்பட்ட புருஷார்த்தங்களில் மோக்ஷம்தான் சிறந்த புருஷார்த்தம் என்று ஆஸ்திகர்கள் அதையே விரும்பிப்போருவார்கள். அந்த மோக்ஷத்தின் ஸ்வரூபத்திலும் உபாயத்திலும் சிறிய அபிப்ராயபேதங்கள் உண்டு. ஸ்ரீராமானுஜஸித்தாந்தாநுயாயியான ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்தைச் சுருக்கமாக விவரிக்கிறோம்.

ஸ்ரீவைகுண்டம் என்கிற தேசவிசேஷத்தில் கைங்கர்யபர்யந்தமான பரிபூர்ணப்ரஹ்மாநுபவம்தான் மோக்ஷம். அதை அடைவதற்கு உபாயம், பரமகாருணிகனும் ஸ்ரிய:பதியுமான பகவான். இது காரணமாக அவனுக்கு ஸித்தோபாயன் என்று ஶாஸ்த்ரங்களில் வ்யவஹாரம் உண்டாயிற்று. அவன் சேதனனுல் அநுஷ்டிக்கப்படுகிற ப்ரபத்தியினல் ப்ரஸந்நனுகி சேதனனை பரமக்ருபையால் மோக்ஷத்தை அடைவிப்பிக்கிறன். அவனுடைய ப்ரஸந்நதைக்குக் காரணம் பக்தி ப்ரபத்திகள். பக்தியோகத்தை அநுஷ்டிப்பவனும் அதற்கு அங்கமாக ப்ரபத்தியைச் செய்யவேண்டும். அவனுக்கும் ப்ரபந்நன் என்று பெயர். ஶாஸ்த்ரஜ்ஞர்கள் அவனை ஸத்வாரகப்ரபத்திநிஷ்டன் என்று வ்யவஹரிப்பார்கள். ஸ்வரூபபரபலஸமர்ப்பணுத்மகமான ப்ரபத்தியை அங்கியாக அநுஷ்டிப்பவன் அஸாதாரணமாக(அத்வாரக)ப்ரபந்நன் என்ற பெயரை அடைகிறன். ஆகவே இந்த ப்ரபத்திக்கு ஸாத்யோபாயமென்று பெயர். ப்ரபத்தியையநுஷ்டிக்காதவனுக்கு மோக்ஷம் கிடையாது. இதை ஸ்ரீதேசிகன் ‘ப்ரபதநாதிநாம் நதிஶதி ஶ்ரேயோ நிஜபதம்’ என்று ஸத்யமிட்டருளினர். இப்படி பகவான் ஸித்தோபாயம் என்பதையும் அவனுடைய ப்ரஸந்நதைக்கு பக்தி ப்ரபத்திகள் காரணம் என்பதையும் ஸ்ரீஸ்வாமி உபாயவிபாகாதிகாரத்தில்(ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்

நில்) 'உபாயஃ ஸ்வப்ராப்தேர் பகவாந் அஸ்ய ப்ரஸாதே ஹேதுஸ் ஸ்வஸ்ய ப்ரஸாதே நீதிஸ் தத்ராபி ஸாநுக்ரஹத்வே ஹேதுஸ் ஸோ ஹ்ருதா நிர்தோஷ த்ருஷ்டி ஸ்வயஞ்சைவ நிர்ஹேதுகதயா ஸமக்ஷ ஸாரணம் ந ஸ்வாஷ்:॥'

என்கிற ச்லோகத்தினால் ப்ரகாசிப்பித்தருளி னார். இதின் கருத்து- (நிருபாதிகசேஷியா யும் ஸஹஜகாருணிகனும் உள்ள பகவான் (ஸ: என்ற பதம் மேல்குறிப்பிட்ட அர்த்தங் களை ஸூசிப்பிக்கிறது) உபாயம் என்று உப நிஷத்துக்களில் ஓதப்படுகிறான். பகவான் உபாயமென்று சொல்லில் அவன் ஸர்வஸமனா கையினாலே வைஷம்யநைர்க்ருண்யதோஷபரி ஹாரகமாக ஸர்வமுக்திப்ரஸங்கம் வராதோ என்கிற சங்கையை இரண்டாவது பாதத்தி னால் நிரஸிக்கிறார்- 'ப்ரஸாதே ஹேது' அவனுடைய ப்ரஸந்நதைக்கு பக்திப்ரபத்தி கள் காரணமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதெங்ஙனேயென்னில்- அஹிர்புத்ந்ய ஸம் ஹிதையில் 'பக்த்யா பரமயா வாபி ப்ர- பத்த்யா வா மஹாமதே ப்ராப்யோஹம் நா ந்யதா ப்ராப்ய: மம கைங்கர்யலிப்ஸுபி:॥' (என்னிடத்தில் கைங்கர்யம் செய்ய விரும்பு கிறவர்களால் உயர்ந்த பக்தியினாலோ அல்லது ப்ரபத்தியினாலோ நான் அடையத்தகுந்த வன்; மற்றொரு உபாயத்தினால் அடையத் தகுந்தவனல்ல) என்று வ்யவச்சேதபூர்வக மாக பகவான் அறுதியிட்டான். அப்படி யாகில் ஸ்வாமி பகவான்தான் உபாயம் என்று ஸாதித்திருப்பது எப்படிப் பொருந் தும் என்கிறசங்கை, லக்ஷ்மீதந்த்ரத்தில் 17-18 'ஸர்வஜ்ஞோபி விச்வேச: ஸதா காருணி கோபி ஸந் । ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே ॥' என்கிற ச்லோகத்தினால் நிவ்ருத்தமாகும். (ஸர்வஜ்ஞனா னஸர்வேச்வரன் பரமதயாளுவாயிருந்தபோதி லும் ஸம்ஸாரதந்த்ரவாஹியாகையாலே (லீலா விபூதிநிர்வாஹகனாகையாலே) சேதனர் களுடைய அபேக்ஷையை எதிர்பார்க்கிறான்.) இந்த அபேக்ஷைதான் சரணாகதியென்பது. ஆனால் பகவான்தான் உபாயமென்றும் அவனுடைய ப்ரஸந்நதைக்கு பக்திப்ரபத்தி கள் காரணம் என்றும் முடிந்தது. அஹிர்புத் ந்யஸம்ஹிதைக்கும் இதுவே தாத்பர்யம். இந்த விஷயம் ச்வேதாச்வதரத்தில் 'முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே' என்கிற வாக்யத்தாலும் தைத்ரீயத்தில் 'தஸ்மாந்ந்யாஸ மேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:' என்கிற வாக்யத்தாலும் ஸித்தம். இதன் பெருமையை யறிந்தே ஸ்ரீபாஷ்யகாரர்தான் சரண்யனிடத் தில் சரணாகதியநுஷ்டித்து அதை சிஷ்யர் களுக்குத் தெரிவிக்கக் கருதி ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் 'த்வத்பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே கல்பகோடிஸஹஸ்ரேணாபி ஸாதநமன்யந்ந மந்யே' (இருள் தருமாஞாலத்தில் பிறவியைத் தவிர்க்க பகவா னுடைய தாமரைபுஷ்பம்போன்ற திருவடி களில் சரணாகதி அநுஷ்டிப்பதைத் தவிர மற்றது உபாயமாக கல்பகோடிஸஹஸ்ரத்திலும் ஆகமாட்டாது) என்று அருளிச்செய்தார்.

ஆகையால் பகவத்ப்ரஸந்நதைக்கு ப்ர பத்தி உபாயம் என்று ஸ்ரீபாஷ்யகாரர் திரு வுள்ளம். ஆகையினால்தான் பெரியகத்யத்தில் பகவானின் திருமுகப் பாசுரமாக உள்ள ஸ்ரீஸூக்தியில் ஏதாவதொரு வ்யாஜமல்லா மல் பகவான் ப்ரஸந்நனாகமாட்டானாகையி னாலே 'யேநகேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம்' என்று த்வயோச்சாரணத்தை (சரணா கதியை) வ்யாஜமாகக் காட்டியருளினார். இந்த ப்ரபத்தியே பரந்யாஸம், பரஸமர்ப்பணம், சரணாகதி, அத்ருஷ்டம் என்கிற பெயர் களால் வழங்கப்படுகிறது. ப்ரபத்தியென்றால் ஸ்வரூபபரபலஸமர்பணாத்மகமான ஒரு ஜ்ஞாந விகாஸவிசேஷம். 'ப்ரபத்திவிஷயஸ்ய ஸ்வாத்மரக்ஷணார்த்தமாகையாலே ப்ரபத்திம் ப்ரபத் யதே' என்கிறபடி இவ்வர்த்தம் கொள்ள வேணும். பரந்யாஸமாவது அபிமதஸித்திக்குபாயமாக விஹிதமான பரத்தை சுமக்க மாட்டாத அகிஞ்சநன் கோப்தாவாய் நிற்கிற அவனை, நீ எனக்கு உபாயமாகவேண்டும் என்று ப்ரார்த்திப்பது. (என் தலையில் உபா யாந்தரத்தைச் சுமத்தாதே அவற்றைச் சுமந்

தால் மேல்வரும் அபிமதமெல்லாம் தருகை ஸமர்த்தகாருணிகனுன உனக்கே பரமாக ஏறிட்டுக்கொள்ளவேணும்) இதுவே உபாயாந்தரஸ்தாநுபத்தி (மற்ற உபாயத்தின் ஸ்தானத்தை அடைதல்) என்றும் நிரபேக்ஷோபாயத்வம் (மற்றொன்றை எதிர்பாராமல் உபாயமாகவிருத்தல்) என்றும் சொல்லப்படுகிறது. அங்கமாக ப்ரபத்தியும்பண்ணி உபாயமாக உபாஸநமும் அநுஷ்டித்துப் பெறவேண்டிய பலத்தை அவ்வுபாயமொழியவே ப்ரபத்திமாத்ரத்தாலே அடையும்படி அகிஞ்சநனுக்கு ஈச்வரன் உபாயாந்தரஸ்தானத்தில் நிற்கிருன் என்பது ஸ்ரீஸ்வாமி திருவுள்ளம். இதையே ந்யாஸதிலகத்தில் 'ஹெதுஃவெ-ஃயெவிஃ-ஶெஃ' என்கிற ச்லோகத்தினுல் நிலைநாட்டியருளினுர். ஆகவே ந்யாஸவித்யையில் நிரபேக்ஷோபாயத்வம் பகவானுக்கு வேத்யாகாரம் என்று முடிந்தது. இங்கு ப்ரபத்தியின் அநுஷ்டாநத்தினுல் பகவான் ப்ரஸந்நனுகி மோக்ஷம் கொடுப்பது என்பதும், பகவானுக்கு ந்யாஸவித்யையில் வேத்யாகாரம் நிரபேக்ஷோபாயத்வமென்பதும் எப்படிப் பொருந்தும் என்று சிலருக்கு ஸந்தேஹம் உதிக்கக்கூடும். அந்த ஸந்தேஹத்தைப்போக்கும் வழி— உபாயத்வம் என்பது கிஞ்சித்காரகத்வம் (கார்யத்தை ஸாதித்தல்). பகவான் உபாயமென்ருல் மோக்ஷப்ரதாநம் என்கிற கார்யத்தைச் செய்கிறவன் என்று அர்த்தம். ஆகவே மோக்ஷப்ரதாநம் என்கிற கார்யத்திற்கு மற்றொன்றை அவன் முக்யமாக அபேக்ஷிக்காத்தால் நிரபேக்ஷோபாயத்வம் அவனுக்கு வேத்யாகாரமாக ஆகிறது. இதையே ஸ்வாமி தேசிகன் விரோதபரிஹாரத்தில் 92ல் 'ப்ரதாநமான ஸித்தோபாயம் ஸஹஜகாருண்யாதி விசிஷ்டனுய்க் கொண்டு பரஸ்வீகாரம்பண்ணிநிற்கிறவன் ஒருவனுமேயாகையாலும், அவனுடைய வசீகரணார்த்தமாய் விதிக்கப்படுகிறவ்யாஜமாத்ரமான ஸாத்யோபாயத்தில் ப்ராதான்ய விவக்ஷை பண்ணுகை உசிதமல்ல' என்று ஸ்பஷ்டமாக அருளிச்செய்தார். மேலும் ஸித்தோபாயசோதனுதிகாரத்தில் 'தாய்முலைப்பால்போலே வருகிற ஈச்வரப்ரஸாதத்திற்கு ஸ்தநந்தயனுடைய முலையுண்ணுகிற வ்யாபாரம்போலே யிவனுடைய அபேக்ஷாதிகள். இத்தால் ஸித்தோபாயஸ்வரூபத்திற்குக் கொத்தைவாராது' என்று அழகாக அருளிச்செய்தார். இங்கு வூாயாநெ௱ந ஐதாாநவெக்ஷோவாயகூ ப்ரபத்திக்குப்போலே பக்திக்கும் துல்யமாயிருக்க ப்ரபத்திக்குமாத்ரம் விசேஷித்துச் சொல்லுவானேனெனில் உபாயாந்தரஸ்தாநுபத்திவிசிஷ்டநிரபேக்ஷோபாயத்வம் ப்ரபத்திக்கு வேத்யாகாரம் இது பக்திக்கு ஒவ்வாது என்று ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் சரமச்லோகாதிகாரத்தில் இவ்வாக்ஷேபத்தைத்தாமே உபக்ஷேபித்து அவ்விடத்திலேயே ஸமாதானத்தையும் அருளினுர்.

பக்திப்ரபத்திகள்பகவத்ப்ரஸாதனேபாயங்களாகில் ஸர்வருக்கும் அந்த பக்திப்ரபத்திகளில் ப்ரவ்ருத்தியுண்டாகாமல் போவானேனென்கிற சங்கையை நிரஸிக்கிருர். 'தஜா ஶொஹஃ வஂஸீ..................' (ஸுக்ருதங்களுடையபரிபாகத்தினுல் சேதநர்களுக்கு பக்திப்ரபத்திகளில் அந்வயம் உண்டாகிறது) என்று. 'அந்த ஸுக்ருதபரிபாகத்திற்கும் அடியென் என்னில், 'நிஜாநஂ தகூாவி' என்கிற நான்காவது சரணத்தினுல் ஸமாதானம் அருளிச்செய்கிருர். (இதின் கருத்து ஸகல உலகங்களையும் ஸ்ருஷ்டிப்பதில் ஸமர்த்தனுன பகவானே அந்த ஸுக்ருதபரிபாகத்திற்கும் ஆதிகாரணம்) 'தெந விநா தூணவி ந வஜதி' என்கிற வாக்யத்தின்படி சாஸ்த்ரார்த்தத்தை நிதானபதத்தாலே காட்டியருளினுர். இங்கு சிலர்— நிதானபதமஹிமையால், நாம் கர்தவ்யமான உபாயவிசேஷத்தை அநுஷ்டிக்கவேண்டா. ஸர்வத்திற்கும் அவன் காரணபூதனுகையாலே நாம் செய்யவேண்டியதென் என்று சங்கிப்பார்கள். இது ஸித்தோபாயத்தின் ப்ராதான்யமடியாகவந்த அதிவாதம். நிதாநபதத்தின் அர்த்தத்தை ஊன்றிநோக்குங்கால் பகவானைத் தவிர வேறு எதுவும் எதற்கும் காரணமல்ல. ஆகையால் ரக்ஷகாந்தரம் தேடவேண்டா என்கிற அர்த்தத்தையே திருவுள்ளம்பற்றிநிதானபதப்ரயோகம் செய்தார். இது கொள்ளாமல்

நிதானபதமஹிமையால் ப்ரபத்திக்கு உபாயத்வநிரஸனம் செய்யப்புகில் போஜனாதிவ்யாபாரங்களையும் தவிர்க்கவேண்டிவரும். ஆகையால் பகவான் ஸித்தோபாயனாயிருந்தபோதிலும் தத்ப்ரஸங்கதைக்காக பக்திப்ரபத்திகள் செய்யவேண்டியதாயிற்று.

இங்கு ப்ரபத்தி உபாயம் என்கிறவர்த்தத்தை நிரஸிக்கப்புகுந்த சிலர் ஐச்வர்யாதிகளுக்கு ப்ரபத்தியநுஷ்டிப்பவன் அதமாதிகாரியென்றும், மோக்ஷத்திற்கு ப்ரபத்தி செய்பவன் மத்யமாதிகாரியென்றும், பகவானிடத்தில் உபாயத்வபுத்தியில்லாதவன் உத்தமாதிகாரியென்றும் வ்யவஸ்தை செய்துகொண்டு இந்த மூன்றாவது பக்ஷத்தையே ஸகலபூர்வாசார்யர்களும் விரும்பிப்போருவார்கள் என்றும் இதற்கு ப்ரமாணமாக ஸ்ரீதேசிகனின் 'ஃவ-யூாவாவெ-ஃ' (ந்யாஸதிலகம்)என்கிற ச்லோகத்தில் 'ஃவெயூஃஷிஊவிவிஜஹஜெதா ஃஃகூவதாயநகவு' என்கிறசரணத்தைக்காட்டினார்கள். ஸ்ரீதேசிகன் தானருளிச்செய்திருக்கும் க்ரந்தங்களில் ஒரு இடத்திலும் இந்தாாதிரிவிபாகம் செய்திருப்பதாகக்காணவில்லை. ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில் 'இப் பகவத்பாரில்' என்றாரம்பித்து அதிகாரிவிபஜனம் செய்தது கீழ்வருமாறு. தேவதாந்தரஸ்பர்சமற்றவர்கள் ஏகாந்திகள் என்றும், 'ஆனாநீதஃ வாவெ சுாஜ்' என்கிறபடியே ப்ரயோஜனாந்தரஸ்பர்சமற்றவர்கள் பரமைகாந்திகள் என்றும், விளம்பாக்ஷமாராய்சேஷிபக்கலிலே பரந்யாஸம்பண்ணி மோக்ஷமும் ப்ரயோஜனமென்று கோலாதே கைங்கர்யைகபரர்களாயிருப்பார்கள்ஷோடசவர்ணஸ்வர்ணத்தோடொத்த பரமைகாந்திகள் என்று. ஆகையால் மேல்குறித்த விபஜனத்தை ஸ்ரீ ஸ்வாமி இசைந்தாரில்லையென்றாயிற்று. ஃவயூாவாவெ-ஃ என்கிற (ந்யாஸதிலக) ச்லோகத்தின் மூன்றாவது சரணமான 'ஃவ-யெயூசுஷிஊவிவிஜஹஜெதா ஃஃகூவதாயநகவு' என்பதும் ஆசார்யனாலநுஷ்டிக்கப்பட்ட ப்ரபத்திநிஷ்டர்கள் விஷயம். அவர்கள் 'ஃஃ ஃஃய-ஞ நிவியழ'என்றபடி ஆசார்யனாலநுஷ்டிக்கப்பட்ட ப்ரபத்தியில் சேர்ந்தவர்களாதலால் ஆசார்யனுடைய பகவத்யுபாயதவ புத்தியினாலே இவர்களுக்கும் மோக்ஷம் நிச்சிதமாதலால் தனியாக பகவானிடத்தில் உபாயத்வபுத்திபண்ணவேண்டாமென்று திருவுள்ளம். விவேகிகள் நன்றாக ஸ்ரீகோசத்தை (ந்யாஸதிலகத்தை)ஸேவித்தால் இவ்வர்த்தம் கிடைக்கும்.

சேதநர்களுடைய கர்மங்கள் இருவகை. ஒன்று ப்ராரப்தம். மற்றொன்று ஸஞ்சிதம். பலம் கொடுக்கத்தொடங்கின கர்மத்திற்கு ப்ராரப்தம் என்று பெயர். ஒரு காலவிசேஷத்தில் பலம்கொடுப்பதற்காகக் குவிந்துகிடக்கும் கர்மங்களுக்கு ஸஞ்சிதம் என்று பெயர். பக்தியோகம் ஸஞ்சிதகர்மாக்களை மாத்திரம் நசிப்பிக்கும். ப்ரபத்தியோவெனில் ஸஞ்சிதகர்மாக்களையும் போக்கி ப்ராரப்தத்தில் நாம் அநுபவிக்கவேண்டியதாகவிசைந்த கர்மாக்களைத்தவிர மீதி கர்மாக்களத்தனையும் போக்கிவிடுகிறது. ப்ரபத்தியையநுஷ்டித்தபிறகு அறியாமல்செய்யும் பாபங்களை ப்ரபந்நனிடம் சேராமலிருக்கும்படி நீக்கிவிடுகிறது. தத்வஹிதபுருஷார்த்த விவேகம்பிறந்து பகவானிடத்தில் ப்ரபத்தி செய்கிறவனுக்கு ஒருக்காலும் புத்திபூர்வகபாபம் ஸம்பவியாது. ப்ராரப்தவசத்தால்காலதேசங்களையநுஸரித்து புத்திபூர்வகமாகச் சிலபாபங்களைச் செய்ய நேர்ந்தால் அந்த பாபங்களைப்போக்க, ப்ராயச்சித்தம் (ஃாயஸ்ரீதவுவஃநஃ)செய்துகொள்ளும்படி தூண்டி பாபத்தைப்போக்கடிக்கும். கௌடில்யத்தாலே ப்ராயச்சித்தம்பண்ணவிசையாமலிருந்தால் காணன் கஞ்சன் முதலியவர்களாகச் செய்து பாபத்தைப் போக்கி ப்ரஸாதத்வாரா மோக்ஷந்தரும். இதையே ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அபராதபரிஹாராதிகாரத்தின் கடைசிச்லோகத்தினாலநுக்ரஹித்தருளினார். ஆகையால் இப்பெருமைவாய்ந்த ப்ரபத்தியை அவரவர்களாசார்யன்பக்கலில் ஸ்வோஜ்ஜீவனார்த்தமநுஷ்டிக்கவேண்டியதவசியமாகிறது.

ஃாரஃெஃதாவ-ஃவ-ஃாவஃவிஃ ஃா-ஃஃகூஃெஞாதூஃ ஃூாஷெந க்ஷவயஞந ஹூஃவஃத ஃாரஃுவணுஃவநஃ। யீவ-ஃ-வெஃாதூ வாவ நாஃஜநநாஜாதெவி தனிஷ்கூதெஃ கூஃிவெயூஷதி ஃிக்ஷயாவயூநவ யாநு கெ ாஃீ கரொதி ஃஃஃ॥

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீகோழியாலம்ஸ்வாமி

ஸ்ரீரங்கராமாநுஜமஹாதேசிகன் ஸப்ததப்ததபூர்த்திமஹோத்ஸவம்

'வாழி அருளாளர் வாழி அணி அத்திகிரி
வாழி எதிராசன் வாசகத்தோர்-வாழி
சரணாகதியென்னும் சார்வுடன் மற்றொன்றை
அரணாகக்கொள்ளாதார் அன்பு.'

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் இந்தப் பாசுரத்தால் செய்தருளிய மங்களாசாஸநத்தின் பெருமை கடந்த கர வருஷம் பங்குனி மாதம் முதல் நான்கு தேதிகளில் காஞ்சிமாநகரில் பல மெய்யடியார்களால் நன்கு அநுபவிக்கப்பட்டது. 'அஸ்மத்தேசிக ஸம்ப்ரதாய'மென்று ஸ்வாமி தேசிகன் கொண்டாடும் அருட்பெரும் ஸம்ப்ரதாயத்தைச்சேர்ந்த பல பெரியார்கள் பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமியினுடைய ஸப்ததப்ததபூர்த்தி மஹோத்ஸவத்தையொட்டி ஸ்ரீ ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் ஆச்ரமத்தில் குழுமினர். ஆச்ரமத்தைச்சுற்றிலும் அழகான பந்தல்களும் தீபவரிசைகளும் வெகு ரமணீயமாக அமைக்கப்பட்டிருந்தன. பங்குனி மாதம் முதல்தேதி வெள்ளிக்கிழமை இரவே வித்வத் ஸதஸ் ஸ்ரீ. உப. தேசிகதர்சன ரத்னதீபம் வீ. வீ. ஸ்ரீநிவாஸஐயங்கார் ஸ்வாமியால் உபக்ரமித்துவைக்கப்பட்டது. ஒரு ஆசார்ய ச்ரேஷ்டரது வைபவவிழாவானதுபற்றி குரு பரம்பரையின் பெருமையை அனைவரும் அறியவேண்டும் என்ற எண்ணத்தால் ஆதிகுருவானலக்ஷ்மீபதியைமுதலாகக்கொண்ட ஆசார்ய பரம்பரையைக்குறித்தே பல பண்டிதர்கள் உபந்யஸித்தார்கள். பங்குனி மாதம் இரண்டாந்தேதி காலை பெருமாள், பிராட்டி, விஷ்வக்ஸேநர் ஆகிய மூவரது ஆசார்யத்வத்தைப் பற்றி ஸ்ரீ. உப. கோழியாலம் சடகோபாசார் ஸ்வாமி உபந்யஸித்தார். அடுத்தபடியாக வகுளாபரணப்பெருமாளாகிய நம்மாழ்வாரைப் பற்றி ஸ்ரீ உப. வே. ர. ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமியும், நாதயாமுனர்கள் பெருமையை ஸ்ரீமதஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமியும், அதன்பிறகு ஸ்ரீபாஷ்யகாரரைப்பற்றி ஸ்ரீ. உப. உத்தமூர் வீரராகவசார்யஸ்வாமியும் உபந்யஸித்தார்கள். பிற்பகல் 3 மணிக்கு ஸதஸ் மறுபடி கூடியதில் 'கிடாம்பிக்குலபதி' என்று மகுடமிட்டுக்கொண்டு ஆச்சான்முதல் அப்புள்ளார்வரை ஸ்ரீ. உப. வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராமதேசிகாசார் ஸ்வாமி ஸாதித்தார். அடுத்தபடியாக ஸ்ரீ. உப. மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமி ஸ்வாமிதேசிகனைப்பற்றி ஸாதித்தார். அதன்பிறகு ஸ்ரீமதாதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் விஷயமாக ஸ்ரீ. உப. பிரம்மதேசம் தூப்புல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும், திருக்குடந்தை தேசிகன் விஷயமாக ஸ்ரீ. உப. இளையவல்லி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும், தாததேசிகன் விஷயமாக ஸ்ரீ. உப. நரஸிம்ஹதாதாசார்ய ஸ்வாமியும் உபந்யஸித்தபிறகு, பெரிய ஸ்வாமியென்று வ்யவஹரிக்கப்படும் ஸ்ரீகேதாண்டபட்டி ஸ்வாமியின் பெருமையை மதுராந்தகம் கருடபுரம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி பல ஐதிஹ்யங்களைக் கூறி உபபாதநம் செய்தருளினார். இரவு 8மணிக்கு மீண்டும் ஸதஸ் சேரவும் சின்னஸ்வாமி என்று கொண்டாடப்படும் திருவஹீந்த்ரபுரம்ஸ்வாமியைப்பற்றி ஸ்ரீ.உப. சேட்லூர் ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்வாமி உபாக்யாநங்களோடு விஸ்தாரமாக எடுத்துரைத்தார். அதன்மேல் ஸ்ரீ(சோழியாலம்) ஸ்வாமியே தமதாசார்யரான திருப்பதி ஸ்வாமியைக்குறித்து ஸாதிக்கும்படியாயிருந்தது. தமக்கு அவ்வாசார்யோத்தமன் ஸம்பந்தம் கிடைத்ததையும், அதற்கு ஸ்ரீபரமஹம்ஸேத்யாதி நம்மாண்டவன் (ஸ்ரீதேரழுந்தூர்ஸ்வாமி) முக்யகாரணமாக இருந்ததையும், வெகு அழகாகவும் கம்பீரமாகவும் ஸாதித்தருளியாயிற்று.

மறுநாள் பங்குனி மாதம் 3ம்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை '[illegible]' என்கிற விஷயம்பற்றி வித்யாரத்னாகரம் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ.உப. கொடவாசல் நர

ஸிம்ஹாசாரியஸ்வாமி உபந்யஸித்தார். அதன் மேல் 'தெலிஙம் ஹஷிணாஸீவேஸ' என்பதைக்குறித்து ஸ்ரீ. உப. கொளத்தூர் விஜய ராகவாசார்ய ஸ்வாமி ஸாதித்தார். அதற்கடுத்தபடியாக திருப்புட்குழி ஸ்வாமி யென்று ப்ரஸித்திபெற்ற மஹாபுருஷனைப்பற்றி ஸ்ரீ ஸ்வாமி (கோழியாலம் ஸ்வாமி) ஸுமார் அரை மணி காலம் வெகு அத்புதமாக ஸாதிக்கும்படி யிருந்தது. கேட்டவர் நெஞ்சு உருகும்படி வெகு அழகாக அப்பெரியாரது உயரிய குணங்களும், அவர் ஸம்ப்ரதாயத்துக்குச் செய்தருளிய மஹோபகாரங்களும் பரக்கப் புகழ்ந்து பேசப்பட்டன. குருப்ரகாசகமும் தேசிகேப்ஸையும் என்று சற்றுமுன்பு உபந்யஸிக்கப்பட்ட விஷயங்கள் இந்த அளவில் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஏற்படவேண்டுமென்று போதிக்கும்படியாயிது என்று அனைவரும் ஸ்ரீஸ்வாமிவிஷயத்தில் மிகுந்த க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்துநின்றனர்கள்.

இந்த மஹோத்ஸவஸமயத்தில் ஸ்ரீஸ்வாமி திருவடிகளில் காணிக்கையாக ஸமர்ப்பிக்க வென்று திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம் காரியதரிசி ஸ்ரீ. உப.பந்தல்குடி திருமலை ஐயங்கார் ஸ்வாமி தயாரித்திருந்த 'சீரொன்று தூப்புற்றனியன்மாலை' என்ற ஒரு சிறுபுத்தகம் அரங்கேற்றப்பட்டு ஸ்ரீஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. தமிழ்ப் பேராசிரியர்களெல்லாம் பிறமதத்தைச்சார்ந்தவரும் கூட எந்த அளவில் தேசிகன் பெருமையை அனுபவித்துப்போந்துள்ளார்கள் என்று தமது சொற்பொழிவில் திருமலை ஐயங்கார் நன்கு விளக்கினர்.

மாலை 3மணிக்கு ஸதஸ் மறுபடியும் கூடியதும் 'உபநிஷத் மஹிமா' என்ற விஷயம்பற்றி பண்டிதராஜ ஸ்ரீ. உப. திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமி ஸம்ஸ்க்ருத பாஷையில் வெகு அழகாகவும் கம்பீரமாகவும் உபந்யஸித்தருளினர். அப்புறம் வெங்கடாத்ரியகரம் பண்டிட் ஸ்ரீ. உப. அனந்தாசார்ய ஸ்வாமி ஸந்யாஸதர்மங்களைக்குறித்து ஸாதித்தருளினர். பிறகு வில்லூர் ஆசுகவி ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி யதிராஜஸப்ததியைக் குறித்து ஒரு உபந்யாஸம் செய்தருளினர். திருவரங்கம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமிதேசிகப்ரபந்தப்பாசுரங்களின் இனிமையையும் அழகையும்பற்றிப் பேசியதோடு மாலை ஸதஸ் முடிவுபெற்றது.

மீண்டும் இரவு 8மணிக்கு ஸதஸ்கூடிய போது ஸ்ரீஸ்வாமி பரமக்ருபையால் பலருக்கும் பயன்படவேண்டுமென்று தத்வஹிதபுருஷார்த்தங்களைச் சுருக்கித்தெளிவாகச் சிறுவாக்யங்களாலே தமிழில் அநுக்ரஹித்தருளிய 'உபயுக்தஸங்க்ரஹம்' என்ற ஒரு சிறு மாக்ரந்தம் அந்த ஸதஸ்ஸில் வெளியிடப்பட்டது. அதன் பிறகு ஸ்ரீஸ்வாமிசிஷ்யர்களும் சிஷ்யேதரர்களுமாகிய பல பண்டிதர்களும் பெரியோர்களும் ஸ்ரீஸ்வாமியின் அருள்பெருங்குணங்களை அவரவர் அநுபவித்தவாறு வ்யாஸரூபமாகவும் ச்லோகரூபமாயும் தமிழ்ப் பாடல்களாகவும் எழுதி அனுப்பியிருந்தவற்றை ஒரு ஸப்ததியப்தபூர்த்தி மலராக அச்சிட்டு மஹோத்ஸவ ஸமிதியின் சார்பாகவும் அங்கே திரண்டிருந்த அனைவர் சார்பாகவும் ஸ்ரீமான் ஸ்ரீ. உப ஜி. ரங்கஸ்வாமி தாதாசார்ய ஸ்வாமி ப்ரணாமபுரஸ்ஸரமாக ஸ்ரீஸ்வாமி திருவடிகளில் ஸமர்ப்பித்தார். ஸ்ரீஸ்வாமியும் போரவுகந்தருளிப் புன்னகையுடன் 'இதில் என்னைப்பற்றி ஏதாவது நல்லகுணங்களுடையவனென்று சொல்லியிருக்கப்போகிறீர்கள். உண்மையில் அந்த நல்ல குணங்களெல்லாம் என்னிடமிருக்கிறதென்று எண்ணி ப்ரமிக்கும் ஸ்வபாவம் என்னிடம் கிடையாது. உங்களுடைய நல்லெண்ணங்களுக்கு ஓர் போக்குவீடு என்றுதான் நான் இதை க்ரஹிப்பேன்' என்று ஸாதித்தாயிற்று.

ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்பற்றி திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அழகாகச்செய்த ஒரு ஸங்கீத உபந்யாஸத்துடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. ஷை திருநக்ஷத்ரமஹோத்ஸவத்திற்கு ஸ்ரீஅஹோபிலமடம் ஸ்ரீகார்யம் ஸ்ரீ. உப. வித்வான், தையார் ஜோஸ்யம், ரங்காசார்ய ஸ்வாமியும், ஸ்ரீஅழகியசிங்கர்களின் நியானத்தின்பேரில் எழுந்தருளியிருந்தார்.

மறுநாள் பங்குனி மாதம் 4ம்தேதி ஸ்ரீஸ்வாமி திருநக்ஷத்ரம் ஏராளமாகக்குழுமியிருந்த அடியார்களெல்லாம் ஸ்ரீஸ்வாமியை

அடிபணிந்து அந்த திவ்யகடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாகி பெருமாள் தீர்த்தம் வாங்கிக் கொண்டார்கள். அநந்தரம் பெருமாள் ஸம்பாவனைக்கென்று ஸ்ரீமான் பூண்டி அச்யுதகோபாலாசார்ய ஸ்வாமி வாங்கியிருந்த வெகு அத்புதமான ஒரு ஸ தராவும் நாச்சிமார்களுக்குப் பாவாடைகளும் பெரியபிராட்டியார் பெருந்தேவித்தாயாருக்கு அழகியதொரு சேலையும் ஸ்ரீகஜேந்த்ராழ்வான்மீது சத்ர சாமரங்களுடன் பெரியதொரு ஸ்தோத்ரபாடகோஷ்டி பின்தொடர நான்கு திருவீதிகள்வழியாக திருக்கோயில் ப்ரதக்ஷிணமாக ஆச்ரமத்திற்கு எழுந்தருளப்பண்ணப்பட்டன. அப்போது முதிர்ந்த வயதினராயும் பெருமாள்கோவிலைத் தற்போது அலங்கரிக்கும் மஹான்களில் ஒருவரான ஸ்ரீ. உப. அய்யா ஸ்ரீக்ருஷ்ணதாதாசார்ய ஸ்வாமி மிகுந்த திருமேனி அபாடவத்தையும் பொருட்படுத்தாது ஸ்ரீஸ்வாமி பாதங்களில் பணிந்து ஸ்ரீபாததீர்த்தம் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று இருபுறமும் இருசிஷ்யர்கள் தாங்க மெள்ள எழுந்தருளியாயிற்று. இவ்விரண்டு ஆசார்யச்ரேஷ்டர்கள் ஸந்திப்பதையும் அவர்களிடையே நடந்த ஸம்பாஷணையையும் அவர்களது சாஸ்த்ரவச்யதையையும் கேட்டும் கண்டும் அருகிருந்த ஆஸ்திகரனைவரும் உருகிக்கண்ணீர்விட்டனர். ஸ்ரீ ஐயா ஸ்வாமியின் திருமேனிநிலையைக் கடாக்ஷித்து ஸ்ரீஸ்வாமி உள்ளிருந்து பெருமாள்தீர்த்தமும் ஸ்ரீபாததீர்த்தமும் பந்தலுக்கே கொண்டெழுந்தருளி ஸ்ரீஸ்வாமிக்கு ப்ரஸாதித்தாயிற்று. ஸ்ரீஸ்வாமியின் பாகவதப்ரதிபத்தியுடையவும் ஸௌலப்யத்துடையவும் பெருமையை அனைவரும் வியந்தனர். அநந்தரம் எல்லோருக்கும் ஸ்ரீபாததீர்த்தம் ஸாதித்தருளியாயிற்று.

மாலை ஸ்ரீஸ்வாமியின் திருவடியான டில்லி பார்லிமெண்டின்உபதலைவர் ஸ்ரீ.உப. அனந்தசயனம் ஐயங்கார் ஒரு சொற்பொழிவாற்றினார். பிறகு எழுந்தருளியிருந்த வித்வான்களுக்கெல்லாம் தகுந்த ஸம்பாவனைகள் வழங்கப்பட்டன. அன்று மாலை 6 மணிக்கு அரிநகர் திருக்கோயிலுக்குச் சென்று அப்போது பல்லவ உத்ஸவம் கண்டருளிய பேரருளாளனை அடிபணிந்து இந்த ஸப்தத்யப்தபூர்த்தி மஹோத்ஸவத்தை இவ்வளவு உயர்ந்த ரீதியில் வெகு அழகாக யாதொரு குறையுமில்லாமல் நடத்திக்கொடுத்த அப்பெருமானது பேரருளைப்போற்றினர்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஸ்வர்ணம் ஸ்வாமியின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம். ஸ்ரீரங்கம்.

நாளது வைகாசி மாதம் 7ம்தேதி ரேவதீ திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யராய் உபயவேதாந்தாசார்யராய் க்ஷாந்திசமதமாத்யநந்தகல்யாணகுணபரிபூர்ணராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீஸ்வர்ணம் ஸ்வாமியினுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஸ்ரீரங்கம்வடக்குஉத்தரவீதியில் புத்தங்கோட்டகம் ஸ்ரீ தேசிகதர்சநவிஜயத்வஜர் ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி திருமாளிகையில் ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாதி ஸகலபிருதாலங்க்ருதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீஅழகியசிங்கருடைய நியமநத்தின்பேரில் வழக்கம்போல முதல்நாள் ஆரம்பிக்கப்பட்டு நடந்தது. ஸ்ரீரங்கவாஸிகளான ஸகலவைதிகஸ்ரீவைஷ்ணவர்களும் வேதபாராயணம் திவ்யப்ரபந்தாத்யயநம் ஸ்ரீமத்ராமாயணாதிக்ரந்தபாராயணாதிகளை இரண்டு தினங்களும் ச்ரத்தையோடு ஸேவித்தார்கள். ஸ்ரீ எம். பி. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்ரீரங்கம் கோயில் டிரஸ்டி ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியர் முதலான லௌகிக ப்ரமுகர்களும் வந்திருந்தார்கள். செவ்வாய்க்கிழமை 10-மணி ஸுமாருக்கு உபய வேதபாராயணங்களும் க்ரந்தபாராயணங்களும் முடிந்து சாற்றுமறைகளும் பூர்வாசார்ய ஸம்பாவனைகளும் ஏகாதசீ வ்ரதத்தை அநுஸரித்து கோஷ்டிவிநியோகங்களும் கைங்கர்யத்தில் அர்வயித்த ஸ்வாமிகளுக்கு ஸம்மானங்களும் செய்யப்பட்டது.

மறுதினம் த்வாதசீ காலையில் 8மணிக்கு

ஷை கைங்கர்யத்தில் அந்வயித்த வைதிகவித்வான்களுக்கும் சிஷ்யவர்க்கங்களுக்கும் ஸுஹ்ருத்துக்களுக்கும் வயோதிகைகளான ஸ்த்ரீ ஜனங்களுக்கும் விசேஷ ததீயாராதனமும் ஸ்ரீஸ்வாமிபால் நடத்தப்பட்டது.

ந. க்ருஷ்ணதாஸன்.

ஸ்ரீ க்ருஷ்ணஸபா மாதுங்கா

ஷை ஸபையின் ஆதரவில் 20-4-52 முதல் 29-4-52 வரை ப்ரத்யேகமாய் அமைக்கப்பட்ட பந்தலில் ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. இரு வேளைகளிலும் விசேஷ திருமஞ்ஜந அர்ச்சனை ஆராதநங்களும், ஸாமவேத, யஜுர்வேத (அசீதி) பாராயணங்களும், நாலாயிர திவ்யப்ரபந்தஸேவையும், ஸ்ரீபாஷ்ய கீதா பாஷ்யாதிக்ரந்தங்களுடன் ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீமத்பாகவதம், ஸ்ரீவிஷ்ணுபுராணம், ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம் முதலான க்ரந்தபாராயணங்களும் நடந்தது. 29-4-52ல் சாற்றுமறையுடன் உத்ஸவத்தை திவ்யமாய் ஸ்ரீமதாசார்யாள் நடத்திக்கொண்டார்கள். வேதபாராயண ஸ்வாமிகளுக்கு ஸம்பாவனையும் செய்யப்பட்டு உத்ஸவம் பூர்த்தியடைந்தது.

உத்ஸவகாலத்தில் ஸ்ரீமத்ராமாயண தத்வோபதேசக கே. ராமஸ்வாமி ஐயங்காரும் (ரிடையர்ட் அபிஷியல் பி. எம். ஜீஎஸ் ஆபீஸ் மதராஸ்) கனம்பொருந்திய ஸ்ரீ. உப. அனந்தசயனம் ஐயங்கார் (டிப்டி ஸ்பீகர் இந்தியா பார்லிமெண்ட்) ஸ்வாமியும் ஸ்ரீபாஷ்யகாரர் விஷயமாய் உபந்யாஸங்கள் செய்தார்கள்.

ப்ரதிஸம்வத்ஸரமும் ஸ்ரீஜயந்தி, ஸ்ரீபகவத் ராமானுஜ ஜயந்தி உத்ஸவங்களுக்காக பம்பாயிலுள்ள ஸ்ரீவைஷ்ணவஸமூஹம் ஏகோபித்து ஒரு பெரிய தனியிடமில்லாமல் வாடகைக்கு இடந்தேடி மண்டபம் முதலியவைகளுக்காக அதிக சிலவுசெய்து ச்ரமப்பட்டுக்கொண்டு வருவதை ஷை ஸ்ரீ அனந்தசயனம் ஐயங்கார் ஸ்வாமியினிடம் தெரிவித்ததின்பேரில், அந்த ஸ்வாமி வெகுக்ருபையுடன் தன்னாலியன்ற வாக்ஸஹாயம் செய்வதாய் ஒத்துக்கொண்டார். இதற்காக ப்ரத்யேகமான கட்டிடநிர்மாண கைங்கர்யத்தை ஆரம்பக்கத்தில் எழுந்தருளியிருக்கும் நம் ஸம்ப்ரதாயமடாதிபதிகளெல்லாரும் உத்ஸாஹத்துடனும் ஔதார்யத்துடனும் அவசியம் செய்துவைக்கும்படியாக ப்ரார்த்திக்கிறோம்.

நடாதூர் கேசவன்
பம்பாய். ஸ்ரீ. பார்த்தஸாரதி
கார்யதரிசிகள்

உபந்யாஸங்கள்

திருவள்ளூர்

நடந்த கரவருஷம் பங்குனி மாதம் 30ந்தேதி முதல் ஸ்ரீ அழகியசிங்கர்களின் நியமநத்தின் பேரிலும், திருவள்ளூர் வாஸிகளான ஆஸ்திகர்களின் ப்ரார்த்தனையின்பேரிலும் அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்யர் ஸ்வாமி தென்குளக்கரைத்தெருவிலுள்ள க்ருஷ்ணன் ஸந்நிதியில் மிகவும் அழகாக ஒருவாரம் உபந்யாஸங்கள் செய்தருளினார். இவ்வுபந்யாஸத்தை நாலு வர்ணத்தவர்களும் கேட்டுக் களிப்புறறனர்.

கடைசிதினத்தன்று ஸ்ரீஸ்வாமிக்குத் தக்க ஸம்பாவனையும் செய்தார்கள். அவ்வமயம் இன்னும் ஒருமாதகாலம் இம்மாதிரி உபந்யாஸங்கள் செய்யவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். ஆயினும் இந்தியாவின் தலைநகரான டில்லிமாநகரிலுள்ள ஆஸ்திகர்களின் ப்ரார்த்தனைக்கிணங்கி அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவஸபையின் வருஷாந்திரக் கொண்டாட்டத்திற்குத் தலைமைவஹிக்கச் செல்வதால் திரும்பிவந்து உபந்யாஸம் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இவ்வூர் வாஸிகளும் அந்நந்நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஷை தினத்தன்று ஸ்ரீஸந்நிதியில் ஸ்ரீஸந்நிதி ஸ்ரீகார்யம் ஸ்ரீ. உப. வித்வான் தையார் மாடபூசி ஜோ. ரங்காசார்யஸ்வாமி 'யோநித்யமச்யுத' என்கிற தனியனைப்பற்றி செவிக்கினிய செஞ்சொற்களால் மிகவும் ரஸமாக உபந்யாஸம் செய்தருளினார்.

இப்படிக்கு
அ. நரஸிம்ஹாசார்யர்.

நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்

நிகழும் நந்தன வருஷம் வைகாசி மாதம் 24ந்தேதி வெள்ளிக்கிழமை ஸ்ரீ அஹோபில மடத்தில் நம்மாழ்வார் திருநக்ஷத்ரம் விசேஷமாகக்கொண்டாடப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கர்களை தண்டம் ஸமர்ப்பிப்பதற்கு எழுந்தருளிய ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான் தேசிகதர்சநவிஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கர்களின் நியமநத்தின்பேரில் ஆழ்வாரின் ஜ்ஞாநபக்திவைராக்யாநுஷ்டாநங்களைப் பற்றியும், ஸ்ரீஸந்நிதிக்கு ஆழ்வாரின் அஸாதாரண ஸம்பந்தம் ஏற்பட்டிருப்பதைப்பற்றியும் ஸுமார் 2மணிகாலம் மிகவும் அழகாக உபந்யாஸம் செய்தருளினார்.

ஸ்ரீரங்கநாதயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் திருவள்ளூர்

ஸ்ரீஸந்நிதியில் ஸ்ரீகளத்தூர் அழகியசிங்கர் திருநக்ஷத்ரம் நாளது வைகாசிமீ 17உ வேத ப்ரபந்த, ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தசதுஷ்டய இதிஹாஸ புராணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு, பத்து தினங்கள் நடந்தது. இத்திருநக்ஷத்ரமஹோத்ஸவத்திற்கு மதுராந்தகம் முதலிய இடங்களிலிருந்து அநேக வித்வான்கள் எழுந்தருளியிருந்தார்கள். திருநக்ஷத்ர தினமாகிய 26உ திருக்கேட்டையன்று ஸ்ரீ அஹோபிலமடம் திவ்யஸ்தாநத்தில் 35-வது பட்டத்தில் மூர்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீரங்கநாதயதீந்த்ரமஹாதேசிகனை (ஸ்ரீகளத்தூர் அழகியசிங்கரை) தென்குளக்கரைத் தெருவிலுள்ள ப்ருந்தாவனத்திலிருந்து சத்ரசாமரவாத்தியகோஷங்களுடன் பெரியதான வேதபாராயணகோஷ்டி பின்தொடர ஸ்ரீஸந்நிதிக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து, ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸ்ரீ அழகியசிங்கர்கள் 'நல்லைநெஞ்சே' முதலிய பாசுரங்களால் மங்களாசாஸநம் பண்ணிவைத்தார்கள். பிறகு ஸ்ரீந்ருஸிம்ஹன் பரியாதைகள் அர்ச்சாரூபியான ஸ்ரீ அழகியசிங்கருக்குச் செய்யப்பட்டு சாத்துமறை ஸம்பாவனைகள் க்ரமமாக நடந்தது.

அன்று ஸாயங்காலம் ஸ்ரீ தேசிகதர்சநவிஜயத்வஜ ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான் புத்தங்கோட்டகம் ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கரின் ஜ்ஞாநவைராக்யாதிகளையும், முக்யமாக தாத்ருத்வத்தையும் பற்றி கேட்பவர்கள் நெஞ்சுருகும்படி உபந்யாஸம் செய்தருளினார். இதைக்கேட்டவர்கள் 'ஸுஹோஸாஸ்ரு ஹோஸாஸ்ரும்' என்று சொன்னார்கள். ஸ்ரீஸ்வாமிக்கு ஸ்ரீ அழகியசிங்கரால் விசேஷஸம்பாவனையும் அநுக்ரஹிக்கப்பட்டது.

ஓர் நற்செய்தி

ஸ்ரீ அழகியசிங்கர் பம்பாயிலும் ஒரு மடம் நிர்மாணிக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி செம்பூர் என்னுமிடத்தில் ஸுமார் 12,000 ரூபாயில் பூமி வாங்கி அதன் சாஸநமும் ரிஜிஸ்டராகி இன்றையதினம் (14-6-52) இங்கு வந்து சேர்ந்தது. இன்னும் 2 மாதங்களில் அதில் கட்டிடம்கட்ட ஆரம்பிக்கத் திருவுள்ளம்பற்றியாயிருக்கிறது.

தையார் வித்வான், ஜோ, ரங்காசாரியார்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீகார்யம்
திருவள்ளூர்

ஸ்ரீ:

நம்முடைய ஸமூஹவாழ்க்கையின் நிலைமை

சென்ற ஐம்பது வருஷங்களாகவும், முக்கியமாக ஸமீபத்தில் இருபது வருஷங்களாகவும், நம்முடைய ஸமூஹநிலைமை குன்றிவருகின்றது என்பது அநேகமாக எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். இவ்விதமாகவே இன்னும் சிலகாலம் தொடர்ந்துவந்தால் அந்த நிலைமையின் பழையஸ்வரூபமே முற்றிலும் மாறிவிடும் என்று நினைக்கும்படியாக இருக்கிறது. அம்மாறுதல் நம்முடைய வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் ப்ரவேசித்துவிட்டது என்பதையும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அதின் காரணங்கள் என்ன? அதனால் உண்டான நன்மை தீமைகள் என்ன? நன்மைகளை வ்ருத்திசெய்யவும், தீமைகளைத் தடுப்பதற்

கும் என்ன வழிகளை நாம் தேடவேண்டும் என்பதை நாம் பொதுப்படையாக முக்கியமாக கவனிக்கவேண்டும். வாழ்க்கை வித்தியாஸங்கள் தொன்றுதொட்டகாலமாக வந்துகொண்டிருப்பது உலக ஸ்வபாவமாயினும், முன் காலத்தில் அவ்வித்யாஸங்கள் ஜனங்களுக்குள் யாதொரு முரண்பாடு ஏற்படமாலும், அவைகளினால் உண்டாகும் ப்ரயோஜனத்தை ஆராய்ந்து தெரிந்துகொள்வதற்கு போதுமான அவகாசம் கொடுத்துக்கொண்டும் வந்தன. தற்காலமாறுதல்களோ அப்படிக்கில்லாமல் ஒன்றின்பின் ஒன்றாய் மிகத்துரிதமாக வந்துகொண்டு ஒரு தலைமுறைக்கும் அடுத்ததற்குமே பல வித்யாஸங்களை உண்டுபண்ணி வாழ்க்கை முழுவதையும் வேறுவழியில் கொண்டுபோய்விடுவதாய் இருக்கின்றன. அவைகளைப்பற்றி பலருக்கு பலவிதமான அபிப்ராயபேதங்கள் இருக்கக்கூடும். ஆயினும் இப்பத்திரிகை ஸநாதநதர்மத்தை ஒட்டினதானபடியால் அத்தர்மம் ஓங்கவேண்டுமானால், நம் மதத்தைச்சேர்ந்த ஆஸ்திகர்கள் அனைவரும் அவைகளைப்பற்றிப் பராமர்சிக்கவேண்டியது கடமை என்பதை இப்பத்திரிகையின் மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளலாம் என்று நினைத்து, அவற்றின் குணதணங்களை விவரமாக ஆராய்ச்சிசெய்யவேண்டும் என்று எண்ணங்கொண்டு, அடியேனுக்குத் தோன்றிய அபிப்பிராயங்களை வெளியிடத் துணிகிறேன். வாசகர்கள் க்ருபைசெய்து ஆலோசிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

உலகவாழ்க்கையில் நடைபெறும் விஷயங்கள் கணக்கில்லாமல் இருக்கின்றன. முக்யமாக தேஹ ஆரோக்யம், உணவு, நடைஉடைபாவனைகள், குலாசாரங்கள், குடும்பவாழ்க்கை, கல்வி, தொழில், மதம், சட்டதிட்டங்கள், அரசியல் விஷயங்கள், இன்னும் அளவில்லாத வழிகளில் நாம் நம்முடைய தினசரிவாழ்க்கையைக் கவனித்துக்கொண்டுவருகிறோம். இவைகளில் வெகு விரைவாக மாறுதல்கள் ஏற்படுவதையும், பெரும்பாலும் சிறுவர்களே அவைகளில் ஸம்பந்தப்பட்டவர்களாக இருப்பதையும் உத்தேசித்து, அவைகளின் நன்மைதீமைகளை பெரியோர்கள் எடுத்துக்காட்டவேண்டியது கடமையாகும். பெரியோர்களுடைய அனுபவத்தைக்கொண்டும் சாஸ்த்ரரீதியாகவும் அந்த மாறுதல்கள் எவ்விதமாக ஜனங்களைப் பாதிக்கின்றன என்பதைத்தெரிவித்து, அதற்குத்தக்க பரிஹாரங்களைக்குறித்துக்காட்டுவது இவ்வியாஸத்தின் முக்கிய நோக்கமாகும்.

தற்காலநிலைமைக்கு மூலகாரணமாய் இருப்பது மேல்நாட்டு நாகரீகம். அது இஹலோகஸுகங்களையே முக்யமாகக் கருதும் தன்மையை உடையது. வாழ்க்கைநிலையை உயர்த்த(ரைஸிங் திஸ்டாண்டர்ட் ஆப் லைப்) என்ற கொள்கையை அஸ்திவாரமாச வைத்து அதன்மேல் படிப்படியாகக் கட்டப்பட்டிருக்கிறது. அதாவது— தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய ஸாதனங்களை அதிகரித்துக்கொண்டேபோகும் வழியைப்பற்றியிருக்கிறது. மேல்நாட்டார்கள் தங்களுடைய வாழ்க்கை முழுவதையும் இஹலோகத்திற்கே ப்ரயோஜனப்படும்படியான வழிகளில் செலுத்திவருகிறார்கள். ஆகையால் இஹலோகஸாதனங்களை வ்ருத்தி செய்யக்கூடிய வழிகளிலேயே அவர்களுடைய புத்தி செலுத்தப்பட்டு இஹலோகஸுகத்தையே நாடிவருகிறது. ஆசைக்கு ஓர் அளவில்லையானபடியால், ஸுகங்களும் அவைகளைக் கொடுக்கின்ற பொருள்களும் மேன்மேலும் விருத்திசெய்யப்பட்டும், அதற்கு ஒரு எல்லை ஏற்படாமல் இன்னும் புதிதுபுதிதான ஸுகங்களையும் ஸுகக்கருவிகளையும் தேடிவருகிறார்கள். முக்கியமாக யந்திரங்களினால் உண்டாகும் ஸௌகர்யங்களை அதிகப்படுத்திக்கொண்டேவருகிறார்கள். ரேடியோக்கள், ஸினிமாப்படங்கள், ஆகாயவிமானங்கள் முதலியவைகளே இதற்கு நல்ல திருஷ்டாந்தங்களாகும். ஸௌகரியப்பொருள்கள் தங்களுடைய தேசத்தில்கிடைக்காவிட்டால் இதர தேசங்களிலிருந்து கைப்பற்ற ஆசைப்பட்டு ஒருவருக்கொருவர் போட்டியினால் விரோதங்கள் உண்டாகின்றன. ஆகையினால் இந்த ஸௌகர்யங்கள் இதோடு நிற்காமல் யுத்ததளவாடங்கள் விஷயத்திலும் கையாளப்பட்டு, மிகவும் தீவ்ரமான பீரங்கிகள் முதலிய நாசக்கருவிகளும், 'ஸப்மெரீன்' என்ற பெயர்கொண்ட கடல்மூழ்கிகளான சண்டைக்கப்பல்களும், சண்டைக்குரிய ஆகாயவிமானங்களும் நாட்டையே அழித்து எல்லாவற்றைக்காட்டிலும்

மிகவும் அதிகமாக தீங்கு செய்யக்கூடிய அணு குண்டுகளும், தயார்செய்யப்பட்டுவருகின்றன. மேல்நாட்டார்களுக்குள் ஸுமார் 35-வருஷங்களுக்கு முன் ஒரு தீவ்ரமான யுத்தம் நடந்தது. மறுபடியும் 12 வருஷங்களுக்குமுன் ஆரம்பித்து, அதைக்காட்டிலும் கோரமாக பூலோகம் முழுவதையும்வளைத்துக்கொண்டு மற்றொரு யுத்தம் நடந்தது. முதல்யுத்தம் 4 வருஷகாலமும் இரண்டாவது யுத்தம் 6வருஷ காலமும் நடந்து, அவற்றில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மடிந்தார்கள். கோடிக்கணக்கான பொருள்கள் நஷ்டமாயின. எந்த ஸாதனங்களுக்காக ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு ஆசைப்பட்டார்களோ, அவைகளையெல்லாம் இழந்து, ஜயித்தவர் தோற்றவர் இருவரும் ஒரேவிதமான தீனதசையை அடைந்துவிட்டார்கள். பிறகு அந்தந்த தேசத்திற்குத் தக்கவாறு முயற்சிசெய்து ஒருவாறாக தங்களுடைய முக்கிய பொருள்களை உற்பத்திசெய்துவரத்தலைப்பட்டுவருகிறார்கள். ஆயினும் முன்சொல்லிய கொள்கைப்படி மேன்மேலும் ஸௌகர்யப்பொருள்களை அடையவேண்டும் என்ற மனப்பான்மை முன்னைக்காட்டிலும் அதிகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. ஆகையினால் அவர்களுக்குள் வைரம் கொஞ்சமேனும் குறையவில்லை. இந்த யுத்தங்களினால் அவர்களுடைய வாழ்க்கைத் துறைகளில் பலவிதமான மாறுதல்கள் ஏற்பட்டு தேச அமைதியே இல்லாமற்போய் ஒருவருக்கொருவர் இன்னும் சீறிக்கொண்டு ஓய்வில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் யுத்தத்திற்கு ஸன்னத்தர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்குள் குழப்பங்கொண்டு எந்த ஸமயத்தில் மறுபடியும் யுத்தம் ஆரம்பித்து, கோரமான ஸம்பவங்கள் நேர்ந்து, கோடிக்கணக்கான உயிர்களை நாசம்செய்து, நாடுகளையும் சீர்குலையும்படியாகப் பண்ணிவிடுமோ என்ற பயத்தினால், மனத்தில் அமைதி இல்லாமல், எப்போதும் மனக்கலக்கமும் பீதியும் உள்ளவர்களாய் அவர்கள் காலத்தைக்கழித்துவருகிறார்கள்.

நம்முடைய தேசத்தில் இங்கிலீஷ்காரர்களுடைய ராஜாங்கம் ஏற்பட்டதுமுதல், இவ்விதமான நாகரீகம் நம்மையும் கைப்பற்றிவிட்டது. அது கொஞ்சம்கொஞ்சமாகத் தலையிட்டுக்கொண்டு, கடைசியாக நம்முடைய நித்தியப்படி நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் கலந்துகொண்டு, நம்முடைய புராதனக்கொள்கைகளை விட்டு நாம் பலவிதமாக மாறும்படி செய்துவிட்டது. மேல்நாட்டார்கள் எல்லா ஸுகங்களையும் அனுபவிப்பதைப் பார்த்து நாமும் அவைகளுக்கு ஆசைப்பட்டு, அவர்களைப் பின்பற்றிவருகிறோம். அதனுடைய பலனை நம்முடைய ஸமூஹத்தில் மிகவும் ஆஸ்திக்யக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் போலவே நாமும் மற்ற விஷயங்களைத்துறந்துவிட்டு பொருள் ஸம்பாதித்து விருத்தியடைய வேண்டும் என்ற கொள்கையையே முக்கியமாக அங்கீகரிக்கத் தலைப்பட்டிருக்கிறோம். ஆகையால் அவர்கள் அதனால் எவ்வித பலனை அடைந்தார்களோ அவ்வித பலனை நாமும் கூடியசீக்கிரத்தில் அடையும்படியான ஸ்திதியில் இருக்கிறோம்.

மேற்சொல்லியபடி தினசரி வாழ்க்கையை உயர்த்தல் என்ற கொள்கையை ஆதரிப்பவர்கள் அது எந்ததேசத்திலும் எந்த ஜனங்களாலும் வைத்துக்கொள்ளமுடியுமா என்பதை கவனிப்பதில்லை. உலகத்தில் உள்ள தேசங்களுக்குள் பலவித வேற்றுமைகள் உண்டு. நிலத்தின் செழிப்பு, வளமை, சீதோஷ்ணஸ்திதி, ஜலாதாரம், நதீதீரம் முதலியவைகள், மலைப்ரதேசம், காடு, வனாந்தரங்களை உடைத்தல் பூமியின் கீழ் பற்பல உலோகங்களும் நிலக்கரி முதலியவை கிடைப்பது, இன்னும் பலவகைகளிலும் தேசத்திற்கு தேசம் வித்தியாஸம் காணப்படுகிறது. அவைகளினால் அந்தந்த தேசங்களில் வஸிக்கும் ஜனங்களுடைய குணாகுணங்கள், பழக்கவழக்கங்கள், நடையுடைபாவனைகள் அந்தந்த தேசங்களுக்கு ஏற்றதாய் அமையப்பெற்றிருக்கும். ஒருதேசத்தில் உள்ளவைகள் மற்றொரு தேசத்திற்கு ஏற்றதாக இருக்கமாட்டா. ஒருவகை ஜனங்களுக்குப் பொருந்தியவைகள் மற்றொருவகை ஜனங்களுக்குப் பொருந்தமாட்டா. எந்த தேசத்து ஜனங்களுக்கும் உணவு, குடியிருக்க வீடு, உடை இம்மூன்றும் முக்கியமாக வேண்டியவை. இவைகள் ஸுலபமாக கிடைத்துவிட்டால் மனிதர்களுடைய புத்தியானது நல்லவழியில் செலுத்

தப்பட்டு நற்குண நற்செய்கைகளில் ப்ரவேசிக்கும். அதன்வழியாக இதரதொழில்கள், விஜ்ஞானஶாஸ்த்ரங்கள்முதலியவை வ்ருத்தியாகும். கடவுளின் க்ருபையால் எல்லாம் கிடைக்கின்றன என்றுநினைத்து ஆஸ்திக்யபுத்தி உண்டாகும். நம்முடைய தேசத்தில் பெரும்பாலும் வ்யவஸாயத்தொழில் ஏற்பட்டிருக்கிறபடியால் எப்போதும் உணவுக்குக் குறைவில்லை. தேசம் விசாலமானபடியால் எல்லோருக்கும் குடியிருக்க இடம் இருக்கிறது. உடுக்கவேண்டிய ஆடைகளுக்கு நெசவுத் தொழிலாளர் செய்துவரும் ஸாமான்களே போதுமானவை. இவைகளில் குறைவில்லாமலிருந்தபடியால் மற்றக் கலைகளிலும் (Fine Arts) புத்தி ப்ரவேசித்து மற்ற ஶாஸ்த்ரங்களும் வ்ருத்தியாய்க் கொண்டு வந்தன. ஆஸ்திக்யபுத்தியினால் மிகவும் நுட்பமான நூல்கள் எழுதப்பட்டுவந்தன. அற்புதமான சித்ரங்கள்வரையப்பட்டுவந்தன. மிகப்பெரியவையான கோயில்கள் கட்டப்பட்டன. பெருவாரியாக வெளிதேசங்களுடன் வ்யாபாரம் செய்யப்பட்டுவந்தது. தற்காலத்தில் இவையெல்லாம் நின்றுபோய் முக்யமான இந்தமூன்று அம்சங்களுக்கே குறைவு ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணமானது நாம் நம்முடைய தேசத்திற்குப் பொருந்தின வழக்கங்களை விட்டுவிட்டு மேல்நாட்டாருடைய வழக்கங்களையும் கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டது தவிர வேறல்ல.

ஐரோப்பிய தேசங்களில் அநேகமாக உணவுப்பொருள்கள் குடிகளுக்கு வேண்டிய அளவு கிடைக்கிறதில்லை. அதனால் அங்குள்ளவர்கள் இதர ஸாமான்களை உற்பத்திசெய்து வெளிதேசங்களில் விற்று அவைகளைக்கொண்டு கிடைக்கும் த்ரவ்யத்தினால் உணவுப்பொருள்களைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆதலால் அவர்களுடைய மனம் ஸாமான்களைப் பெருக்கும் வழியிலேயே செல்லுகிறது. யந்த்ர ஸாதனங்களைக்கொண்டு அளவுக்குமேல் உற்பத்திசெய்து அயல்நாடுகளில் கொண்டுத்தள்ளி லாபம் அடைகிறார்கள். அந்த ருசி மேன்மேலும் ஏற்பட்டு இந்த ஸாமான்களை இன்றியமையாதவைகளாகக் கருதுகிறார்கள். அது அவர்கள் தேசத்துக்குத் தகும்; நமக்குத்தகுதியல்ல என்று நாம் நினைத்தால் ஸுகமாக வாழலாம். அனாவச்யமான ஸாமான்களை நீக்கிவிட்டால் நம் நாட்டின் தற்கால வறுமை மறைந்துபோய்விடும். வாழ்க்கை நிலையை உயர்த்தல் என்பதற்குப் பதிலாக வருமானத்தை அதிகப்படுத்த வழிதேடுவதுதான் நமக்கு அவச்யமாகும்.

மேல்நாட்டு நாகரீகத்தை நாம் பின்பற்றினதின் பலனாக நமக்குள் ஆஸ்திக்யக் குறைவுகவும் உண்டாயிருக்கிறது. ஆஸ்திக்யக்குறைவினால் மற்றகெடுதல்களும் தொடர்ந்துவருகின்றன. அந்தவழியில்நாம் இறங்கக்கூடாதென்று நம்முடையமுன்னோர்கள் எடுத்துக்காட்டியும், ஶாஸ்த்ரங்கள் புராணஇதிஹாஸங்கள் வழியாய் நன்றாகப் புலப்படுத்தியும், நாம் அவைகளை அசட்டை செய்து வருகிறோம். மேல்நாட்டு வழக்கங்கள் நமக்கு தகுந்தவைகள் அல்லவென்றும், அவைகள்நமக்கு தீங்குவிளைவிக்குமென்றும் தெரிந்துகொண்டே அந்த வழியிலேயே நாம் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டுசெல்கிறோம். நம்முடையசிறுவர்களோ புராதன வழிகளைப் பற்றுவதற்குவேண்டிய ஜ்ஞானமில்லாதவர்கள். நம்முடைய தவறுதலினால் அவைகளை அவர்களுக்குக் கற்பித்தல் நின்றுவிட்டபடியால் அவர்களுக்கு நவீனநாகரீகம் தவிரவேறொன்றும் ஸரியானதல்ல என்றபுத்தி இருப்பது ஆச்சரியமல்ல. நல்வழிகளைப் போதித்து அவர்களை திருத்துவது நம்முடையகடமையாகும். இல்லாவிட்டால்இந்தமோசம் அதிகரித்து அவர்கள் வயதுமுதிர்ந்தபின் திருத்த முடியாமற் போய்விடுவார்கள் இப்போதே அதிலுள்ள கெடுதல்களை எடுத்துக்காட்டி அவர்கள் போகும் வழி ஸரியல்ல என்று மனத்தில் பதியும்படியாக செய்தால் அவர்களே தங்களை திருத்திக்கொண்டு நம்முடைய ஸநாதன தர்மத்தின் மஹிமையை அறிந்துகொண்டு அதை நிலைநிறுத்த முன்வருவார்கள். ஆகையால் சீர்கெடுக்கக்கூடிய கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் ஆராய்ச்சி செய்து தெரியப்படுத்தவேண்டும்.

நம்முடைய பாரத நாட்டின் வாழ்க்கையானது ஸம்ஸ்க்ருதநாகரீகம் அல்லது ஸம்ஸ்க்ருதப்பண்பாடு (Sanskrit Culture) என்பதை (தொடர்ச்சி அட்டை 3-ம் பக்கம்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸமீக்ஷாதோஷ சிகித்ஸா

[ஸ்ரீ.உப. வித்வான், ரா. பத்மநாபாசார்யஸ்வாமி, வேதாந்தசிரோமணி, நெடுந்தெரு.]

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் சென்ற கர-வ்ருஷ புரட்டாசி மாதத்திய ஆசார்யஜயந்திமலரில் ஸ்ரீதேசிகன், ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன், திருவடிகளில் மெய்யன்பு பூண்ட பலபல பெரியோர்கள் அரும்பெரும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டதும் அதனுள் அடியேனால் 'திருவோணமும் திருக்கேட்டையும்' என்கிற கட்டுரை ஒன்று எழுதப்பட்டு வெளியிடப்பெற்றிருப்பதும் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா வாசகமஹாசயர்களுக்குத் தெரிந்ததேயாகும். அம்மலரில் சொல்லிய விஷயங்களை விமர்சிப்பதாகச் சொல்லிக்கொண்டு சிலர் அழையாவிருந்தாய் நுழைந்துகொண்டு 'ஸ்ரீ ராமானுஜன் தனிமலர்' என்று ஒரு ஸஞ்சிகையை 'ஸதுபதேசசிக்ஷா' 'ந்ருஸிம்ஹப்ரியா ஸமீக்ஷா' என்கிற இரு பகுதிகளுடன் வெளியிட்டுத் தமக்கு பாகவதோத்தமபசாரத்தில் ஸஹஜமாயுள்ள நாவன்மையும், தூஷணாசார்யஸ்வபாவத்தையும் தற்புகழ்ச்சியில் நிகரில்லா நைபுண்யத்தையும் நிலைநிறுத்திக்கொண்டுநிற்பதும், ஸதுபதேச சிக்ஷைக்குப் பதிலாகப் பலபல சிக்ஷைகளை ஸ்ரீஸந்நிதி ஆஸ்தான வித்வான் முக்கூர் ராஜகோபாலாச்சாரியார் ஸ்வாமி வெளியிட்டு தூஷணாசார்யரை சிக்ஷித்திருப்பதும், பலர் அறிந்திருக்கலாம்.

இப்போது 'ஸமீக்ஷாதோஷ சிகித்ஸா' என்னும் இக்கட்டுரையில் ஸமீக்ஷையில் உள்ள பலபல தோஷங்களுக்கு உதாஹரணமாக அதில் உள்ள சில தோஷங்கள் காட்டப்படுகின்றன—பார்வையில் பித்தநீர் நிரம்பிநிற்கும் ஒருவருக்கு பித்தநாசகமான அஞ்ஜநசிகித்ஸை கிடைக்கப்பெறுதவரையில் எத்துணை வெளிச்சம் இருந்தபோதிலும் சங்கத்தின் வெண்மையானது உள்ளபடி தோன்றுமல் மஞ்சளாகவே தோன்றுவதுபோல் மேல்கூறிய ஸமீக்ஷகர்க்கும் அணிதூப்புல் நிகமாந்தாசாரியரிடத்திலும், அவர் கோதிலாத்தாள்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தீதிலாநல்லோரிடத்திலும் அன்பு நாடகமும் ஆந்தரத்வேஷமும் ஒழிந்து பரமார்த்தமான பக்தியென்னும் அஞ்ஜநம் கிடைக்கப்பெறுத நிலைமையில் எத்தனை க்ரந்தமாலைகள் இருந்தாலும் 'யத் ஸ்வஜஸ்ரவஸிரஹஸ்திஹீநா: தேஷாஜீவிதவி தைவ யதாயதைவாய: । வித்வஜ்ஜநோநாவந்ஷி ஜாத தே நதே தைவவ்யாஹாவிதவி ஸஜ்வவிதக்ஷவஷ்டி:॥' என்று ஆழ்வான் எம்பெருமான்திறத்தில் அருளிச்செய்தகணக்கிலே ஜயந்திமலரில் உள்ள கருத்துக்களின் உண்மை உள்ளபடி தோன்றுததில் வியப்பொன்றுமில்லை.

ஸமீக்ஷை 1-ம்பக்கத்தில் 'வாதாசனவரிவரெனவருமாபாஷ்யம் வகைபெறுநாள்' இத்யாதியான தேசிகன்வாழித்திருநாமத்தை வ்யாக்யாநிக்கிறுர்' என்றும் 'இவ்வாழித்திருநாமச்செய்யுள்' என்றும் இரண்டு இடத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

திருப்பல்லாண்டு முதலான ப்ரபந்தநாமங்கள் அப்ப்ரபந்தத்தில் உள்ள முதல் சொல்லையும் பொருளையும் குறிப்பாகக்கொண்டும், 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' முதலான நாமங்கள் அப்ப்ரபந்தத்தின் முதற்சொல்லையே குறிப்பாகக்கொண்டும் மற்றும் சில ப்ரபந்த நாமங்கள் அதன் பொருளையாவது வக்தாவையாவது குறிப்பாகக்கொண்டும் அப்ப்ரபந்தங்களுக்கு திருநாமங்களாக இடப்பெற்று அந்தந்த ப்ரபந்தங்களுக்கு போதகங்களாய் அமைந்திருக்கின்றன. அதுபோலவே 'வாழியிராமநுசப்பிள்ளான் மாதகவால் வாழ் அணிநிகமாந்தகுரு' என்பது முதலான சொற்றொடர்கள் வாழ்த்துப்பொருளையும் அச்சொல்லையும் கொண்டதாக இருப்பதால் அவைகளுக்கே 'ஸ்ரீ தேசிகன் வாழித்திருநாமம்' என்கிற பெயர் நிரூபகர்களான பெரியோர்களால் இடப்பெற்று வ்யவஹரிக்கப்பட்டுவருகிறதே ஒழிய ஸ்ரீ தேசிகன் திருநாள்

பாட்டாகிய 'வாதாசனவரரிவரென' இத்யாதியான பாட்டை நிரூபகர்கள் ஒருவரும் 'ஸ்ரீதேசிகன் வாழித்திருநாமம்' என்று வ்யவஹரித்துக்கேட்டதில்லை. இப்பாட்டுக்கு இதன் பொருளுக்கும் சொல்லுக்கும் ஏற்ப, ஸ்ரீ தேசிகன் திருநாள்பாட்டு என்றுதான் பெயரிட்டு வ்யவஹரித்துவருகிறார்கள். இவ்விதம் அர்த்தௌசித்யத்தாலும், அபியுக்தவ்யஹாரத்தாலும், 'வாதாசனவரர்' என்கிற பாட்டை ஸ்ரீ தேசிகன் திருநாள் பாட்டென்று வ்யவஹரிக்கவேண்டியதாயிருக்க, அழையா நுழையும் இவ்விலக்ஷணஸமீக்ஷகர் இப்பாட்டை ஒருவிதத்திலும் பொருத்தமில்லாததான 'வாழித்திருநாமம்' என்கிற பெயரால் ஸமீக்ஷை 1-ம் பக்கத்தில் இரண்டிடத்தில் வ்யவஹரித்திருப்பதிலிருந்து இவருக்கு வாழித்திருநாமத்துக்கும் திருநாள்பாட்டுக்கும் உள்ள வாசியே புலனாகவில்லை என்பது தெளிவு. இவ்விதம் வாசிகாணமாட்டாமல் பிழைசொல்லப் புகுந்திருப்பது ஸமீக்ஷையில் உள்ள முதலாவது தோஷம்.

ஸமீக்ஷகர் அடியேனது கட்டுரையில் கூறும் இரண்டு தோஷங்களும் ஸமீக்ஷா தோஷமூலமே தவிர யதார்த்தமன்று என்பது இனி நிரூபிக்கப்படுகிறது - வாதாசனவரர்' என்கிற பாட்டு நாலு அடி கொண்டதே ஒழிய எட்டடி கொண்ட பாட்டன்றாம். ஒவ்வோரடியையும் இரண்டு பாகமாகப் பிரித்து ஸேவிக்கும் வழக்கத்தைப்பார்த்து ஒவ்வொரு அடியையும் இரண்டடி என்பதாக ப்ரமித்து இப்பாட்டை எட்டடியுள்ளது என்பதாக எழுதிவிட்டேனாம். இதுதான் ஜயந்திமலரில் உள்ள அடியேனது வ்யாஸத்தில் ஸமீக்ஷகர் கூறும் 1-வது தோஷம். இவ்விதம் ஸமீக்ஷகர் சொல்வது ஸரியில்லை. ஏனெனில்? ஸமீக்ஷகர் இப்பாட்டை நாலடிகொண்டது என்பதாகத் தகுந்த ப்ரமாணங்களைக்கொண்டு ஸ்தாபித்துவிட்டல்லவோ அதை ஹேதுவாகக்காட்டி எட்டடி என்று அடியேன் கூறியதை ப்ரமமூலம் என்று தூஷிக்கவேண்டும். அவ்விதம் யாதொரு ப்ரமாணமும் காட்டமாட்டாமல் விவாதாஸ்பதமான அம்சத்தையே (நாலடி கொண்டது என்கிற அநிரூபிதமான அம்சத்தையே) ஹேதுவாகக்காட்டி கேவலம் ராஜாஜ்ஞைபோலே, 'இப்பாட்டு நாலடிகொண்டதாகையால் எட்டடி என்று சொன்னது பிழை' என்று ஸமீக்ஷகர் சொல்லுகிறார். ஆகவே எட்டடி என்பதைப் பிழை என்று ஸமீக்ஷகர் தூஷித்திருப்பது நிர்ஹேதுகமெனத் தேறுகிறது.

இவ்விதம் யாதொரு ப்ரமாணமுமின்றியில் தான் தோன்றியாக எழுதும் ஸமீக்ஷகர் 'சிக்ஷாஸமீக்ஷைகளை ப்ரமாணபுஷ்கலமாகவே அவதரிப்பித்திருக்கிறோம்' என்பதாக ராமானுஜன் தனிமலர் 2.ல் மூன்று தரம் ஸத்யஶபதத்தைச்சொல்லி ஶபதம் செய்கிறார். இது யதார்த்தமான ப்ராமாணிகர்களின் நகைப்புக்குரியது. பூர்வமீமாம்ஸையில் ருக் என்னும் மந்த்ரபாகத்துக்கு லக்ஷணம் சொல்லுமிடத்தில் அர்த்தவசத்தாலும் பாதவ்யவஸ்தை உண்டென்பதாகத் தெரிகிறது. அதுபோலவே இப்பாட்டும் ஜயந்திமலரில் அடியேன் எழுதியபடி ஒவ்வோர் அடியிலும் ஒவ்வோரர்த்தமாக எட்டடியிலும் எட்டு அர்த்தங்களைத் தெளிவிப்பதாக இருப்பதால் இந்நாள்பாட்டை எட்டடி கொண்டதெனக் கூறியதில் பழுதொன்றுமில்லை.

மேலும் பூர்வமீமாம்ஸையில் 'மந்த்ரம்' என்று அபியுக்தர்கள் எதை வ்யவஹரிக்கிறார்களோ அதுவே மந்த்ரம் எனப்படும் என்பதாக மந்த்ரலக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோலவே இப்பாட்டையும் ஸ்ரீதேசிகன் மெய்யன்பர்களான அபியுக்தர்கள் எட்டடியுள்ளதாக வ்யவஹரித்து வருவதொன்றே இப்பாட்டு எட்டடிகொண்டது என்பதற்கு நிரபேக்ஷமான ப்ரமாணம்.

இவ்விதம் இந்நாள்பாட்டு எட்டடிகொண்டதாக ப்ரமாணஸித்தமாயிருக்க, ஸமீக்ஷகர் இந்நாள்பாட்டை அஸம்பத்தமாக 'வாழித்திருநாமம்' என்று கண்டதுபோலவே நாலடி கொண்டது என்றும் யாதொரு ப்ரமாணமும் இல்லாமலே காண்பது ஸமீக்ஷையில் உள்ள 2-வது தோஷம்.

மேலும் இந்நாள்பாட்டுக்குப் பொருள் கூறுவதற்கு 'வாதாசனவரரிவரென வருமா பாஷ்யம் வகைபெறுநாள்' என்பது முதலான எட்டு பகுதிகளையும் ஒவ்வொன்றையும் பூரா

வாக அநுவதித்துப் பொருள் கூறுவதிலுள்ள விரிவுக்கு அஞ்சி, 1-வது அடியில், 2-வது அடியில் என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் ப்ரதீகம் எடுக்கவேண்டிய ஸௌகர்யத்திற்காக பாகஸாமான்யவிவக்ஷையாலேயே 'அடி' என்கிற சொல் உபயோகிக்கப்பட்டிருக்கிறதே தவிர வ்ருத்தவிசேஷலக்ஷணசேஷமாகச்சொல்லப்படவில்லை. வ்ருத்தலக்ஷணம் அங்கு யான் கூறவுமில்லை. யான் எழுதிய கட்டுரைக்கு இந்நாள்பாட்டின் வ்ருத்தலக்ஷணமும் அபேக்ஷிதமுமன்று. ஆகவே ஜயந்திமலரில் 27-ம் பக்கத்தில் 'இப்பாட்டில் எட்டு அடிகள் இருக்கின்றன' என்பதற்கு வக்த்ருவிவக்ஷாநுகுணமாக எட்டு பாகங்கள் இருக்கின்றன என்பதாகப் பொருள்காணவேண்டியதாயிருக்க ஸமீக்ஷகர் இதை வ்ருத்தவிசேஷலக்ஷணசேஷம் போல் காண்பது ஸமீக்ஷையில் உள்ள 3-வது தோஷம்.

ஆகவே இப்பாட்டு, தமிழ் இலக்கண பரிபாஷையின்படி 'அசை' 'சீர்' முதலியவைகளின் கணக்கைக் கொண்டு 4 அடிகொண்ட வ்ருத்தவிசேஷமாக இருப்பினும் பாரிபாஷிகமான அந்த 'அடி' என்னும் பொருளை விவக்ஷித்து 'இப்பாட்டில் 8 அடிகள் இருக்கின்றன' என்பதாக ஜயந்திமலரில் அடியேன் சொல்லவில்லையாதலாலும், எட்டு பகுதிகள் இருக்கின்றன என்கிற பொருளையே விவக்ஷித்து 'எட்டு அடிகள் இருக்கின்றன' என்று ஜயந்திமலரில் சொல்லியிருப்பதாலும் தமிழ் இலக்கணத்தை நுழைத்து ஸமீக்ஷகர் அடியேனது வ்யாஸத்தை தூஷிக்கப் பார்ப்பது பகல்கனவேயாம்.

ஆனால் அடி என்கிற சொல் பாகஸாமான்யவாசியாகுமோ? என்னில், ஸமீக்ஷகர் 'இது நாலடிகொண்ட பாட்டே ஒழிய எட்டடிகொண்டபாட்டு அன்று' என்பதாக ஸமீக்ஷையில் எழுதியிருப்பதாலும், எட்டடிகொண்ட பாட்டே அப்ரஸித்தம் என்று மறுக்காததாலும் வேறு சில பாட்டுக்களை எட்டடிகொண்டதாக ஸமீக்ஷகர் ஒப்புக்கொள்வதாகவே ஏற்படுகிறது. திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்திய 31-வது வெளியீடாகிய 'மார்கழி மாலை' என்னும் புத்தகத்தில் 41-வது பக்கத்தில் திருப்பாவையின் ஒவ்வொரு பாசுரமும் எட்டடி கொண்டதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எட்டடிகொண்ட திருப்பாவைப்பாட்டு முதலியவைகளில் 'அடி' என்னும் சொல் எட்டில் ஒரு பகுதியில் வழங்கப்பட்டிருக்கிறது. 'வாடாவிசேமம்' என்பது போன்ற அடிவரவுகளில் பாட்டின் ஆரம்பத்திலுள்ள ஏகதேசத்தில் அடி என்னும் சொல் வழங்கப்படுகிறது. 'முன்னடி பின்னடி ஸேவித்தல்' என்னும் வ்யவஹாரத்தில் பாட்டின் முதல்பகுதியின் ஆரம்பத்திய ஏகதேசத்தை 'முன்னடி' என்றும் பின்பகுதியின் ஆரம்பத்திய ஏகதேசத்தை 'பின்னடி' என்றும் வழங்கும் வழக்கமும் இருந்துவருகிறது.

அடி என்னும் சொல்லுக்கு நேரிடையான வடமொழிச் சொல்லாகிய 'பாத' ஶப்தமும் 4-ல் ஒருபங்காக இல்லாமல் குறுகியும் நீண்டும் இருக்கும். 'தஜூவமதஸரேஸஸஸி யோமம் ஸஜீயஸோ—நதாய—ஷோக்ஷ வஜூ' என்பது முதலான புஷ்பிதாக்ரா வ்ருத்தச்லோகபாதங்களில் அம்சஸாமான்யவிவக்ஷையாலேயே வ்யவஹரிக்கப்பட்டுவருகிறது.

ஸ்ரீபாஷ்யத்தில் அம்சாதிகரணத்தில் 'வாதுஶஸேஷாஹ்யம்ஶவாதீ' என்கிற ஸ்ரீஸூக்தியை கவனிப்பவர்களுக்கு 'வாது' ஶப்தம் அம்சஸாமான்யவாசி என்பது நன்கு புலப்படும்.

ஆகவே, பாதஶப்தமோ அடி என்கிற சொல்லோ 4-ல் ஒரு பங்கு என்பதுபோன்ற ஓர் குறிப்பிட்டபகுதியைமட்டும் குறிப்பதாகக் கூறமுடியாமையால் இப்பதங்கள் பொதுப்படையாக ஒரு வஸ்துவின் பகுதியையே குறிப்பதாகத்தான் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகையால் ஜயந்திமலரில் அடியேன் பாகஸாமான்யவிவக்ஷையாலே 'அடி' என்னும் சொல்லை உபயோகித்ததை ஒருவிதத்திலும் ஆக்ஷேபிக்கவழியில்லை.

இவ்விதம் 'அடி' என்கிற சொல்லுக்கு அம்சஸாமான்யம் என்பது பொருளாக இருப்பதுடன் 'எம் அடிகளே' (திருவாய்மொழி 3-7-9) என்பது முதலான ப்ரயோகங்களில் 'ஸ்வாமி' என்பதும் 'அடிசேர் முடி

யினராகி' (திருவாய்மொழி 4–1–3) என்பது முதலான ப்ரயோகங்களில் ஶரீராவயவமான 'அங்க்ரி' என்பதும் பொருளாக இருக்கிறது. இவ்விதம் 'பகுதி' 'ஸ்வாமி' 'அங்க்ரி' என்பது முதலான பல பொருள்களையுடைய 'அடி' என்னும் சொல்லுக்கு ப்ரயோக்தாவுக்கு விவக்ஷிதமும் ஸங்கதமுமான பொருளை (எட்டடி என்பதற்கு எட்டு பகுதிகள் என்ற பொருளை)க் காணமாட்டாமல் திகைப்பதும், அவிவக்ஷிதமும் அஸங்கதமுமான வ்ருத்தவிசேஷலக்ஷண சேஷதாரூபமான பொருளை எதிரிட்டு தூஷித்திருப்பதும், ஸ்ரீதேசிககுணகீர்த்தநா ஸஹிஷ்ணுதையாலே தோஷைகத்ருஷ்டியாய் ஜயந்திமலரை விமர்சிக்கப்புகுந்த ஸமீக்ஷகருக்கு ஸம்பாவிதமாவதோடுகூட 'இப்பாட்டில் எட்டடிகள் இருக்கின்றன' என்பதற்கு 'எட்டு ஸ்வாமிகள் இருக்கின்றனர்' என்பது போன்ற அத்யந்தாஸங்கதமான பொருள்களைக் காண்பதும் திகைப்பதும் தூஷிப்பதும் ஸம்பாவிதங்களேயாம்.

'திருஸூரபியாலும் கோத்வம் கழியாதிறே' என்கிற ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தியில் 'கோதாம்ன கழியும்' (ரேசனம் செய்யும்) கோத்வம் கழியாது தானே' என்று அவிவக்ஷிதமும் அத்யந்தாஸங்கதமுமான பொருளைக் கண்டு தன்னையே தான் ஏமாற்றிக்கொள்ளும் நிலைமைபோன்ற நிலைமைகளைக் கேள்வியுற்றார்க்குக் கீழேசொன்ன ஸம்பாவனைகளில் வியப்பிராது.

இவ்விதம், ஸமீக்ஷகர்(ஜயந்திமலரில் உள்ள) அடியேனது வ்யாஸத்தில்கண்ட 1-வது தோஷமானது ஸமீக்ஷாதோஷமூலமேதவிர யதார்த்தமன்று என்பது நிரூபிக்கப்பட்டது. இனி, அதில் ஸமீக்ஷகர் கூறும் 2-வது தோஷமும் இவ்விதமே யதார்த்தமன்று என்பது நிரூபிக்கப்படுகிறது. அதாவது—ஜயந்திமலரில் 'வாதாசனவரரிவரென வருமாபாஷ்யம் வகைபெறுநாள்' என்பதற்கு 'வ்யாகரணமஹாபாஷ்யம்முதலான வடமொழிஇலக்கண நூல்களிலும் இலக்கியநூல்களிலும் ஸ்ரீ தேசிகனுக்குள்ள பேரறிவு பேசப்படுகிறது' என்று அடியேன் பொருள்கூறியது ஸரியில்லையாம். 'மாபாஷ்யம்' என்பதற்கு மஹிமைதங்கிய பாஷ்யம் என்கிற பொருளைக்கொண்டு ஸ்ரீபாஷ்யம் என்று பொருள்கூறுவதுதான் ஸ்வரஸமாம். ஆகவே இப்பகுதியில் ஸ்ரீபாஷ்யவிஷய ஸஞ்ஜீவனஸாமர்த்யம்தான் சொல்லப்படுகிறதாம். இப்படி ஸமீக்ஷகர் தானாகவே அபத்தமாக ஒரு அர்த்தத்தைத் தீர்மானித்துக்கொண்டு மேலே 'திக்கெட்டும் புகழ் ஸ்ரீபாஷ்யத்தைத் தெளிய உரைத்திடுநாள்' என்பதாலே புநருக்தமாகாதோ? என்பதாக ஒரு குசோத்யமும் செய்துகொண்டு, முந்தினவாக்யத்தில் ஸ்ரீபாஷ்யப்ரதிஷ்டாபநக்ரந்தவிசேஷங்கள் அருளிச்செய்தமையும், பிந்தினவாக்யத்தில் ஸ்ரீபாஷ்யப்ரவசநங்கள் செய்தருளினதும் சொல்லப்படுகிறது என்று பரிஹரிக்கிறார்.

ஆகவே 'வாதாசனவரர்' இத்யாதி முதல் வாக்யத்தில் ஸமீக்ஷகர் சொல்லுகிறபடி ஸ்ரீபாஷ்யப்ரதிஷ்டாபநக்ரந்தவிசேஷ நிர்மாணம் என்கிறகல்யாணகுணம்பேசப்படுகிறதா? அல்லது அடியேனது வ்யாஸத்தின் தாத்பர்யார்த்தத்தின்படி பதஞ்ஜலி மஹர்ஷிதுல்ய ஶப்தஶாஸ்த்ரப்ராவீண்யவத்தோபலக்ஷிதநாநாவிதவித்யாநிதித்வம்' என்கிறகல்யாணகுணம் பேசப்படுகிறதா? என்பதை இனி விசாரிக்க வேண்டியது அவச்யமாகிறது.

ஆரம்பத்தில், 'வாதாசனவரர்' என்பது ஸ்ரீபாஷ்யகாரரைக் குறிப்பதாக ஸமீக்ஷகர் சொல்வது விவாதாஸ்பதமானது. எனெனில் யதிராசர் பொன்னடிக்கே மொழிந்த அமுதனார் பாடல் 108லும், ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த யதிராஜஸப்ததியிலும் அத்யத்புதமான ஸ்ரீஸூக்திகளால் எம்பெருமானாரை ஸ்ரிய:பதியின் பஞ்சாயுதாம்சம் என்றும், விஷ்வக்ஸேநாம்சம் என்றும், பலராமாவரஜனை கண்ணனே நம்மிராமாநுசன் என்றும் பலவாறாக அநுஸந்திக்கப்பட்டிருக்கிறதேதவிர, ஆதிசேஷாம்சமென அநுஸந்திக்கப்படாமையால் ஸ்ரீபாஷ்யகாரரை ஆதிசேஷாம்சம் என்று கூறுவதற்கில்லை என்பதாக வாதிப்போரும் உண்டு. ஆகையால் ஆதிசேஷவாசியான 'வாதாசனவரர்' என்னும் சொல்லால் ஸ்ரீபாஷ்யகாரரைக் கூறுவதாக ஸமீக்ஷகர் சொல்லும் அர்த்தம் விவதாஸ்பதமானதாகையால் அவ்வர்த்தம் அநிச்சிதமானது. பதஞ்ஜலிமஹர்ஷி ஆதிசேஷாம்சம் என்பதில்விப்ரதி

பத்திபண்ணுவோர் ஒருவருமில்லாததால், ‘வாதாசனவரர்’ என்பதற்கு பதஞ்ஜலிமஹர்ஷியைப்பொருளாக அடியேன் கூறியது நிர்விவாதமானது ஆகையால் அவ்வர்த்தம் நிச்சிதமானது.

ஆகவே ஸமீக்ஷகர் கூறும்பொருள் ‘நிப்ரிதா நிஸ்ரிதயோ நிஸ்ரிதே ந்யாயஸம்ப்ரத்யய:’ என்கிற ந்யாயத்துக்கு விருத்தம்.

மேலும், ஸ்ரீபாஷ்யம் என்னும் சொல்லானது உடையவர் அருளிச்செய்த ஶாரீரக பாஷ்யத்தை, யோகரூடிசக்தியாலே போதிப்பதாக இருப்பதால் அதில் ‘ஸ்ரீ’ என்கிற சொல்லைப் பிரித்து உபசாரபரமாக்கி ‘ஸ்ரீபாஷ்யம்’ என்கிற சொல்லை பாஷ்யலக்ஷணமுள்ள மஹா பாஷ்யாதிகளிலே உபயோகிக்கமுடியாதது போலவே ‘மாபாஷ்யம்’ என்கிற சொல்லும் பதஞ்ஜலி மஹர்ஷி அருளிச்செய்த வடமொழி இலக்கணபாஷ்யத்தில் யோகரூடமாகையாலே அதில் ‘மா’ என்னும் சொல்லைப் பிரித்து மஹிமைதங்கிய என்கிற பொருளுடையதாக்கி ஸ்ரீபாஷ்யபரமாக ஸமீக்ஷகர் சொல்வது ‘யோகாத் ரூடிர்பலீயஸீ’ என்கிற ந்யாயத்தாலும் பாதிதம்.

மேலும், திக்கெட்டும் புகழும்படியாக ஸ்ரீபாஷ்யத்தைத் தெளிவாக க்ரந்தநிர்மாண மூலமாகவும், உபதேசமூலமாகவும், உரைத்திடும் தேசிகன் உதயம்செய்திடும் நாள் என்பதாகப் பிந்தினவாக்யத்திலேயே இரண்டு அர்த்தங்களையும் ஏகப்ரயத்நத்தாலேயே எளிதாகத் தெளிவிக்கவல்லதாயிருக்க, ஒரு அர்த்தத்துக்கு ஒரு வாக்யமும் மற்றொரு அர்த்தத்துக்கு மற்றொரு வாக்யமும் என்று கல்பிப்பது ப்ரயத்நபாஹுள்யத்தாலே கௌரவ பராஹதம்.

இவ்விதம் ப்ரயத்நபாஹுள்யக்லேசம் எற்படாமைக்காகவேயன்றோ ‘ஸம்பவத்யேகவாக்யத்வே வாக்யபேதஸ்து நேஷ்யதே’ என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகவே, ஸமீக்ஷகர் கூறும்பொருள் ‘ஏகஸ்ய ஸம்பவே ஶாஸ்த்ரஸ்யாப்ரயத்னோ ந்யாய்ய:’ என்கிற ந்யாயத்தாலும் பாதிதம்.

அவ்விதம் இரண்டு அர்த்தத்தையும் இரண்டுவாக்யத்தாலேயேகூறவேண்டும் என்று ஆக்ரஹமிருந்தால் ஸ்ரீபாஷ்யப்ரதிஷ்டாபக க்ரந்தவிசேஷநிர்மாணங்களுக்கெல்லாம் உபலக்ஷணமாக சததூஷணியைக் கூறினதாகச் சொல்லும்பக்ஷத்தில் ‘பேச்சொன்றுக்குச்சததூஷணியை’ என்கிற 5-வது அடியில் ஸ்ரீபாஷ்யப்ரதிஷ்டாபகக்ரந்தநிர்மாணமும் கூறப்பட்டதாக ஆகிவிடுவதால் ஸமீக்ஷகர் சொல்லும் பொருள் புநருக்தமாகவே ஆவதால் புநருக்தி பரிஹாரத்துக்காக ஸமீக்ஷகர் படும் கஷ்டம் பயனற்றதாகவே ஆகிறது.

ஆகவே ஸமீக்ஷகர் கூறும் அர்த்தத்தை முதலடிக்குக் கூறினல் அது அநபேக்ஷித விதாநமாகவே முடியும்.

மஹாமஹோபாத்யாயரான அண்ணன் ஸ்ரீஸப்ததிரத்நமாலிகையில் ‘ஜ்யோதிர்நாடகஸம்ப்ரவீண: காவ்யஶ்ரேணீநாடகாலங்க்ருதிஜ்ஞ:’ என்று அநுஸந்தித்தபடி சீக்ஷாவ்யாகரணநிகண்டுகங்களிலும், காவ்யநாடகாலங்காராதிஸமஸ்தஶாஸ்த்ரங்களிலும் ஸ்ரீ தேசிகனுக்குள்ள பேரறிவு இப்பாட்டில் 1-வது அடியைத்தவிர மற்றபாகங்களில் கூறப்படாமையால் அவ்வர்த்தத்தையே ‘வாதாசனவரர்’ என்கிற 1-வது அடியில் கூறுதல் அவச்யாபேக்ஷிதமாயிருப்பதால் அவ்விதம் அடியேன் கூறிய அர்த்தம் அவச்யாபேக்ஷிதமாயும் முன்னோர்களின் திருவாக்கை உறுதுணையாயுடையதாயும் இருக்கிறது. ஆகவே ஸமீக்ஷகர் கூறும் அர்த்தம் ‘அநபேக்ஷிதவிதாநமபேக்ஷிதவிதாநம் ச பாததே’ என்கிற ந்யாயத்துக்கும் விருத்தம்.

மேலும் ஸ்ரீதேசிகன் வைபவப்ரகாசிகையில் ‘ஶாரீரகஸ்ய பாஷ்யஸ்ய ப்ராகல்ப்யம் விவ்ருதம் யத: தம் வித்யாநிதிமாஶ்ரயே’ ‘ஶ்ருத்யந்தார்தப்ரகாஶகம் வேதாந்தாசார்யம் வந்தே’ வேதாந்தபாரங்கதத்வாதிவைபவம் ஆரம்பத்தில் சொல்லப்படுகிறது. அடுத்தபடியாக சததூஷண்யாதி க்ரந்தநிர்மாணம், க்ரந்தநிர்மாண உபதேசாதிமூலமாக ஸ்ரீபாஷ்யப்ரதிஷ்டாப

நம், ரஹஸ்யக்ரந்தநிர்மாணம் முதலான வைபவங்கள் படிப்படியாக அர்த்தக்ரமத்தை அநுஸரித்து அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

இந்தமுறையை அநுஸரித்துத்தான் ‘வாதாசனவரர்’ என்கிற திருநாள்பாட்டிலும், ஶப்தஶாஸ்த்ராதிஸமஸ்தஶாஸ்த்ர ப்ராவீண்யத்தையும் த்ராவிடாம்நாயதத்வஜ்ஞதையையும் முதல் இரண்டு அடிகளில் சொல்லி நடுவில் வாதக்ரந்தநிர்மாண ஸ்ரீபாஷ்யப்ரவசநாதிகளைச் சொல்லி கடைசியில் ரஹஸ்யக்ரந்தநிர்மாணாதிகளைச்சொல்லி அநுஸந்திக்கும்படியாக இந்நாள்பாட்டைப் பெரியோர்கள் அமைத்திருக்கிறார்கள். அடியேனும் இந்த முறைப்படியே இப்பாட்டுக்கு ஜயந்திமலரில் வ்யாக்யாநம் செய்திருக்கிறேன். இதுதான் அர்த்தக்ரமத்துக்குப் பொறுத்தமானது. நாநாவிதவித்யாக்ரஹணாநந்தரமன்றோ ஸ்ரீபாஷ்யப்ரதிஷ்டாபநக்ரந்தவிசேஷநிர்மாணம் சக்யமாகும்.

ஆகவே ‘வாதாசனவரர்’ என்கிற முதலடியிலேயே, ஸ்ரீபாஷ்யப்ரதிஷ்டாபநக்ரந்தவிசேஷநிர்மாணத்தைப் பொருளாக ஸமீக்ஷையில் கூறுவது அர்த்தக்ரமத்துக்கும் விருத்தம்.

ஆகவே ‘வாதாசனவரரிவரென’ என்கிற முதல் வாக்யத்துக்கு ஸமீக்ஷகர் சொல்லும் அர்த்தம் (ஸ்ரீபாஷ்யப்ரதிஷ்டாபநக்ரந்தவிசேஷநிர்மாணம் என்கிற அர்த்தம்) மேலே கூறியபடி நான்குவிதந்யாயத்துக்கும், அர்த்தக்ரமத்துக்கும், பூர்வாசார்யப்ரபந்தங்களுக்கும் விருத்தமானதாக இருப்பதால் அது அவப்பொருள் என்றும் ஜயந்திமலரில் அடியேனது வ்யாஸத்தின் தாத்பர்யார்த்தம் (பதஞ்ஜலிமஹர்ஷிதுல்ய ஶப்தஶாஸ்த்ரப்ராவீண்யவத்தோபலக்ஷிதநாநாவிதவித்யாநிதித்வம் என்கிற அர்த்தம்) மேல் கூறிய ந்யாயசதுஷ்டயத்துக்கும் அர்த்தக்ரமத்துக்கும் பூர்வாசார்யப்ரபந்தங்களுக்கும் அநுகுணமானதாகையால் இது நற்பொருள் என்றும் நிரூபிக்கப்பட்டது. இவ்விதம் நற்பொருளாயிருப்பதை அவப்பொருள்போலவும், அவப்பொருளாயிருப்பதை நற்பொருள்போலவும், காண்பது ஸமீக்ஷையில் உள்ள 4-வது தோஷம்.

இவ்விதம் ஸமீக்ஷையில் சிறுபகுதியில் இத்தனை தோஷம் படர்ந்திருப்பதிலிருந்து அதில் பாக்கியுள்ள பெரும்பகுதிகளில் எத்தனை தோஷங்கள் நிறைந்திருக்கும் என்பதை வாசகதீமான்களே ஊஹித்துணரக்கூடும்.

ஆகவே ஜயந்திமலரில் உள்ள அடியேனது வ்யாஸத்தில் 2-வது தோஷமாக ஸமீக்ஷையில் காண்பதும் ஸமீக்ஷாதோஷமூலமேதவிர யதார்த்தமன்று என்பது கையில் கனிபோலவே விளங்கும்.

இவ்விதம் ஸ்ரீதேசிகன் வைபவப்ரகாசிகை முதலான பூர்வாசார்யப்ரபந்தாநுகுணமாக அடியேன் கூறியபொருளை ஓரிடத்திலும் ஒருவராலும் ப்ரஸ்தாவிக்கப்படாததான அர்த்தம் என்று ஸமீக்ஷை 2-ம் பக்கத்தில் எழுதியிருப்பதும், அவப்பொருளை நற்பொருளாகவும், நற்பொருளை அவப்பொருளாகவும் திரித்து எழுதப்படும் தாளுக்கு ‘ஸத்க்ரந்தப்ரகாசநஸபையின் வெளியீடு’ என்கிற பெயர் சூட்டி வெளியிடுவதும், தன் பெயருக்கேற்ப ஸ்ரீந்ருஸிம்ஹன் திருவுள்ளத்துக்கு உகப்பான பெருண்மைகளைத் தாங்கிக்கொண்டு வெளிவரும் ‘ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவை’ காகிதத்தின் வெண்மையைக் கருப்பாக்குவதற்கு ஒப்பிடும் (ஸமீக்ஷை 1-ம் பக்கத்தில் பார்க்க) ஸ்ரீஅழகியசிங்கர்களும் ஆமோதித்து வெளியிடுகிறார்களே என்று யாரோ மஹான்கள் வருந்துவது போலவும் பர்யவேக்ஷணம் செய்பவர்களை அதற்கு யோக்யதையற்றவர்கள் போலவும், (ஸமீக்ஷை 2ம் பக்கத்தில் பார்க்க) எழுதியிருப்பது ஸமீக்ஷகருடைய செய்யாதனசெய்கைகளுக்கு எடுத்துக்காட்டுகள் (உதாஹரணங்கள்.) ஸமீக்ஷகர் எழுதியிருக்கிறபடி ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா விஷயங்களைக்கண்டு வருந்தும் மஹான்கள் யாரேனும் இருப்பரேல் தத்வார்த்தங்களைக் கண்டு வருந்தும் அம்மஹான்கள் மஹாவ்ருக்ஷ, புண்யஜநாதிநாமங்களுக்கு ஒப்ப விபரீதார்த்தலக்ஷணையாலே ‘மஹான்’ என்னும் பதத்தைச் சுமப்பவர்களாயிருக்கக்கூடுமேயல்லது அந்வர்த்தமஹான்களாயிருக்கமுடியாதென்பது திண்ணம்.

இவ்விதம் திருநாள்பாட்டில் 1-வது அடியாலும் 6-வது அடியாலும் இரண்டுவிதமான

கல்யாணகுணங்கள் பேசப்படுவது தெளிவாயிருக்க அவ்விரண்டு அடிகளையும் ஒரே பொருளுடையதாக்கி ஸ்ரீதேசிகனுடைய கல்யாண குணங்களில் ஏதாகிலும்ஒன்றையாவது மறைப்பதற்கு ஆபாதசாத்திமதுரமான மொழிகளால் முடிந்தவரையில் முயற்சிப்பதாலும், ஜயந்திமலரைக் கண்டு சீறிச்சினந்து சிக்ஷா ஸமீக்ஷைகளை வெளியிட்டதாலும், ஸ்ரீதேசிகனுடைய கல்யாணகுணங்களில் தனக்குள்ள அஸஹ்யமானத்தையையே ஸமீக்ஷகர் காலபாதிதமாகாமல் அடிக்கடி ஸ்தாபித்துக்கொள்வதைத் தவிர வேறு ஒருபயனும் காணகில்லார்.

ஆகவே இந்த ஸமீக்ஷாதோஷசிகித்ஸைக்குப் பிறகு ஜயந்திமலரில் உள்ள அடியேனது வ்யாஸத்தில் உள்ள உண்மைகளில் சிலதுமட்டும் ஸமீக்ஷகருக்கு ஒருக்கால் புலப்படுமேயானாலும் ஜயந்திமலரிலும் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகளிலும் உள்ள உண்மைகள் யாவையும் அன்னார் உள்ளபடி காணும்நாள், ஸ்ரீதேசிக தத்பக்த பக்திரூபஸித்தாஞ்ஜநசிகித்ஸைபெற்று வாழும் நாளேயாகும் அந்நாள் எந்நாளோ!

க்ருபாதஸாதிபிர்யன்மே: ஸுஹ்ருத்ஸாரவிவர்ஜிதை: | வாக்ப்ரவ்ருத்திர்ப்ரமிதேஹ கிம் ஸ்யாத் ஸத்வஸம்ப்ரணாச்யதே ||

ஸத்க்ருத்ஸ்னநவீநானாம் ஸம்பத்யா வித்யயா | ஸமீக்ஷாயத்நத: கிம் ஸ்யாத் ஸத்ப்ரஷ்டஹேதுர்நாச்யதே ||

[மேல்பார்வைக்கு அடக்கமாயும் இனிமையாயும் உள்ளொரு பசை அற்றதுமான வார்த்தைகளால் நிரப்பி அபிநயிப்பதில் காகிதம் அழுக்கடைவதைத்தவிர வேறு பயன் இல்லை.

அஸூயை என்னும் பித்தம் ஸம்பந்தித்த கண்ணுடையோராயும், பரமார்த்தமானபக்தி என்னும் (அஸூயாபித்தநாசகமான) அஞ்ஜனமும் இல்லாதவராயும் இருப்பவர்கள் பொருள்களை உள்ளபடி பார்ப்பதற்கு முயற்சிப்பதால், செவ்வியகண்ணுளாரின் பரிஹாஸத்துக்கு இலக்காவதைத்தவிர வேறுபயன் ஏதும் காணவியலாது.]

<u>சாஸ்த்ராநுபந்தம் -10.</u>

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ப்ரகீர்ணகம்

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

பகவத்பாகவத ஆசார்யாநுக்ரஹவிசேஷத்தினால் ஸூஸம்பந்நமான 'அஸ்மதுக்திவைபவத்தை' உள்ளபடி கொள்வதற்குவேண்டிய நிலையில் இராமையால் அந்யதாவாகக் காட்ட வேண்டியது பிறர்க்கு அபரிஹார்யமாய் நேர்கின்றது. ஆகிலும் விஷயங்கள் மிகப்பெரியவைகளானபடியாலும் இவற்றில் ஒருவர்க்கும் சிறிதும் ஸந்தேஹமிருக்கக்கூடாதாகையாலும் நமது உக்திகளின் ஸாராம்சத்தை இங்கு எடுத்துக்காட்டுகின்றோம்.

1 ப்ரபத்த்யுபாயத்வம்

1951ம் வருஷம் அக்டோபர் மாதம் வெளிவந்த ஸ்ரீராமனுஜன் தனிமலரில் 'ப்ரபத்தி உபாயம் என்கிற வாதம் நவீனர்கள் திரளிலே வலிதாகவுள்ளது'. அதன் 'அநுபாயத்வமும் தேறி நிற்குமே என்கிறார் நம்பிள்ளை'. 'ப்ரபத்திடானது விதிக்கப்பட்டிருப்பதனால் உபாயமென்று சொல்லக்கூடியதாயிருந்தாலும் இங்கு அப்படிக்கொள்ளலாகாது.' இப்படிக் கல்வெட்டாக ஸ்வாமி யருளிச்செய்திருக்கவும் உபாயம் உபாயம் உபாயம் என்று உருப்போடுகிற நவீநர்களுக்கு உகாரஸ்தாநே அகார ஏவ ஹி' என்று ப்ரபத்தியின் உபாயத்வத்தை ஆக்ரஹத்தோடு அபலபித்தார்கள். இதெல்லாம் அஸம்பத்தமென்றும் இவர்கள் உதாஹரித்த ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் வாஸ்தவமான பொருள் வேறென்றும் ஸஜ்ஜநாராதனத்தில் விளக்கியிருக்கின்றோம். 'ப்ரபத்த்யுபாயத்வசோதநம்' என்ற நிபந்தத்தில் 'ப்ரபத்தி உபாயம்' என்றதை ஒப்புக்கொண்டு ,இதை நாம் ஆக்ஷேபிக்கமாட்டோம்' என்றார்கள்.

அதிகாரிகளுக்குத் தக்கபடி உபாயத்வத்

தையும் உபேயத்வத்தையும் கொண்டிருக்கிற ஒரு வஸ்துவிலே உபாயத்வத்தைத் தடுப்பாரார்

இத்யாதி அவர்கள் எழுதியிருப்பது. 'ஸம்ஸார நிவ்ருத்திக்காக ப்ரபத்தியையநுஷ்டித்த நம்மாழ்வார்போலவும் எம்பெருமானார் போலவும் நாமும் மந்தாதிகாரிகளாய் இருப்பதில் எமக்குக் குறைவு ஒன்றுமில்லை. இனி ப்ரபத்தி உபாயமில்லை என்று வாதிக்காமலிருந்தால் அதுவே போதுமென்று ஸஜ்ஜநாராதனத்தின் முடிவில் உள்ள அநுபந்தத்தில் ஸூசநம் பண்ணியிருந்தோம்.

ப்ரபத்தி மோக்ஷஸாதநம் என்பதும் மோக்ஷத்திற்காக அதை அநுஷ்டிப்பவர்கள் அநுஷ்டிக்கலாமென்பதும் இந்த விஷயத்தில் தமக்கு விப்ரதிபத்தியில்லையென்பதும் இதனால் இப்போது இசையப்பட்டிருக்கிறது. இனி இவர்கள் இதை மாற்றிக்கொள்ளாமலிருந்தால் மேல் விசாரம் நடக்க ஸௌகர்யமாயிருக்கும்.

என்பது அங்கு நாம் எழுதியிருப்பது. இதன் மேல் ஸத்புருஷஸமாராதந பூர்வபீடிகையில்

மேலே குறித்தவிஷயம் (ப்ரபத்திக்கு மோக்ஷோபாயத்வம்) முப்பது வருஷங்களுக்குமுன் எழுதி வெளியிட்டிருக்கிற... வரதராஜஸ்தவவ்யாக்யாநத்தில் விரிவாகவுள்ளது...... திவ்யார்த்ததீபிகையிலுமுள்ளது......வேறு வாதம் கிடையாது; இதுவே வாதந்தான்.

என்று மாறுவேஷத்தில் கூறுகின்றனர். இங்கு புத்திமான்கள்கேட்கவேண்டிய கேள்வி ஒன்றேஒன்றுதான். முப்பது வருஷங்களுக்கு முன் எழுதி வெளியிட்ட இந்த ஒரே வாதத்தைப்பற்றி நின்றவர்களாயின் இப்போது கலஹத் தனிமலரில் இந்த வாதத்தை ஸ்மரிக்கவும் ஸ்மரிக்காதே ப்ரபத்தி உபாயமே அன்று என்று அபிநிவேசத்துடன் எழுதி உபாயமென்பவர்களுக்கு அபாயந்தான் என்று கோஷித்தது என்? அவ்யவஸ்திதத்வம் இதற்குக் காரணமா? நாம் எதைச் சொன்னால் யார் கேட்கப்போகிறார்கள் என்கிற தைர்யமா? இது நிற்க, இந்த பூர்வபீடிகையின்படி 'அநுபாயத்வம் சொன்னது அஸம்பத்தந்தான். அந்த வாதத்தை அறவேவிட்டொழித்தேன். இனி ஒருகாலும் அதைப் பற்றமாட்டேன்' என்று ஒப்புக்கொண்டார்களாயிற்று. இந்த ப்ரதிஜ்ஞையைக் காப்பாற்றினார்களாயின் இவ்விஷயத்தில் இனி விவாத ப்ரஸக்தியில்லை.

2. பிராட்டியின் உபாயத்வம்

இதில் ஈஷத்தும் ஸம்சயம் பிறவாதபடி அதிவிசதமாய் நிரூபணம் செய்திருக்கிறோம். அது சிறிதும் நெஞ்சில் படவில்லையென்பதை அதிசோசநீயமாய் ப்ரகாசப்படுத்திக்கொண்டு

இந்த உபாயத்வம் பிராட்டிக்குப்போலே ஆசார்யர்களுக்குமுண்டு என்பதையும் இவர் மறுக்கமாட்டார்

என்கிறார்கள். மறுபடியும் நமது லேகநங்களை வாசித்து அவதாநத்தோடு விஷயங்களை க்ரஹித்தால் 'விடியுமளவும் ராமாயணம் கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பன் என்றார் ஒருவர்' என்ற கதையே இங்குள்ளதென்பதுபுலப்படும். பலப்ரதாநஸங்கல்பம் கேவல ஈச்வரனுக்காவது பத்நீவிசிஷ்டனுக்காவது இருக்கட்டுமென்று தேசிகன் யதாப்ரமாணம் ஸாதித்திருப்பதால்அதைப்பற்றியவிசாரமே நாம் செய்யப்புகவில்லை. எம்பெருமான் அபிகம்யனாகைக்காக முதலில்பிராட்டியினிடத்தில் பண்ணும் ப்ரபத்தியினால் ப்ரஸந்நையான அவள் 'கிம் [illegible] ஷ: க ஊஹ' இத்யாதியால் அந்த அபிகம்யதையை உண்டாக்கிக்கொடுத்து புருஷகாரமாகிறாள் என்ற இவ்வித புருஷகாரத்வத்திலும் விப்ரதிபத்தியோ விசாரமோ இல்லை. பல விசேஷத்திற்காக எம்பெருமானிடத்தில் செய்யும் ப்ரபத்திக்குக் கரணமந்த்ரமான த்வயத்தில் விசேஷ்யனான நாராயணனுக்குப் போலவே விசேஷணமான ஸ்ரீக்கும் உபாயத்வம் ப்ரமிதமாகின்றது என்பது ஒரு விஷயம். இதனால் ஸ்ரீக்கு உபலக்ஷணத்வம் சொல்லுகிற பக்ஷம் நிரஸ்தமாகிறது என்பது இரண்டாவது விஷயம். இதனால் '[illegible] க்ஷம் ஜ நி ஹஜ தா' என்றபடி இருவருக்கும் பாஸமர்ப்பணத்தில் உத்தேச்யத்வம். பகவானுக்கு மாத்திரமன்று என்பது மூன்றாவது விஷயம். இவற்றை நாம் தேசிகன் திருவுள்ளப்படி உபபாதித்திருக்கின்றோம். தேசிககண்டநத்திற்காக ப்ரவ்ருத்தித்தவர்களும் விஷயத்தை இப்படியே கொண்டிருக்கிறார்கள். (தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

நஞ்சீயரும் ஸ்ரீஸூக்தபாஷ்யமும்

[ஸ்ரீ. உப. வில்லிவலம் க்ருஷ்ணமாசாரியர், ந்யாயசிரோமணி, வேதாந்தவித்வான்]

முன்காலத்தில் மேற்கு தேசத்தில் வேதாந்தியென்று ஒரு ப்ரபலரான அத்வைதி இருந்தார். ஸ்ரீ பாஷ்யகாரர் தன் காலத்தில் அவரை ஜயித்து விசிஷ்டாத்வைத மதஸ்தராக ஆக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்து அது முடிவுபெறாமல் போனவாறே அந்தக்கார்யத்தைச் செய்து தலைக்கட்டவேண்டுமென்று பட்டரையழைத்து நியமித்துப்போனதாகக் குருபரம்பரையில் ப்ரஸித்தம். ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பிறகு பட்டரும் அந்த வேதாந்தியை ஜயித்து ராமாநுஜமதஸ்தராகப் பண்ணியும், அவர் ஈஷணாத்ரயத்யாகபூர்வகமாக ஸந்யஸித்துக்கொண்டபிறகும் ஸ்ரீபாஷ்ய திவ்யார்த்தங்களையும் திருவாய்மொழி, திருநெடுந்தாண்டகம் முதலான ப்ரபந்தரஹஸ்யார்த்தங்களையும் பதேபதே உபதேசம் பண்ணியும், அவரிடத்திலுள்ள ஜ்ஞாநாநுஷ்டாநாதிவிசேஷங்களையும் தம்மிடத்தில் அவருக்குள்ள பக்த்யாதிவிசேஷத்தையும் கணிசித்து அவரை 'நம்சீயர்' என்று அடிக்கடி ஸாதிப்பரென்பதும் பட்டர் வைபவத்திலேயே ஸுஸ்பஷ்டம். அந்த நஞ்சீயர் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படியென்னும் ஓர் வ்யாக்யானம் செய்தருளினர். அந்த வ்யாக்யானம் ஆந்த்ர த்ராவிடலிபிகளில் அச்சிடப்பெற்று உலகத்தில் வழங்கிவருகிறது.

இப்படியே அந்த நஞ்சீயர் யதீந்த்ரமாஹாநஸிகரான ப்ரணதார்த்திஹராசார்யரிடத்திலும் பட்டரிடத்திற்போலத்யந்த ப்ரவணராய் ஸ்ரீபாஷ்யகாரர் ஏகாந்தத்தில் ஒவ்வொருகாலத்திலருளிச்செய்யும் ரஹஸ்யார்த்தங்களை ஸாவதானமாகக் கேட்டு ஸ்ரீஸூக்தபாஷ்யத்தையருளிச் செய்தார். அது சில காலத்திற்கு முன் ப்ராமாணிகாக்ரேஸரரான ஸ்ரீ கோஷ்டீபுரம் மஹாவித்வான், ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமியால் பரிசோதிக்கப்பட்டு ஸபூமிகமாக நாகரலிபியில் ப்ரகாசப்படுத்தப் பட்டிருக்கிறது. அதின் கடைசியில் 'யதீந்த்ரமாஹாநஸிகாக்ஷபணதார்த்திஹராச்ரயாத் । ஸூத்ரபாஷ்யவிவேகார்த்தா: ஸ்ரீஸூக்தபாஷ்யே விநிச்சிதா:' என்று கீழ் நிச்சயிக்கப்பட்ட ஸூக்தார்த்தங்களெல்லாம் ஸாம்ப்ரதாயிகங்களென்று தெரிவித்தார். இதைக் கடாக்ஷித்து ஸ்ரீ தேசிகன் ஸித்தோபாயசோதநாதிகாரத்தில் 'எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றும் என்று தொடங்கி உடையவரருளிச்செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்சீயர் ஸங்க்ரஹித்தார்' என்று அருளிச்செய்தார். இந்த ஸ்ரீஸூக்தபாஷ்யோபாந்திம ச்லோகத்தையும் இந்த ஸித்தோபாயசோதநாதிகார ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தியையும் நன்கு பராமர்சித்தால் ஸஹ்ருதயர்களான வித்வான்களுக்கு இந்த ஸ்ரீஸூக்தபாஷ்யம் நஞ்சீயராலேயே அருளிச்செய்யப்பட்டதென்பதில் ஒருவித ஸந்தேஹமுமுண்டாக ப்ரஸக்தியில்லை.

இப்படி ஸ்ரீஸூக்தபாஷ்யோபாந்திமச்லோகத்தாலும், ஸ்ரீ தேசிகனுடைய முன்பு சொன்ன ஸித்தோபாயசோதநாதிகார ஸ்ரீஸூக்தியாலும் ஸ்ரீஸூக்தபாஷ்யம் நஞ்சீயராலேயே செய்யப்பட்டதென்று நிச்சயிக்கப்பட்ட பிறகு ஸித்தோபாயசோதநாதிகாரத்தில் 'ஸ்ரீஸூக்தபாஷ்யத்திலே பெரியஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களையெல்லாமுபபாதித்தார்' ரென்று ஸ்ரீஸூக்தபாஷ்யத்தில் அபேக்ஷிதார்த்தோபபாதகராகச் சொல்லப்பட்ட பெரியஜீயரென்பவர் நஞ்சீயரென்றே ஏற்படுகிறது. ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பிறகு நம் ஸம்ப்ரதாயத்தில் முதலில் ஜீயராக இருந்தவர் நஞ்சீயரே; ஆகையால் அவரைப் பெரியஜீயரென்று ப்ராசீநர்கள் வ்யவஹரித்துப் போருவர்கள். இதனால் பெரியஜீயரென்றதும் நஞ்சீயரென்றதும்

பர்யாயநாமங்களென்று ஸ்தாபிக்கப்பட்டது. ஆகையாலேயிறே தென்கலை குருபரம்பரையான பன்னீராயிரப்படியில் நஞ்சீயர் வைபவத்தில் 550-வது பக்கத்தில் ‘நஞ்சீயரான பெரியஜீயர்’ என்று பர்யாயநாமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க ஸம்ப்ரதாயக்ரந்தத்தையே அபலபிக்கிறவர்களாயும், ஸம்ப்ரதாயக்ரந்தகர்த்தாக்களையே வேறுபாடாகச் சொல்லுகிறவர்களாயுமுள்ள சில அப்ராமாணிக ஆதுநிக பத்ரிகாசிரியர்கள் இந்த ஸ்ரீஸூக்தபாஷ்யம் தங்களது ஸம்ப்ரதாயத்திற்கே கண்டேகடுவாக இருப்பதைக் கணிசித்து இது தென்னாசார்ய ஸம்ப்ரதாய கூடஸ்தரான நஞ்சீயராலே செய்யப்பட்டதேயன்று என்று ஸ்தாபிக்கக்கருதி சில ஆபாஸோக்திகளை எழுதியிருக்கிறார்கள். அவைகள் அத்யந்தாஸங்கதங்கள்.

கீழ் சொன்னபடி ‘எம்பெருமானைச் சொன்னவிடத்திலே’ என்கிற ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தியையும் ஸ்ரீஸூக்தபாஷ்யத்திலுள்ள ‘யதீந்த்ரமாஹாநஸிகாத்’ என்கிற உபாந்திமச்லோகத்தையும் பராமர்சிக்கும் ப்ராமாணிகர்களுக்கு ஸ்ரீஸூக்தபாஷ்யகர்த்தா நஞ்சீயரென்றே நிச்சயமேற்படும். இப்படி ஏற்பட்டுவிட்டால் ‘ஸ்ரீஸூக்தபாஷ்யத்திலே பெரியஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களெல்லாம் உபபாதித்தார்’ என்கிற பூர்வோதாஹ்ருத ஸ்ரீஸூக்தியில் சொல்லப்பட்ட பெரியஜீயரும் நஞ்சீயரென்றே ஏற்படுமேயொழிய வேறொருவராக ஏற்படாது. ஆனால் ஸ்ரீதேசிகன் முதலில் ‘பெரியஜீயர் ஸ்ரீஸூக்தபாஷ்யத்தில்’ என்று சொல்லி பிறகு ‘நஞ்சீயர் ஸங்க்ரஹித்தார்’ என்று சொல்லுவானேன்? என்னில் ஸ்ரீதேசிகன் ஒருவிடத்தில் ஸ்ரீபாஷ்யகாரரை உடையவரென்று அருளிச்செய்தும், எம்பெருமானார் ஸ்ரீபாதத்தையாச்ரயித்த முதலிகள் என்கிறவிடத்திலும், எம்பெருமானார் அந்திமதசையில் என்கிறவிடத்திலும் ‘எம்பெருமானார்’ என்று அருளிச் செய்திருப்பதுபோல் ஒருவரையே ஓரிடத்தில் பெரியஜீயரென்றும் மற்றோரிடத்தில் நஞ்சீயரென்றும் வ்யவஹரிக்கலாம். ஒருவருக்கே இரண்டு திருநாமமிருந்தால் ஓரிடத்தில் ஒரு திருநாமத்தையும் மற்றோரிடத்தில் மற்றொரு திருநாமத்தையும் வ்யவஹரிப்பதில் இச்சையே நியாமகமாகையால் இது வ்யக்திபேதஸாதகமாகாது. ப்ரபந்தங்களில் நஞ்சீயர் ப்ரஸ்தாவஸமயத்தில் அவ்விடங்களெல்லாம் ‘நஞ்சீயரருளிச் செய்வர்’ ‘சீயர் அருளிச்செய்வர்’ என்றிருக்கிறதேயொழிய ஓரிடத்திலாவது பெரியஜீயர் அருளிச்செய்வர் என்னும் ப்ரயோகமில்லையாகையால் பெரியஜீயரென்பது நஞ்சீயருக்கு நாமாந்தரமாகாதென்பதாக இவர் சொல்லுகிறார். குருட்டுக்கோழி போன்ற இவருக்குத் தென்கலைகுருபரம்பரையான பன்னீராயிரப்படி 550-வது பக்கத்தில் ‘நஞ்சீயரான பெரியஜீயர்’ என்றிருப்பது கண்ணுக்கு இலக்காகவில்லை போலும்.

இப்படி நஞ்சீயருக்கே பெரியஜீயரென்கிற பெயர் குருபரம்பரையிலேயே நஞ்சீயர் வைபவத்தில் ஸ்பஷ்டமாக ஏற்பட்டுவிட்டால் ‘ஸ்ரீஸூக்தபாஷ்யத்திலே பெரியஜீயரும் அபேக்ஷிதார்த்தங்களை உபபாதித்தார்’ என்று சொல்லப்பட்ட பெரியஜீயர் நஞ்சீயரென்றே ஸித்தமாகையாலே வேறொரு பெரியஜீயரைக் கல்பிக்கவேண்டாம். இப்படி குருபரம்பரையில் நஞ்சீயர் ப்ரபாவத்திலேயுள்ள நஞ்சீயரான பெரியஜீயர் என்கிற வாக்யத்தையே இல்லைபோலே ஆச்சாதனம்பண்ணி வேறொரு பெரியஜீயரை ஆராய்ச்சிசெய்து சொல்லுகிறார். அந்த ஆராய்ச்சியை விசாரிப்போம்— இவர் தன் ஆராய்ச்சிக்கு மூலப்ரமாணமாக ‘பெரிய திருமுடியடைவு’ என்கிற ஒரு (அபத்தக்களஞ்சியமான) புஸ்தகமிருப்பதாயும் அதுவே தன்னுடைய பரந்த ரஹஸ்யவிசாரகாலத்தில் தனக்கு உபகாரகமாச்சுதென்றும் அதை பலபடியாகவும் புகழுகிறார். அதில் நாதமுனிகள் திருவவதாரகாலம் 3224 என்றும், அவர் 330 வருஷம் எழுந்தருளியிருந்தாரென்றும், அவருடைய சிஷ்யரான உய்யக்கொண்டார் 3027ல் நாதமுனிகள் அவதாரத்துக்கு முன்பே அவதரித்தாரென்றும் அவரிருந்தகாலம் 105 வருடமென்றும், அவர் சிஷ்யரான மணக்கால்

நம்பி 3900ல் அவதரித்தாரென்றும் அவரிருந்தகாலம் 105 வருடமென்றும் ஸந்தேஹமற எழுத்தால் எழுதப்பட்டிருக்கிறது. இதை நன்கு பராமர்சித்தால் உய்யக்கொண்டார் பரமபதித்த சுமார் 90 வருஷத்திற்குப் பிறகு நாதமுநிகள் அவதரித்ததாக ஏற்படுகிறது. அஹோ என்ன ஆராய்ச்சி! மணக்கால்நம்பி அவதாரத்தைப் பராமர்சித்தால் உய்யக்கொண்டார் பரமபதித்த 763 வருடத்திற்குப் பிறகு மணக்கால்நம்பி அவதாரமென்று ஏற்பட்டிருக்கிறது. இதுவும் ஒரு க்ரந்தமா? இதை எழுதியவர் மணவாளமாமுநிகள் காலத்திலிருந்தவராகச் சொல்லுகிறார் அது சரியாக இருக்கலாம். அதில் பட்டருக்கு எம்பார் பஞ்சஸம்ஸ்காரங்களும் திருவாய்மொழி முதலான க்ரந்தங்களும் ஈடுமுதலான வ்யாக்யானங்களும் ஸாதித்தருளினர்' என்று எம்பார் காலத்திலேயே ஈடு இருந்ததாயும் அவர் அதை பட்டருக்கு காலக்ஷேபம் ஸாதித்ததாகவும் சொல்லியிருக்கிறது. இது அபத்தகளஞ்சியம் என்பதற்கு இதைக்காட்டிலும் வேறொன்றை உதாஹரிக்கவேண்டுமா?

நலந்திகழ் நாரணஜீயர்சரித்ரத்தில் இவருக்குத் திருத்தகப்பனர் எம்பார் என்று எழுதப்பட்டிக்கிறது. இந்த க்ரந்தமும் ஒரு ப்ரமாணமா? எம்பார் வைபவத்தில் அவர் அத்யந்த விரக்தராய் ஸ்த்ரீவிமுகராயிருந்ததாகவும் அவருடைய தாயார் உடையவர் மூலமாக ரஹஸ்யவ்யாபாரவைமுக்யத்திற்கு காரணம் கேட்டதாயும் அதற்கு அவர் எனக்கு ஸர்வதா பகவான் ஜ்யோதிர்மயனாய் ஸர்வத்ர ப்ரகாசிக்கையால் ரஹஸ்யமென்பதே ஒன்று கிடையாதென்று சொல்லி ஸ்வல்பகாலத்தில் ஸந்யஸித்துக்கொண்டதாக வ்யக்தமாக இருக்கிறது. இவரோ நலந்திகழ்நாரணஜீயருக்கு அவரை பிதாவாக எழுதுகிறார். பெரியபட்டருக்கு நலந்திகழ்நாரணஜீயர் ஶிஷ்யரென்பதும் எம்பார் பிதா என்பது போலேயே மித்யை யென்றே முடியும். அந்த களஞ்சியத்திலேயே நலந்திகழ்நாரணஜீயருக்கு கூரநாராயணஜீயர் ஸ்ரீரங்கநாராயணஜீயர் என்று திருநாமங்கள் சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய பெரியஜீயரென்று பெயரிருப்பதாகச்சொல்லவில்லை. இந்த வக்ரபுத்தியான ஆராய்ச்சிக்காரர் அதில் பட்டர் ஶிஷ்யராகச் சொல்லப்பட்ட நலந்திகழ் நாரணஜீயரே பெரியஜீயராக இருக்கலாமென்று ஊஹிக்கிறார். குருபரம்பரையில் நஞ்சீயரான பெரிய ஜீயர் என்று நஞ்சீயரையே பெரியஜீயராகவ்யக்தமாகச்சொல்லியிருப்பதை புரக்கணித்துநலந்திகழ்நாரணஜீயர் நஞ்சீயரைவிடவயதில் பெரியவராயிருக்கலாமென்று ஊஹிப்பது எவ்வளவு ப்ராமாணிகமென்பதை ப்ராமாணிகர்கள் நோக்கவும்.

மேலும் அந்த களஞ்சியத்தில் நலந்திகழ்நாரணஜீயர் பண்ணிய க்ரந்தங்கள் உபநிஷத்கூரநாராயணபாஷ்யம், ஸ்தோத்ர வ்யாக்யானம், ஸுதர்சனசதகம் என்று மூன்று என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படி இருக்க நலந்திகழ்நாரணரை பெரியஜீயராக்கி ஸ்ரீஸூக்தபாஷ்யமும் ஓர் ஆஹ்நிகமும் அவராலே செய்யப்பட்டிருக்கலாமென்று இந்த வக்ரபுத்தியான ஆராய்ச்சிக்காரர் யோஜித்துச் சொல்வது பொருந்துமா? நலந்திகழ்நாரணஜீயரே ஆஹ்நிககர்த்தாவாக ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷையில் ஸ்ரீதேசிகன் எடுத்த நாராயணமுநியாய் பெரியஜீயருமாகில் நலந்திகழ்நாரணஜீயரால் செய்யப்பட்டதாக களஞ்சியத்தில் சொல்லப்பட்ட ஈஶாவாஸ்யோபநிஷத் பாஷ்யத்திலும் ‘ஸ்ரீவராஹதேஶிகாய ஶரணம் ஸம்ப்ரபத்யே’ என்கிறதுபோல் பராசரபட்டர்விஷயமாக மங்களச்லோகாதிகள் காணவேண்டுமே; அதில்லாமையாலும், ப்ரத்யுத ‘யஸ்யாவாக்யாம்ருதம் ஸாஹஸ்ரம் ஸம்ஸாரம் விஷம் நாஶயேத் । நாராயணாய தஸ்மை யஜ்ஞஹாஷ்யஞ்சகாரஸ்ய ப்ரஸாதாத் । வேதாந்தாசார்யவர்யாய யஜ்வநே ப்ரதிபதவே । யதீந்த்ரவேதாந்தஸார யஜ்வந் ஶ்ரீவத்ஸாங்கஸ்ய பூஜிதஃ’ என்று ஸ்ரீதேசிகனுடைய ஈஶாவாஸ்யோபநிஷத்பாஷ்யாநுஸாரித்வமும் வேதாந்ததேசிகசரணத்யாநநிர்மலசேதஸ்த்வமும் சொல்லப்பட்டிருப்பதால் ஈஶாவாஸ்யோபநிஷத்பாஷ்யகர்த்தாவான கூரநாராயணஜீயர் ஸ்ரீதேசிகபக்தராயும் ஸ்ரீதேசிகருக்குப பிற்பட்டவருமான கூரவாஸியாயி

ருந்த ஒரு நாராயணஜீயரென்றே ஏற்படுமே யொழிய பட்டர் சிஷ்யரான நலந்திகழ்நாரணஜீயரென்று அத்யந்த வக்ரபுத்திக்கும் ஊஹிக்கமுடியாது. இங்கு புதுயமன் பழையயமன் என்று கதையில் சொல்வதுபோல் இரண்டு கூரநாராயணஜீயர் இரண்டு ஈஸாவாஸ்யோபநிஷத்பாஷ்யம் என்று கல்பித்து ஊஹிப்பதெல்லாம் அத்யந்தாப்ராமாணிகமாகையால் ப்ராமாணிகர்களால் இந்த ஆராய்ச்சி தூரதோ நிரஸநீயம்.

ஆனால் இப்படிப்பட்டவர்களின் ஆராய்ச்சியால் அவர்களுடைய ஸம்ப்ரதாயத்திற்கு ஹாநிவருமேயன்றி ஸம்ப்ரதாயத்தை ஸ்தாபித்ததாகாது. வஸ்துதத்வமிப்படியிருப்பதால் நாம் முதலில் சொன்னபடி ஸ்ரீஸூக்தபாஷ்யத்தின் உபாந்திமச்லோகத்தையும் ஸ்ரீதேசிகனுடைய 'எம்பெருமானைச் சொன்ன விடத்தில் பிராட்டியையும் சொல்லிற்றும் என்று தொடங்கி உடையவர் அருளிச்செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்சீயர் ஸங்க்ரஹித்தார்' என்கிற ஸ்ரீஸூக்தியையும் ஏககண்டமாக்கி ஸ்ரீஸூக்தபாஷ்யகர்த்தா நஞ்சீயரென்றே ப்ராமாணிகபண்டிதர்கள் நிச்சயித்துக்கொள்ள வேண்டியது. அவருக்கே நஞ்சீயரான பெரியஜீயர் என்று தென்கலை குருபரம்பரையில் இருப்பதையொட்டி 'அபேக்ஷிதார்த்தமெல்லாம் ஸ்ரீஸூக்தபாஷ்யத்தில் பெரியஜீயருபபாதித்தார்' என்கிற ஸ்ரீஸூக்தியில் சொல்லப்பட்டபடி பெரியஜீயரென்று திருநாமமாகையால் ஸ்ரீஸூக்தபாஷ்யம் நஞ்சீயராலே செய்யப்பட்டதென்பதே ஸமீசீனமான நிர்ணயம். இப்படி ஸ்ரீஸூக்தபாஷ்யம் நஞ்சீயராலேயே செய்யப்பட்டதென்று ஏற்பட்டபடியால் அந்த பாஷ்யத்தில் சொல்லும் அர்த்தங்களுக்குவிருத்தமாக பின்பட்டவர்கள் எவர்கள் சொல்லியிருந்தாலும் அது ஸத்வஸ்தர்களான ப்ராமாணிகர்களுக்கு உபாதேயமாகாதென்பதை ப்ராமாணிகர்களே பராமர்சித்துக்கொள்ள வேண்டும்.

199534

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

நந்தன வருஷ ஆடிமீ-1952வருஷ ஜூலை-ஆகஸ்ட் மீ

[தக்ஷிணாயனம் க்ரீஷ்ம ருது - கடகமீ]

16—7—52	1உ	புதன்கிழமை	...	சூன்ய திதி; ஆடிப்பண்டிகை
17—7—52	2உ	வியாழக்கிழமை	...	சூன்யதிதி ஸர்வ ஏகாதசி.
18—7—52	3உ	வெள்ளிக்கிழமை	...	த்வாதசிதிதி ஹரிவாஸரம்22-5
21—7—52	6உ	திங்கட்கிழமை	...	● ஸர்வ அமாவாஸ்யை.
22—7—52	7உ	செவ்வாய்க்கிழமை	...	புஷ்யம் ஸ்ரீ அஹோபிலமடம் 36-வது
				பட்டம் ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
25—7—52	10உ	வெள்ளிக்கிழமை	...	சதுர்த்தி திதி. ஆண்டாள் திருவாடிப்பூரம்.
26—7—52	11உ	சனிக்கிழமை	...	பஞ்சமி திதி.
27—7—52	12உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஷஷ்டி திதி.
31—7—52	16உ	வியாழக்கிழமை	...	தசமி-திதி;
2—8—52	18உ	சனிக்கிழமை	...	த்வாதசி திதி. ஸர்வ ஏகாதசி.
4—8—52	20உ	திங்கட்கிழமை	...	*ஆளவந்தார் திருநக்ஷத்ரம்.
5—8—52	21உ	செவ்வாய்க்கிழமை	...	த்விதீயாத்யுபாகர்மா. சந்த்ரக்ரஹணம்.

6—8—52	22உ	புதன்கிழமை	...	காயத்ரீ ஜபம்
10—8—52	26உ	ஞாயிற்றுக்கிழமை	...	பஞ்சமி ஷஷ்டி திதித்வயம்.
14—8—52	30உ	வியாழக்கிழமை	...	கடகக்ருஷ்ண தசமி திதி.
15—8—52	31உ	வெள்ளிக்கிழமை	...	கடகக்ருஷ்ண ஏகாதசி திதி.
16—8—52	ஆவணி 1உ	சனிக்கிழமை	...	அதிதி ஸர்வ ஏகாதசி, ஸிம்ஹரவி 22-29 (இன்று ஸங்கரமண தர்ப்பணம்)

குறிப்பு—இந்த வருஷம் ஆடி மாதம் 21ந்தேதி செவ்வாய்க்கிழமை பௌர்ணமி திருவோண நக்ஷத்ரத்தில் பார்ச்வ சந்த்ரக்ரஹணம். இரவு 13. 39. நாழிகைக்கு (12-3 மணி) ஸ்பர்சம் ஸம்பவிக்கிறது. அன்றையதினம் செய்யவேண்டிய பௌர்ணமி திதி ச்ராத்தம் மறுநாள் செய்யவேண்டும். நிர்ணயஸிந்துவில்—‘[illegible]’ என்று சொல்லி அதற்கு ப்ரமாணமாக ‘[illegible]’ என்றும் வைத்யநாததீக்ஷிதீயத்திலும் ‘[illegible]’ என்கிற ச்லோகத்தை யெடுத்து அதற்கு வ்யாக்யானமாக ‘[illegible]’ என்று யாமபரமாகவே அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. க்ரஹணயாமத்திலிருந்து மூன்று யாமம் முன்னதாகவே போஜநத்யாகாசாரமும் லோகத்தில் காண்கிறது. ஆகையால் [illegible] யாமத்தில் க்ரஹணம் ஸம்பவித்தால் திவா [illegible] யாமத்திலும் [illegible] க்ரஹணம் ஸம்பவித்தால் [illegible] போஜனம் செய்யவேண்டியது. அந்த ஆவர்தனபூர்வகாலத்திற்கு ச்ராத்தகாலத்வஸம்பாவனையே இல்லாமையால் ச்ராத்தம் அனுஷ்டிக்கக்கூடாது. அன்று மறு தினமே அனுஷ்டிக்கவேண்டும்.

இதற்கு மாறாக ஸ்ரீரங்கம் பஞ்சாங்கத்தில் நாடிபரமாக அர்த்தங்கொண்டு அன்றே ச்ராத்தாநுஷ்டாநம் பண்ணலாமென்று சொல்லியிருப்பது உசிதமாகத்தோன்றவில்லை.

(145ம் பக்கத்தொடர்ச்சி)

அடிப்படையாக உள்ளது. அதினுடைய முக்யதோற்றம் ஆஸ்திக்யத்தையும் மதப்பற்றுதலையும் ஆதாரமாக உள்ளது. அவைகளை நாம்கையாடிக்கொண்டிருந்தவரையிலும் நமக்கு ஸுகக்குறைவுகள் ஏற்படவில்லை. அவைகளை விட்டதுமுதல் பற்பல தீங்குகளுக்கு ஆளாய்க்கொண்டு வருகிறோம். மேல்நாட்டார்களுக்கு மொத்தமாக மதப்பற்றுதலே இல்லை என்று சொல்லலாம். அவர்களுடைய ஸம்பந்தம் நமக்கு ஏற்பட்டுவிட்டபடியால் அவர்கள் போகும் வழியிலேயே நம்மையும் இழுக்கிறார்கள். அதற்குடன்படாமல் அதனால் உண்டாகும் தீமைகளை நிவர்த்திசெய்துகொண்டு நம்முடைய நாகரீகத்தைக் காப்பாற்றிக்கொள்வது நமது முக்ய கடமையாகும். அதிலுள்ள குணங்களையும் நாம் ஒப்புக்கொண்டு ஆதரிக்கவேண்டும்.

இந்த விஷயத்தை அடியிற்கண்டபடி பலபிரிவுகளாகப் பிரித்துக்கொண்டு ஒவ்வொன்றையும் விவரமாக ஆராய்ந்து பார்த்து அவைகளில் நாம் எப்படி திருத்திக்கொண்டு நடந்து வந்தால் நன்மை விளையுமென்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. மத உணர்ச்சி அல்லது மதப்பற்றுதல்.
2. கல்வி. 3. ஆஹாரம்.
4. நடை உடை பாவனைகள்.
5. குடும்பவாழ்க்கையும் ஸமூகப்பழக்கங்களும்.
6. தேசத்தொழில்கள், பொருள்கள் உற்பத்தி
7. யந்த்ரஸாதனங்கள் [வ்யாபாரம்முதலியன.
8. அரசாங்கமும் ராஜீயமுறைகளும்.
9. சட்டதிட்டங்கள்.
10. வர்ணாச்ரம தர்மம்.

Regd.No. M. 4437

கலியாண ஸமாஜம்

பம்பாய் ஸ்ரீ க்ருஷ்ண ஸபை ஆதரவில் நடந்துவரும் ஸ்ரீ க்ருஷ்ண பத்ரிகை மூலமாக 'கலியாண ஸமாஜம்' என்று ஒரு ஸ்தாபநம் நடந்துவருகிறது. இந்த ஸமாஜத்தின் முக்யநோக்கம் வரவதூக்களுக்காக அலைந்துகொண்டு ஏராளமாய்ப் பணச்சிலவு செய்யும் மாதாபிதாக்களுடைய கஷ்டங்களை யதாசக்தி நிவர்த்திசெய்வதுதான். தரகர்கள்போல் பணம் பறிக்கிற உத்தேசம் கொஞ்சமேனுமில்லை. இதுவிஷயமாய் ஏற்படும் கடிதப்போக்குவரத்துச் சிலவுக்காகமட்டும் ஸ்வல்பபணம் வாங்கிக்கொள்ளப்படுகிறது. கல்யாணயோக்யகாலம் வருவதற்குமுன்னமேயே வரவதூக்களுடைய ஜாதகங்களை இந்த ஸமாஜத்தில் ரிஜிஸ்டர்செய்துவைத்தால் அப்போதைக்கப்போது கிடைக்கும் ஜாதகங்களையும் விவரங்களையும் கவனித்து கலியாணங்களை நிச்சயம் செய்துகொள்ளலாம்.

இந்த ஸமாஜத்தின் உதவியினால் மாதாபிதாக்களுக்குக் கலியாண விஷயங்களில் விசேஷ உபாகாரமும்; வரவதூக்களுக்குக் காலம் அதிகமாக அதிக்ரமிக்காமல் கலியாணங்கள் நடத்த ஸௌகரியமும் உண்டு.

இந்த ஸமாஜஸம்பந்தமாக வேண்டிய விவரங்களை ஸம்பாதகர், ஸ்ரீக்ருஷ்ண, 421, பவுதாஜி ரோட், மாதுங்கா பம்பாய்-19. (Editer, SRI KRSHNA, 421. Bhaudaji Road, BOMBAY-19) என்ற விலாஸத்திற்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

READ

"SRI NRISIMHAPRIYA"

HINDI MONTHLY JOURNAL

OF

SRI AHOBILA MUTT

Annual Subscription Rs **2.**

For copies apply to:—

The Manager,

"SRI NRISIMHAPRIYA"

SRI ACHARYA PITH,

BAREILLY (U. P.)

Printed by J. RANGACHARIAR, Srikaryam, Sri Ahobila Mutt, at Malola Press, 30, Panagal Street, Tiruvallore.
Edited and Published by P. S. SrinivasaDesikachariar, M.A. B.L., No. 2, Audiyappa Mudali Street, Vepery, Madras 7.